www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**போதாது: கையழகைப் பாடுதற்கு!**

போதாது நம்தமிழில் பொதிந்துள்ள சொற்களினிப்
போதாதென் றாகிப் போயினபின் – மேதினியில்
கந்தரையும் சுட்டுவிட்ட கையழகைப் பாடுதற்கு
எந்த மொழி உண்டு இனி!

-ஈழமோகம்

இதழ் 63 ஜன.12 - ஜன.25, 1995 விலை 7/=

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு:

● தேசிய சுயநிர்ணய உரிமை ● வட கிழக்கு இணைப்பு

# 'அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டும்'

### ந.ச.ச.க தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன

**நாட்டின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானால் அது வடக்கு கிழக்கை தமிழ் மக்களின் தாயகம் எனவும் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு எனவும் அரசியல் அமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்படும் போது மட்டுமே சாத்தியமாகும். தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கில் அவர்களுக்கு பூரண சுயாட்சி உரிமை வழங்கப்படுவதும் அச்சுயாட்சி அமைப்பில் அவர்களது தேவைக்கு உகந்த அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதும் அவசியம் ஆகும் என்று தெரிவிக்கிறார் இலங்கை நவசமசமாஜக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண.**

சரிநிகருக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டி ஒன்றின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது, இத்தகைய அரசியல் தீர்வு ஒன்றின்போது வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு அம்பாறை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சுயாட்சி உள்ளமைப்பு வழங்கப்படுவதுடன் இவ்வுள்ளமைப்பில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் ஏனைய பிரதேசங்களும் இணைக்கப்பட வேண்டும். சிங்கள மக்கள் வடகிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் வாழ்வது போன்ற நிலையை அவர்களுக்கும் உருவாக்குதல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

***கலாநிதி விக்கிரமபாகுவின் பேட்டி உள்ளே.(பக்:6)***

## ஒலுவில்:
# துறைமுகம் பூர்த்தி கப்பல் இன்னும் வரவில்லை

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் வர்த்தக, கப்பல்துறை அமைச்சராக இருந்த, கப்பலை பழுதுபார்க்க தெரியாது என்ற ஒரே காரணத்திற்காக பதவி எடுக்கப்பட்டு வர்த்தக, வாணிப அமைச்சரான மன்சூர் அவர்கள் அக்கால கட்டத்தில் மட்டக்களப்பு - பொத்துவில் ரயில்பாதையின் கதாநாயகனாக இருந்தார். பிறகு, இவர் சவூதியில் இருந்து வருகின்ற பேரீத்தம் பழங்களின் கதாநாயகனாக மாறினார். இன்று மாஜி அமைச்சரின் முகவரியே இல்லை.. இது அன்றைய ஐ.தே.க ஆட்சியில் இருந்த முஸ்லிம் அரசியலின் சாணக்கியம்.

இன்று அதற்கு நிகராக உருவெடுத்தவிடயம் ஒலுவிலில் துறைமுகம்

→16

# மலையகத்தில் மீண்டும் பயங்கரவாதப் பிரச்சாரம்

மலையகத்தில் சிறிது காலம் மௌனமாகியிருந்த பயங்கரவாதப் பிரச்சாரம் மீண்டும் திட்டமிட்டு கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

இதன் உடனடி விளைவாக கடந்த இரண்டு மாதங்களாக மலையக நகரங்களான ஹட்டன், டிக்கோயா பகுதித் தோட்டங்களைச் சேர்ந்த ஒரு டசனுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பயங்கரவாத முலாம் பூசப்பட்டு இருவேோடிரவாக்க் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

1989/90ம் ஆண்டுகளில் ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் இவ்வாறான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டமையின் விளைவாக நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் (தோட்டப் பகுதி) இளைஞர்கள் காணமல் போய்விட்டார்கள். ஆண்டுகள் பல கடந்தும் இவர்கள் பற்றிய எவ்வித விபரங்களையும் பெற முடியாதவர்களாக இவ்விளைஞர்களின் பெற்றோர் உள்ளனர்.

இவ்விளைஞர்கள் விடயத்தில் மனித உரிமைகள் பற்றியும் அரசியல் அத்துமீறல் பற்றியும் வாய் கிழியப்பிதற்றும் அரசியலாளரும் சரி, மனித உரிமையாளர்களும் சரி எவ்வித மூச்சும் விட்டதாகத் தெரியவில்லை.

நவம்பர் மாத ஆரம்பத்தில் எட்டு மலையக இளைஞர்கள் அட்டன் பகுதித் தோட்டங்களில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டார்கள். இவர்களிடம் துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் இருந்ததாகவும் இவர்கள் ''மலையக விடுதலை முன்னணி'' என்ற பெயரில் விடுதலைப்புலிகளின் துணைப்படையாக உருவாக்கப்பட்ட ஒரு இயக்கம் எனவும் 16.11.1994 வெளிவந்த 'லங்காதீப' பத்திரிகை முன்பக்கத்தில் வெளியிட்டு பிரச்சாரப்படுத்தியுள்ளது. 15.11.1994 'ஐலன்ட்' பத்திரிகையும் தன் முன்பக்கச் செய்தியாக ''மலையகத்தில் புதிய பயங்கரவாதக் குழு'' எனத் தலைப்பிட்டு L.T.T.E யின் வழிகாட்டலுடன் மலையக தோட்டப்பகுதியை தனிநாடாக்குவதற்கு இக்குழு (முயன்றது'' என பிரச்சாரப்படுத்தியுள்ளது. இது இவ்வாறிருக்க ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையின் வாரப்பதிப்பான ''சண்டே ஒப்சேவர்'' 20.11.1994 இல் பாதுகாப்பு அறிக்கை என்ற தலைப்பில் ''மலையகம் புலிகளின் இன்னொரு முன்னணியாக மாறுமா?'' என வினவியுள்ளதுடன் செப்டெம்பர் மாதம் 14ம் திகதி பொகவந்தலாவ லெட்சுமி தோட்ட வேலை நிறுத்தத்தையும் அதிகாரிளை தடுத்து வைத்ததையும் வெலிஓயா தோட்ட வேலை நிறுத்தத்தையும் தொடர்பு படுத்தி இவ்வாறான அதிகாரிகளை தடுத்து வைக்கும் நடவடிக்கைக்கு பயங்கரவாதப் பின்னணி இருப்பதாகக் காட்ட முற்பட்டுள்ளது.

இவற்றுக்கு வக்காலத்து வாங்குவது போல லங்கா தோட்ட தொழிலாளர் யூனியன் பிரமுகரான முகைதீனும் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் ஐயாத்துரையும் அறிக்கைள் வெளியிட்டுள்ளனர். திருவாளர் ஐயாத்துரையவர்கள் தமது அறிக்கையில் ''தோட்ட அதிகாரிகளை அடைத்துவைத்து தடுப்பு நடவடிக்கைளில் ஈடுபடுவது தொழிற்சங்க நடவடிக்கையல்ல'' என குறிப்பிட்டு, விசமிகள் தான் இதற்குக் காரணம் எனக் குறிப்பிடுகிறார்.

சக்திமிக்க மலையக பாட்டாளிவகுப்பிற்கு அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கப் போராடுவதற்கு பதில் அற்ப சலுகைக்காக அவர்களை விலைபேசிவருவதனால் எழுந்த புரட்சிகர மனப்பான்மை காரணமாக மலையகப் பாட்டாளிகள் தம் வேலைநிறுத்தம் என்ற ஆயுதத்துடன் ''தடுத்துவைத்தல்'' என்ற உத்தியையும் வளர்த்தெடுத்துள்ளனரே தவிர அவர்கள் எந்த விசமங்களுக்கும் ஆற்படவில்லை. இவ்வாறு தடுத்து வைக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் தோட்டத் தொழிலாளர் உட்பட நாட்டின் அன்றாட நிகழ்வாகிவிட்ட பொறுப்பான பாட்டாளிகள் ''பயங்கரவாதிகள்'' என்ற முத்திரை குத்த இவர்கள் முயல்கின்றார்களா?. இந்தத் தடுத்து வைத்தல் ஒரு தொழிற்சங்க நடவடிக்கையாக கூட இல்லாமல் இருக்கலாம். ஆனால் தம் கையாலாகாத தனத்தால் பாட்டாளிவகுப்பிற்கு மலையக அரசியல் தொழிற்சங்க வியாபாரிகள் மாற்றுவழிகாட்டவில்லை. தம் நலன்களுக்கும், பதவிகளுக்குமாகப் பேரம் பேசும் இந்தத் தொழிலாளர் தலைவர்கள் தான் தொழிலாளரை காட்டிக் கொடுக்குமாற்போல் இவ்வாறு பேசுகின்றனர்.

இப்போது மலையகத்தில் நடக்கின்ற அரசியல் கைதிகள், பயங்கரவாதப் பூச்சாண்டி பற்றி எந்த மலையக அரசியல்வாதியும் கண்டிக்கவில்லை, அல்லது கண்டு கொள்ளவே இல்லை. பல ஆண்டு சிறைவாசம் செய்து வெந்தணல் தாண்டி வந்தவர்கள் கூட மௌனமாய் இருப்பதானது மலையகத்தில் சிந்திக்க கூடிய படித்த, முற்போக்கு எண்ணம் கொண்ட தலைமுறையை அழித்துவிட துணைபோகும் செயல் என்பதில் சந்தேகமில்லை.

ஹோமியோபதி வைத்தியரான சாந்தகுமார் உட்பட பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருவதானது மலையக இளைஞர் மத்தியில் பதற்றத்தையும், பீதியையும் அதிகரிக்கச் செய்துள்ளது திடீர், திடீரென இரவில் சிவிலுடையில் வருவோர் கண்களைக் கட்டி இளைஞர்களை காவிச் செல்வது நல்ல சகுனமல்ல.

இந்நிலையில், கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட எந்த மலையக இளைஞனாவது பயங்கரவாதி என நிறுவப்படவில்லை.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னொரு அரசியற் படுகொலை?

- தவநாதன்

வழமைபோல் அன்றும் 'கந்த சாமி அங்கிள்' வீட்டில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம் (கரவை கந்த சாமி அவர்கள், தமிழ் அரசியல் வட்டாரத்தில் அவ்வாறுதான் அழைக்கப்பட்டார் - கந்தசாமி அங்கிள்). கடக்கும் வருடத்தின் துயரங்களுக்கு விடை கொடுத்து வரப்போகும் வருடத்தை மகிழ்வு டன் வரவேற்கும் நாள் அது; டிசம் பர் 31ம் நாள். அந்த நாள் அவர்க ளின் வாழ்விலும் மறக்க முடியாத



ஒரு நாள், ஏனென்றால், அது கந்த சாமி அங்கிளின் மகனின் பிறந்த நாளும் கூட. அன்றைய தினம் அவர் தனது அடுத்தாண்டு கனவு கள் பற்றி குடும்பத்தினருடன் பேசிக் கொண்டிருந்தார்.

54ஆம் வயதை நெருங்கிவிட்ட அங்கிள் அடுத்தவருடம் தனது 60ம் கல்யாணத்தையும் 40வருட அரசியல் வாழ்க்கையும், நினைவு கூர்ந்து விமரிசையாக விழாக் கொண்டாடுவது, இறுதி வருடத் தைப் பூர்த்தி செய்யும் தனது மக னின் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை கண்டுகளிப்பது என்பன அவர் கண்ட கனவுகளில் சில .

குடும்பத்தாரின் அன்றைய அகம கிழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும் கூட தான் சரி என நம்பிய தனது அரசியல் வாழ்வின் பணிகளையும் அவர் மறந்து விட வில்லை. அன்றும் கூட மாலை கூட் டணிக் காரியாலயம் சென்று தமிழ் அமைப்புக்களின் ஒற்றுமை பற்றி வலியுறுத்தி கலந்துரையாடல் ஒன்றை நடாத்திவிட்டு வந்திருந் தார்.

தனது அரசியல் வேலைகள், மக னின் பிறந்ததின கொண்டாட்டங் கள், குடும்ப உரையாடல்கள் எல் லாவற்றையும் கிரமமாக முடித்து விட்டு வீட்டின் முன் மண்டபத்தில் தொலைக்காட்சியைப் பார்த்தபடி தான் வழமையாக அமரும் சுவர் மூலையில் அங்கிள் வந்து அமர்ந்து கொண்டார்; ரூபவாகி னிச் செய்தியின் பின்பு ஒலிபரப்பா கும் சிங்கள நாடகங்களை வீட்டா ருக்கு மொழி பெயர்த்துக் கூறி ரசித்த

தவண்ணம் அவர் அமர்ந்திருந்தார்.

இரவு 8.25மணி இருக்கும் திடீ ரென மின்சாரம் நின்றுவிட்டது. 'வ சந்தா லைற் நின்றுவிட்டது. ரோச் லைற்றை கொண்டுவா' என்றார் அங்கிள் தனது மனைவியை விழித்து. 'ஏன் எல்லா இடமும் லைற் இருக்குது எங்கள் வீட்டில் மட்டும் லைற் இல்லை' எனக் கூறிய வண்ணம் அறைக்குள்

நுழைந்தார் வசந்தா அன்ரி. வாச லிலே யாரோ வந்து நிற்பது போல தோன்றியது அங்கிளுக்கு. 'அங் கிள் எழுந்து நின்றபடி 'யார் அது? யாரைத் தேடுகிறாய்' என்று கேட்ட வண்ணம் வாசல்புறம் பார்த்தார். துப்பாக்கி ஏந்திய ஒரு மனிதன் அவர் முன்னால் நின்றான். அதற் குள் அங்கிள் வாசலை நோக்கி நகர்ந்திருந்தார். அங்கிள் யாரு டனோ பேசுவது கேட்டு திரும்பிய அன்ரியும் அவனை கண்டார். ஆயினும், அன்ரி எதையும் சிந் திக்க முதலே துப்பாக்கி வெடித்தது. அங்கிள் நிலத்தில் சாய்ந்தார். ஐயோ ஐயாவைச் சுட்டுவிட்டார் கள் என்று கத்தினார் அன்ரி. சமை யல் அறையில் நின்ற மகள் ஜெய பாரதி ஐயாவுக்கு என்ன என்று கத் தியபடி முன்மண்டபத்தை நோக்கி ஓடி வந்தாள். தான் இனம் காணப்பட்டாலும் என்ற அச்சத்தி னாலோ என்னவோ கையில் வைத் திருந்த கிரனைட்டைக் கழட்டி எறிந்தான் அந்த துப்பாக்கி மனி தன். கிரனைட் பாரிய சத்தத்துடன் வெடித்தது. மகள் பாரதி கண்ணாடி யன்னலுக்கருகில் தூக்கி எறியப் பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந் தாள். மறுபுறம் வசந்தா அன்ரியும் தூக்கி எறியப்பட்ட நிலையில்.

வீட்டில் இருந்தவர்கள் கூக்குரல் போட்டார்கள் 'யாராவது வாருங் கள், இவர்களை வைத்தியசாலைக் குக் கொண்டுசெல்வதற்கு' என்று. ஆனால் எவருமே வரவில்லை. எட்டு மணிக்கு வருவதாகக் கூறிச் சென்ற பாரதி மோகன் சைக்கிள் காற்றுப் போனதால் 8.45ற்கே சைக் கிளைத் தள்ளிக் கொண்டு வந்து

சேர்ந்தார். வீட்டை நெருங்கிய போதே கூக்குரல் சத்தங்கள் காதைத்துளைத்தன, வாசலில் நுழைந்தவுடன் வழமைக்கு மாறாக வீடு இருளில் மூழ்கியிருந்தது, வீதி யின் வெளிச்சத்தில் தகப்பனும் தன் தங்கை பாரதியும் இரத்த வெள்ளத் தில் கிடந்ததை கண்டு திகைத்தார். ஒருவாறு பாரதியையும் தூக்கி வாடகை ஓட்டோ ஒன்றில் ஏற்றி களுபோவில வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார். அங்கு அங்கி ளின் உயிர் பிரிந்துவிட்டது. மகளை உடன் கொழும்பு பெரிய வைத்தியசாலைக்கு கொண்டு செல் லுமாறு கூறினர். அவசர சத்திரசி கிச்சைப் பிரிவில் மகள் சேர்க்கப் பட்டு மூன்று நாட்களின் பின் சுயநி னைவைப் பெற்றார். தொடர்ந்து வைத்தியசாலையில் அவருக்கு சிகிச்சை நடைபெற்று வருகிறது.

40வருட அரசியல் வரலாற்றைக் கொண்ட கந்தசாமி அங்கிளின் வாழ்வு தமிழ் அமைப்புகளின் ஒன் றிணைவு பற்றிய பேச்சுவார்த்தை யுடன் 94ம் ஆண்டின் இறுதி நாளாக 31ம் நாள் முற்றுப்பெற்று விட்டது. அவரது கொலையே அவ்வாண்டின் இறுதி அரசியல் படுகொலையாகவும் அமைந்து விட்டது. அந்தநாள் மாற்றுக் கருத்

துகளுக்கும், மாற்று சிந்தனைகளுக் கும் மீண்டும் ஒரு முறை வெடி வைக்கப்பட்ட நாளாக வரலாற்றில் பதியப்பட்டுவிட்டது.

கந்தசாமி அங்கிளின் வீட்டு வாச லோடேயே ஒழுங்கையைப் பார்த் தபடி வீட்டுக்கான பிரதான மின்னி ணைப்பு ஃபியூஸ் போட ப்பட்டிருக் கிறது. வீதியால் போகும் போதே இலகுவில் காணக்கூடியதாக இது இருக்கிறது. மதில் மீது ஏறி சத்தம் செய்யாமல் முற்றத்தில் குதித்த கொலைகாரன் ஃபியூஸை பிடுங்கி விட்டு வாசலுக்கு வந்திருக்கிறான். கந்தசாமி அங்கிளின் வழமையான கைங்கரியங்களை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டே அவன் நிதா னமாக வந்து தனது காரியத்தை முடித்திருக்கிறான்.

உயரமான மதில் ஆகையாலும் அங்கிளின் வீட்டில் எப்போதும் சனங்களுக்குக் குறைவே இல்லை என்பதாலும் மதில் தாண்டி ஓடும் போது தான் அகப்படவோ அடை யாளம் காணப்படவோ கூடும் என் பதால்தான் அவன் கிரனைட்டைக் கழட்டி வீசிவிட்டு சென்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.


அரசியலில் அவர் சார்ந்திருந்த புளொட் இயக்கத்தினர் இக் கொலை புலிகளால் செய்யப்பட்ட ஒன்றே என்று கூறுகின்றனர்.

ஆயினும், இது அவரது அணிக் குள்ளேயே ஏற்பட்ட முரண்பாடுக ளின் காரணமான ஒன்றே என்று தம்மை இனம் காட்ட விரும்பாத மற்றைய தமிழ் அரசியல் கட்சிக ளின் முக்கிய பிரமுகர்கள் தெரிவிக்

→15

# துப்பாக்கியால் கொல்லப்பட்ட சுதந்திரம்!

எஸ்.எஸ்



1995ம் ஆண்டு பிறப்ப தற்கு சில மணி நேரங்களின் முன் மின்சாரத்தை துண்டித்துவிட்டு வீட்டிற்குள் புகுந்த ஆயுதம் தாங் கிய இளைஞன் ஒருவனால் திரு.க ரவை கந்தசாமியின் உயிர் பறிக்கப் பட்டுவிட்டது. தமிழ் மக்களின் விடுதலை தொடர்பாக திரு.கந்த சாமி அவர்கள் கொண்டிருந்த கருத் துக்கள் சரியானவையா பிழையா னவையா என்பதைவிட விடுதலை யின் மீது ஆர்வம் உள்ள ஒவ்வொ ருவரும் கருத்துச் சுதந்திரம் எப்படி யெல்லாம் யாரால் தண்டிக்கப்படு கிறது என்பதை ஆராயவேண்டி யது அவசியமாகும். தமிழ் மக்க ளின் ஆயுதம் ஏந்திய போராட்டம் ஆரம்பமாவதற்கு பல ஆண்டுக ளுக்கு முன்னரே வர்க்க விடுதலை யின் பால் ஆர்வம் கொண்டு தன்னை ஈடுபடுத்திக் கொண்ட திரு.கந்தசாமி கிட்டத்தட்ட 40ஆண்டுகளை தனது வாழ்நா ளில் அரசியலுக்கு அர்ப்பணித்த ஒரு மனிதர். திரு.கந்தசாமியின் இப்படுகொலையானது தமிழ் மக்க ளுக்கு புதியதோ அன்றி அதிர்ச்சி யைக் கொடுக்கக்கூடியதோ அல்ல. ஏனெனில், கடந்த பத்து ஆண்டுக ளுக்கு மேலாக இப்படியான அரசி யல் சகோதர படுகொலைகளுக்கு மக்கள் பழக்கப்பட்டுவிட்டார்கள். இதன் அர்த்தம் இக்கொலைகளை அவர்கள் அங்கீகரிக்கிறார்கள் என் பது அல்ல. மாறாக இக்கொலைக ளுக்கு குரல் கொடுத்தால் தமது உயிர்களுக்கு ஆபத்து வந்துவிடும் என நம்புகின்றனர். அதனால் அப் படிக் குரல் கொடுப்பவர்களை ஆத ரிக்கக்கூட மறுக்கின்ற அரசியல் கலாசாரத்தில் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

இப்படியான படுகொலைகள் பற்றி இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தி யில் பேசப்படுவதோ, பேசஅனும திக்கப்படுவதோ இல்லாமல் போயிற்று. சொந்தக் குடும்பத்தி னரை தவிர மற்றையவர்கள் எவ ரும் கண்டுகொள்ளாதவர்கள் போல வாழும் ஓர் கொடிய மனநி லையில் எமது சமுதாயம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இச்சூழ்நிலை மாற்றப்பட வேண்டும்; இப்படு கொலைகள் நிறுத்தப்பட வேண் டும். கொலைக்கலாசாரம் மாற்றப் பட்டு ஜனநாயக நம்பிக்கை உடைய ஒரு சமுதாயத்திற்காக நாம் போராட வேண்டும். தனி நபர் கள் படுகொலையூடாக ஒரு சமுதா யத்தை படுகுழியில் தள்ளுவதற்கு நாம் சாட்சிகளாகிவிடக்கூடாது. மௌனமாகவும், தெரியாதவர்கள் போலும் இருந்த காலம் போதும். தடுத்து நிறுத்துவோம் படுகொலை களை. மனம் திறந்து பேசுவோம். விடுதலை பற்றிய கொலை கலாசா ரத்தை தடுப்பதற்கு நம் உயிரையே னும் கொடுத்துப் போராட நாம் முன்வரவேண்டும். **''உன்னுடைய கருத்து எனது கருத்தை விட மாறு பட்டதாக இருந்த போதும் அக்க ருத்தை கூறுவதற்கான உனது உரி மையை பெற்றுத் தருவதற்கு எனது உயிரைக்கூட கொடுத்துப் போராடுவேன்''** என ஒரு புரட்சி கர எழுத்தாளன் கூறியதை இங்கு நினைவு கூர விரும்புகின்றேன். சிங்கள சோவனிஸ அரசின் அடக்கு முறையின் உச்சக்கட்டத் தில் வெடித்தெழுந்த தமிழ் விடுத லைப் போராட்டமானது அடக்குமு றைகளையும் சுரண்டல்களையும் உடைத்தெறிந்து சாதிகளற்ற சமத் துவ சமுதாயத்தை உருவாக்கு வோம் என விடுதலை இயக்கங்க ளும் தமிழர்களும் நம்பினர், கனவு கண்டனர்! விடுதலையின் தேவை யையும் போராட்ட அவசியத்தை யும் உணர்ந்து கொண்ட இளைஞர் குழாம் தமிழ் மக்களுக்கு இவை பற்றி தெளிவாகக் கூறி மக்களின் பாரிய ஆதரவை திரட்டத் தவறிய தும், பொடியன்கள் போராடுவார் கள் எனத் தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் ஒதுங்கிக் கொண்ட தும், அவ்வப்போது எழுந்த சமு தாய இயக்க உள் முரண்பாடுகளை ஆயுதத்தினால் தீர்வுகாண முற் பட்ட போது மௌனமாக இருந்தன் விளைவுமே இன்றைய இவ்வு ரிமை கோரப்படாத படுகொலை கள் .

விமர்சனங்கள் மாற்றுக்கருத்துக் கள் சுயவிமர்சனங்கள் என்ப வற்றை நேர் கொள்ள முடியாமல் கோழைகள் போல் பயந்து ஒடி இருட்டினிலே வந்து துப்பாக்கிக் குண்டுகளால் பதில் கூறுபவர்கள் மக்கள் விரோதிகள் மட்டுமல்ல, சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட வேண்டியவர்களும் ஆவர். ஆயுத கலாசாரத்தால் ஆட்கொள்ளப் பட்டு தனிநபர் வழிபாடுகளும், சுயவிருப்புவெறுப்புக்களுக்கும் குழுவாதத்திற்கும் முன்னுரிமை கொடுத்து நடந்து கொண்டிருக்கும் இப்போர்ச் சூழலில் மீண்டும் மீண் டும் நாம் மௌனிகளாக இருந்தால் ஜனநாயகம், ஐக்கியம், விடுதலை என்ற சொற்கள் எமது அகராதியில் இருந்து அகற்றப்பட்டுவிடும். கடந்த கால செயற்பாடுகளை விமர் சனத்துக்கு உள்ளாக்கி, மாற்றுக்க ருத்துக் கொண்டோரையும் அங்கீக ரித்து உட்கட்சி ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து செயற்படாத எவரும் குறுகிய காலத்தில் வெற்றியை நிலைநாட்டினாலும் வரலாற்றில் மக்களால் இவர்கள் நிராகரிக்கப் பட்டே தீருவார்கள். இது வரலாறு காட்டிய உண்மை. தங்களுடைய உயிரைப்பணயம் வைத்து போரா டுகின்ற ஒவ்வொரு போராளியின் தியாகங்களுக்கும் தலைவணங்கு கின்ற இவ்வேளையில் இத்தியா கங்கள் வேறுசிலரின் சுயதேவைக ளுக்காகவோ அல்லது பழிவாங்க லுக்காகவோ பயன்படுத்தப்படும் போது எமது குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ஒரு ஜனாதிபதி? இரு பிரதமர்கள்?

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான தாக்குதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்துவிட்டது. கடந்த சனியன்று அமுலுக்கு வந்த இவ்வொப்பந்தத்தின் பின் இக்குறிப்பு எழுதப்படும் கணம்வரை எத்தகைய தாக்குதல் சம்பவங்களும் நடைபெறவில்லை என்று அரசுதரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கவென நியமிக்கப்பட்டுள்ள ஆறு கண்காணிப்புக் குழுக்களும் இன்னமும் இயங்கத்தொடங்காவிட்டாலும், தாக்குதல் நடவடிக்கைகள் எதுவும் இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது என்று அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

அரசதரப்பில் இருவரையும் புலிகள் தரப்பில் இருவரையும் கனடா, நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளை சேர்ந்த ஒருவரைத் தலைவராக கொண்டு இயங்கவுள்ள இந்தக்குழுக்கள் ஆறும் மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் நிலைமையை ஆரா

செய்திகள் கூறுகின்றன. ஆயினும் சமஷ்டி (Fedaral) என்ற பதத்தைப் பாவிப்பதில் ஏதாவது சிக்கல்கள் ஏற்படலாம் என்றும், இதை சிங்கள இனவாத சக்திகள் அரசுக்கு எதிராகப் பயன்படுத்த தயங்கமாட்டா என்றும் அரசு தரப்பில் அச்சம் நிலவுவதாகத் தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை, ஜனாதிபதி அவர்களின் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வு திட்டம் தயாரிக்கப்படும் என்ற செய்தியை எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள் என்பது கேள்விக்குறியே. ஏனென்றால், பண்டா - செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்ட காலத்தின் பின்னான கடந்த சுமார் 35 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், இவ்வொப்பந்தத்தை போதாதவையாக்கிவிட்டன. ஏன் 1987ல் எழுதப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் கூட இன்று



இருக்க முடியும் என கருதுவதாகவும் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

இத்தகைய உத்தேச ஒன்றியத்தில் முஸ்லிம், மலையக மக்களது நிலைமை தொடர்பாக இதுவரை எத்தகைய தீர்மானமும் எடுக்கப்படவில்லையென்றும், இன்னமும் இவ்வுத்தேசத் திட்டம் பருமட்ட அளவிலான நிலையிலேயே உள்ளது எனவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், சமஷ்டி முறையானது மிகவும் விரிந்த அர்த்தம் உள்ளது என்பதால் இது தொடர்பான தெளிவான விபரங்கள் வெளியிடப்படமுன் அவற்றின் வெற்றி தோல்வி குறித்து எதுவும் சொல்வதற்கில்லை.

தற்போது நடைமுறைக்கு வந்திருப்பது தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு மட்டுமே. இது அரசியல் தீர்வு குறித்த தீர்மானம் ஒன்று எடுக்கப்படுவதற்கு அடிப்படையான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துமே ஒழிய இதுவே தீர்வாக அமைந்து விடாது. இன ஐக்கியத்தைப் பேணவல்ல அரசியல் தீர்வு முயற்சிகள் இந்த சுமூகநிலை வழங்கியுள்ள வாய்ப்பான நிலைமையின் கீழ் அக்



> உத்தேச குடியரசுகளின் ஒன்றிய அமைப்பின் கீழ் (Confedaration) ஸ்ரீலங்கா, தமிழீழம் என இரு குடியரசுகள் அமையும். இவை இரண்டும் இரண்டு பாராளுமன்றங்களைக் கொண்டிருக்கும். இவற்றிற்கு தனித்தனியாக இருவேறு பிரதமர்கள் இருப்பர். ஒன்றியத்தின் தலைவராக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இருப்பார். இத்தகைய



யும்; தமது பணியை செய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச தரப்பிலும், புலிகள் தரப்பிலும் தத்தமது படைத்தளபதிகளுக்கு தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த ஒப்பந்தத்துடன் கூடவே பாதை திறப்பு, சோதனைச்சாவடிகளில் கெடுபிடி குறைப்பு, அதிரடிப் படையினருக்குப் பதில் பொலிசார் கடமையேற்பு, பிரபாகரனுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு போன்றவைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் வருகையோடொட்டி உருவாகியுள்ள இந்த நிலைமை இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை தரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒற்றையாட்சி முறையின் அடிப்படையில் சாத்தியமில்லை என்பதை அரசு தரப்பினர் தெளிவாக உணர்ந்துள்ளார்கள் என்றும், ஒற்றையாட்சி முறைமைகளுக்கு பதில் ஒருவகை கூட்டாட்சியே (Unified) பொருத்தமானது என்று ஜனாதிபதி அவர்கள் தெரிவித்திருப்பதாகவும் அரச தரப்பு

போதுமான ஒரு தீர்வாக கொள்ளப்பட முடியாத சூழலே நிலவுகிறது. தவிரவும் பண்டா - செல்வா ஒப்பந்தம் பேசாத வடக்கு கிழக்கு இணைப்பு இன்று ஒரு முக்கிய நிபந்தனையாக மாறியும் விட்டிருக்கிறது.

ஆயினும், பண்டா - செல்வா ஒப்பந்தத்தை அடிப்படையாக

> ஒரு தீர்வுத்திட்டம் சரிவருமானால், ஸ்ரீலங்கா பௌத்த குடியரசாக இருக்கும் அதேவேளை தமிழீழ குடியரசு ஒரு இன, மதச்சார்பற்ற குடியரசாகவும் இருக்கும் .

**பா.கந்தசாமி**

கொண்ட தீர்வுத் திட்டம் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு இப்போதைக்கு எதுவும் சொல்லமுடியாது என்றும், பாரிய அதிகாரப் பங்கீடுகளை தாம் செய்ய தயாராக இருப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்பதால் நடக்கப் போவது என்ன என்பது குறித்தே எந்த முடிவுக்கும் வரமுடியும் என்றும், வடக்கிலுள்ள புத்திஜீவிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. இதே வேளை, புலிகள் தரப்பில் இருவேறு சுதந்திர அரசுகளின் ஒன்றியம் என்ற அளவிலான ஒரு அரசியல் அமைப்பு பற்றிய எதிர்ப்பார்ப்பும் நிலவுவதாக சில செய்திகள் கூறுகின்றன.

இச்செய்திகள் மேலும் தெரிவிப்பதாவது: இவ்வுத்தேச குடியரசுகளின் ஒன்றிய அமைப்பின் கீழ் (Co-nfedaration) ஸ்ரீலங்கா, தமிழீழம் என இரு குடியரசுகள் அமையும் எனவும் இவை இரண்டும் இரண்டு பாராளுமன்றங்களைக் கொண்டிருக்கும் என்றும் இவற்றிற்கு தனித்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இருப்பார் என்றும் ஒன்றியத்தின் தலைவராக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இருப்பார் எனவும் கூறப்படுகிறது. இத்தகைய ஒரு தீர்வுத்திட்டம் சரிவருமானால், ஸ்ரீலங்கா பௌத்த குடியரசாக இருக்கும் அதேவேளை தமிழீழ குடியரசு ஒரு இன, மதச்சார்பற்ற குடியரசாகவும் இருக்கும் என்றும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை யாழ்பல்கலைக்கழகத்தின் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய புலிகளின் அரசியல் பிரமுகரான திரு.ஆஞ்சநேயர் அவர்கள் குடியரசுகளின் ஒன்றியம் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையில், இது பற்றி தாம் தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும், இதுவே இப்போதைக்கு பொருத்தப்பாடான தீர்வாக


கறையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த முயற்சிகள் பின்வருவனவற்றைக் கணக்கிலெடுத்து செய்யப்படுமானால் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

- தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.
- இலங்கை அரசை ஒரு மதச்சார்பற்ற அரசாக அறிவித்தல்.
- வடக்கு கிழக்கில் நடைபெற்ற, நடைபெறும் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்பாக ஒரு தெளிவான முடிவு எடுக்கப்படல்; இத்தீர்மானம் இனங்களை பிரதேச ரீதியில் சிறுபான்மையினராக்கும் நிலமையை இல்லாதொழிப்பதாக அமைய வேண்டும். (உதாரணமாக, அரசின் குடியேற்ற கொள்கைகள் தேசிய இனங்கள் ஒவ்வொன்றினதும் பாரம்பரிய நிலங்களில் அக்குறிப்பிட்ட தேசிய இனத்திற்கே முன்னுரிமை வழங்கப்படுவதாக அமைய வேண்டும்.)
- அரசின் எல்லா உயர்மட்ட ஸ்தாபனங்களிலும் எடுக்கப்படும் தீர்மானங்களில் தேசிய இனங்களின் நலன்கள் பாதிப்புறாவண்ணம் இருக்க, அவ்வினங்களது அதிகார மையங்களது அங்கீகாரத்தைப் பெறுவது நியதியாக்கப்படல் வேண்டும்.

www.tamilarangam.net



## வாசகர் சொல்லடி



# ஒதுக்கப்பட்ட நிதி எங்கே?

1994ம் ஆண்டு மட்டக்களப்பு உன்னிச்சைக் குளத்திலிருந்து சிறுபோக வேளாண்மை செய்து சரியான முறையில் நீர்ப்பாசனம் கிடைக்காததால், நஷ்டமடைந்த விவசாயிகளில்' நானும் ஒருவன் என்ற வகையில் நீர்ப்பாசனத் திணைக்களம் பற்றியும் அதன் மேலதிகாரிகளின் தில்லுமுல்லுகள் பற்றியும் தங்கள் பத்திரிகை மூலமாக நியாயம் கோரலாம் என நினைக்கின்றேன்.

1994ம் ஆண்டு சிறுபோக வேளாண்மைச் செய்கைக்கான ஆரம்பக் கூட்டம் 30.01.1994 அன்று காலை 10 மணியளவில் அரச அதிபர் திரு.மோனகுருசாமி தலைமையில் மட்டக்களப்பு 'வில்லியம்ஸ்'' மண்டபத்தில் கூடியது. இக்கூட்டத்தில் 1993ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டும் கடந்த ஏழு வருடங்களாக திருத்தப்படாமலுமிருக்கும் ஆறுகள் வாய்க்கால்களை திருத்திச் செப்பனிட வேண்டும் எனவும் இதற்கென திணைக்களத்திலுள்ள இரண்டு இலட்சம் ரூபா போதாதெனவும் பிரிகேடியர் ரொகான் குணவர்த்தனா ஜனாதிபதி நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபா பெற்றுத் தருவதாகவும் அடுத்த கூட்டம் ஆயித்தியமலை நீர்ப்பாசன பணிமனையில் ஆராயப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, 01.02.1994 அன்று பிரிகேடியர் ரொகான் குணவர்த்தன தலைமையில் உன்னிச்சை குள நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தி வேளாண்மை செய்யப்படும் பகுதிகளைச் சேர்ந்த விவசாய பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டு, ஒருசில விவசாயிகளும் கலந்து கொள்ள கூட்டம் கூடியது. இதில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

05.03.1994க்கு முன் முறிவுகள் திருத்தப்பட்டு தண்ணீர் திறந்து தருவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் ஒப்புக் கொண்டது.

20.03.94இல் தொடங்கி 05.04.1994ந் திகதிக்கு முன் நெல் விதைப்பு யாவும் முடிவடைய வேண்டும்.

ஆனால் 05.05.1994க்கு பின்பே தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதனால் ஆறுகள் மூலம் நீர் பெறப்பட்டு விதைப்பு 20.05.1994க்குப் பின்பே ஆரம்பமானது.

வாய்க்கால்கள் மூலம் நீர்பெறப்பட்டு காட்டு முள்ளாமுனைக் கண்டம் 15.06.94க்கு பின்பே விதைப்பு தொடங்கியது. (இதில் இவ்வாய்க்கால்கள் அப்பகுதி விவசாயிகளின் சிரமதான அடிப்படையிலான பணி மூலமே திருத்தியமைக்கப்பட்டு நீர் எடுத்து வரப்பட்டது.)

ஒதுக்கப்பட்ட நிதி விபரம்:-

1. வலதுகரை வாய்க்கால் பராமரிப்பு -265,000.00
2. முறிவுகள் திருத்தியமைக்க - 285,000.00
3. இடதுகரை வாய்க்கால் பராமரிப்பு -760,000.00
4. ஆற்றுப் பாய்ச்சல் 05 கண்டத்துக்கு - 635,000.00

ஆனால், ஆற்றுப் பாய்ச்சல் வேலைகள் சுமார் 360,000.00 ரூபாவிற்கு மட்டுமே ஓரளவு வேலைகள் நடைபெற்றதனைக் காண முடிந்தது. எனவே ஏனைய ஒதுக்கப்பட்ட நிதியின் நிலை என்ன? எங்கே?

இந்த வேலைகள் நடைபெறாததனால் காட்டுமுள்ளா முனைக் கண்ட விவசாயிகள் 100% நஷ்டமும், மகிழவட்டவான் கண்டம் 75% நஷ்டமும், பாவற்கொடிசேனை 50% நஷ்டமும் அடைந்தனர் என்பது உண்மை. இந்த விவசாயிகளின் நஷ்டத்துக்கு யார் காரணம்? நீர்ப்பாசன திணைக்களம் உரிய வேலைகளை முடித்துக் காட்ட தீர்மானப்படி நடந்து கொள்ளாததேயாகும்.

எனவே இதற்குப் பொறுப்பான நீர்ப்பாசன திணைக்கள மேலதிகாரிகள் இதற்கான காரணங்களை தெரிவிப்பதுடன் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈட்டினையும் வழங்க வேண்டுமெனவும், எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

**பே.பிரபாகரன்**
**மட்டக்களப்பு**

பி.குறிப்பு

வலதுகரை வாய்க்கால் முறிவுகள் நீர்ப்பாசன திணைக்கள உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க அப்பகுதி விவசாயிகளில் க.கனகசுந்தரம் (சண்முகசுந்தரம்), சி.கதிர்காமப்போடி, க.ஆறுமுகம், சோ.யோகானந்தராஜா, க.யோகராசா ஆகியோரைக் கொண்டு கட்டி முடிக்கப்பட்டது. இச் செலவினங்களை ஈடு செய்யும் பொருட்டு ரூபா ஒன்றரை (1 1/2) இலட்சம் பணம் பெறப்பட்டுள்ளது. ஆனால் இங்கு வேலை செய்தவர்களுக்கு இற்றைவரைக்கும் இப்பணத்தில் ஒருபகுதியேனும் வழங்கப்படவில்லை. எனவே இப்பணம் எங்கே? யாருடைய கையில் அல்லது யாருக்கு வழங்கப்பட்டது?

நடந்து முடிந்த ஒரு சில வேலைகளும் அவ்வப்பகுதி விவசாய பிரதிநிதிகள் மூலமாகவே நடைபெறுவதாக இருந்தும், நீர்ப்பாசன திணைக்கள உயரதிகாரிகளின் சொந்த நலன் கருதி தவிப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் மூலமாகவே அரைகுறையாக முடிக்கப்பட்டு பணம் பெறப்பட்டிருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. இது ஏன் இப்படி நடந்தது? கூறுவார்களா?

# நான் அவனில்லை!

சரிநிகர் டிசெம்பர் 22 - ஜனவரி 11 என்ற தேதியிடப்பட்ட இதழ் 62இல் 'ஜனநாயக்க கட்சி விதியும் அதே இயக்க விதி தானா?' என்ற தலைப்போடு 4ம் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த செய்தி வாசித்த போது எனக்கு பேரதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது.

அதிர்ச்சி செய்தியை படித்தமையால் ஏற்பட்டதல்ல. புலிகள் தவிர்ந்த சகல தமிழ் அமைப்புக்களையும் தாங்கள் துணிச்சலாக விமர்சித்து வருவதை நான் அறிவேன். புலிகளைப் போல் அல்லாமல் அந்த அமைப்புக்களும் விமர்சனங்களை வரவேற்பதனால் பத்திரிகை சுதந்திரம் தங்களுக்கு இனிப்பாக இருக்கிறது.

ஆனால், அந்தச் செய்தியில் ஒரு கட்சியை விமர்சித்துவிடும் அவசரத்தில் தங்கள் கண்கள் மூடிவிட்டன. 4ம் பக்கத்தில் இருக்கும் குறிப்பிட்ட செய்தியின் மத்தியில் ஒரு படம் வெளியிட்டுள்ளீர்கள். அந்த படத்தை கண்ணுற்றதும் தான் எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

பெரிய படம் ஒன்றும் அதன் உள்ளே சிறிய படம் ஒன்றும் வெளியிட்டுள்ளீர்கள். அந்த சிறிய படத்தில் தலையில் தொப்பியோடு இருப்பது 'சாட்சாத்' நானேதான்.

அந்தப் படத்தை கண்ணுற்ற எனது உறவினர்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுவிட்டன. நான் இறந்து விட்டதாக சிலரும், எனக்கும் தாங்கள் செய்தியில் குறிப்பிட்டுள்ள சம்பவத்திற்கும் தொடர்பிருக்குமோ என்று வேறு சிலரும் நினைக்க வைத்து விட்டீர்கள்.

ஐயாத்துரை ஸ்ரீரங்கதாஸ் ஆகிய நான் உயிரோடு இருக்கிறேன். குறிப்பிட்ட செய்தியில் எனது படமும் இடம் பெற்றதால் மனமுடைந்துள்ளேன். எனக்கும் அந்த செய்தியில் தாங்கள் குறிப்பிட்டுள்ள விடயத்திற்கும் இடையே ஒரு தொடர்பும் கிடையாது - என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனது இக்கடிதத்தை சரிநிகர் இதழ் 63இல் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

''வாழ்க பத்திரிகைச் சுதந்திரம்''

முக்கிய குறிப்பு:- நான் உயிரோடு இருப்பதை தாங்கள் அறிய விரும்பினால் உடன் எனது முகவரியோடு தொடர்பு கொள்ளுங்கள். நேரில் வந்து சமூகமளித்து தங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் தீர்த்து வைக்கலாம்.

**ஐ.ஸ்ரீரங்காதாஸ்**
**கொழும்பு - 7**

***கொல்லப்பட்ட நபர் தாங்கள் சார்ந்துள்ள கட்சியில் இருந்தவர் என்பதாலும், இருவருடைய முகச் சாயல் ஒன்றாக இருந்ததாலும் இவ்வாறான ஒரு தவறு நேர்ந்துவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்; தங்களுக்கு இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மனம் வருந்துகிறோம் - ஆர்-***




தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்களும் கைச்சாத்திட்டு வெளியிடப்பட்ட போர் தவிர்ப்பு பிரகடனத்தின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

புலிகளுக்கும் அரசுக்குமிடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான போர் தவிர்ப்பை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விபரங்கள் வருமாறு:

**1.** இக்காலப்பகுதியில் இரு சாராரில் எவராலும் தாக்குதல் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது. இவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படுமிடத்து அவை ஒப்பந்த மீறல்களாக கருதப்படும்.

**2.** புலிகளும் அரசும் தாம் இன்று நிலைகொண்டிருக்கும் பகுதிகளில், ஆக குறைந்தது 600 மீற்றர் இடை தூரத்தை இருவரது நிலைகளுக்கு மிடையில் பேணும் விதத்தில் நிலைகொண்டிருப்பர். ஆயினும் இருதரப்பாரும் தமது பாதுகாப்பரண்களில் இருந்து 100 மீற்றர் தூரம் வரை முன்னோக்கி நகர முடியும். இடையில் 400மீற்றர் இடைத்தூரம் யாரும் பாவிக்காத இடமாக இருக்கும். இதற்குள் வருவது ஒரு தாக்குதல் நடவடிக்கையாக கருதப்படும்.

**3.** விமானப்படையும், கடற்படையும் வெளியார் ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டின் இறைமையையும், பிராந்திய பாதுகாப்பையும் பேணும் தமது சட்ட பூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். ஆயினும், புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எவற்றிலும் ஈடுபடவோ, தெரிவு செய்யப்பட்ட இடங்களில் உண்மையான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு தடை விதிக்கவோ மாட்டார்கள்.

**4.** நாசகார நடவடிக்கை, குண்டு வெடிப்பு, ஆட்கடத்தல், அரசியல் குழுக்கள் கட்சிகள், தனிநபர்கள் மீதான எந்தவகையான மிரட்டல்களோ, படுகொலைகளோ குற்ற நடவடிக்கைகளாகக் கருதப்படும்.

**5. அ.** ஒப்பந்த மீறல்கள் தொடர்பாக கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கென நியமிக்கப்படவுள்ள குழுக்கள் எல்லா ஒப்பந்த மீறல்களையும் கண்காணிக்கும். இக்குழுக்கள் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலும், தேவைப்படின் பிற இடங்களிலும் நியமிக்கப்படும்.

**ஆ.** இக்குழுக்கள் இருதரப்பின் எத்தரப்பாரது சார்பாக்வேனும் ஏதாவது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டாலும் அவற்றை உடன் விசாரித்து தீர்ப்பதனை தமது கடமையாகக் கொண்டிருக்கும்.

**இ.** கனடா, நெதர்லாந்து, நோர்வே, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகள் அல்லது பொதுசன அதிகாரிகள், மதகுருமார்கள் மற்றும் தலைமைப் பிரஜைகள் ஆகியோரைக் கொண்டதாக அமையும்.

**ஈ.** எல்லாக் கண்காணிப்புக் குழுக்களும் ஐந்து பேரினைக் கொண்டதாக அமையும்.

அரச தரப்பில் இருவர்
புலிகள் தரப்பில் இருவர்
வெளிநாடு ஒன்றைச் சேர்ந்த ஒருவர் - அவரே குழுவின் தலைவர்

**உ.** இக்கண்காணிப்புக் குழுக்கள் சுதந்திரமாக இயங்குவதற்கு ஒப்பந்தத்திற்கு வந்துள்ள இருதரப்பாரும் உரிய உறுதிப்பாட்டைத்தர வேண்டும்.

**ஊ.** இக்குழுக்களுக்குத் தேவைப்படும் வசதிகள் இருதரப்பாரதும் பரஸ்பர உடன்பாட்டின் கீழ் வழங்கப்படவேண்டும்.

**எ.** அரச பாதுகாப்பு படைகளுக்கும், புலிகளின் பிராந்திய தலைவர்களுக்குமிடையிலான நேரடி தொலைபேசி தொடர்புகளுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதையும், இதன் மூலம் அவர்கள் தம்மளவிலேயே ஏதாவது பிரச்சினைகள் ஏற்படின் தீர்த்துக்கொள்ள ஊக்குவிப்பதும்.

**ஏ.** இந்த ஒப்பந்தம் ஏதாவது ஒரு தரப்பினரால் முறிவடைந்ததாக அறிவிக்கப்படும் வரை அமுலில் இருக்கும். இத்தகைய மீறல் பற்றிய அறிவிப்பு எழுபத்திரண்டு மணி நேரத்திற்கு முன்னதாகவே அறிவிக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| *வேலுப்பிள்ளை பிரபாகரன்* | *சந்திரிகா குமாரணதுங்கா பண்டாரநாயக்க* |
| *தலைவர்* | *ஸ்ரீலங்கா ஜனாதிபதியும், முப்படைத்தளபதியும்* |
| *தமிழீழ விடுதலைப் புலிகள்* | |

* இவ்வரைபு பத்திரிகையாளர் மாநாட்டில் வழங்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர் இவ்வரைபில் சில மாற்றங்கள் செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது. குறிப்பாக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தமது சங்கத்தில் இராணுவ நடவடிக்கைகளில் நிபுணத்துவம் மிக்கவர்கள் இல்லாததால் இச்சமாதான குழுவில் இடம் பெற முடியாது என அறிவித்திருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழக்குப் பல்கலைக்கழகத்தின்
# அமைவிடம்
# அதன் அபிவிருத்தியின் திறவுகோல்

சரிநிகரில் வெளிவந்த 'கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சியும் முஸ்லிம் மாணவர்களும்' என்ற தலைப்பிலான கட்டுரையைப் பார்த்ததும் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் கலைகலாசார பீடத்தில் மூன்று வருடமாக படிக்கின்றவன் என்ற நிலையிலும் இவ்வளவு காலமும் இதனது இயங்குநிலையைப் புரிந்து கொண்டவன் என்ற நிலையிலும் இது சம்பந்தமான சில கருத்துக்களையும் தகவல்களையும் தரலாம் என இதை எழுதுகிறேன்.


இன்று எமது சமூகத்தில் நிலவும் விரும்பத்தகாத ஒரு போக்கு தேசியவாதத்தின் காரணமாக ஏற்பட்ட குறுகிய வாதமாகும். இந்த நிலை எந்தவொரு கருத்தையுமே பேரினவாதம் என்றும், பிரதேசவாதம் என்றும் வகுப்புவாதம் என்றும் குறுக்கி விடுகின்றது. அதற்காக பேரினவாதம், பிரதேசவாதம், வகுப்புவாதம் இல்லை என்றல்ல. ஆனால் ஒரு விரிந்த பார்வையை நாம் நோக்குகின்ற அளவு கோல்களைக் கொண்டு கணிக்கும் போது இது நிகழ்வது தவிர்க்க முடியாத ஒன்றாகவேயுள்ளது. இது கிழக்குப் பல்கலைக்கழக விடயத்திலும் பொதுவான ஒன்றாகவே உள்ளது.

கிழக்குப்பல்கலைக்கழகத்தில் விவசாய, விஞ்ஞான, வர்த்தக முகாமைத்துவ, கலை கலாசார பீடங்கள் என நான்கு பீடங்கள் உண்டு. இவற்றுள் கலை கலாசார பீடமும், வர்த்தக முகாமைத்துவ பீடமும் மட்டக்களப்பில் இலக்கம் 50 புதிய வீதியில் இயங்குகின்றது. விவசாய பீடமும் விஞ்ஞான பீடமும் வந்தாறுமூலையில் இயங்குகின்றது.

சிலர் வர்த்தக முகாமைத்துவ, கலை கலாசார பீடங்களில் மட்டும் தான் முஸ்லீம் மாணவர்கள் கற்கின்றனர் மற்றைய இரு பீடங்களும் அவர்களுக்கு அன்னியமானது என்ற நோக்கில் போலும் வர்த்தக முகாமைத்துவ, கலாசார பீடங்கள் மட்டக்களப்பில்தான் இருக்க வேண்டும் அப்போதுதான் முஸ்லிம் மாணவர்களும் வரலாம் என்று கூறுகின்றனர். அப்படியென்றால் விவசாய, விஞ்ஞான பீட மாணவர்கள் எங்கிருந்து கற்கின்றார்கள் என்பதை மறந்து விடுகின்றனர். சில முஸ்லிம் மாணவிகள் வந்தாறு மூலையில் விடுதியில் கூட உள்ளார்கள் என்பதை அவர்கள் அறியாதது வேதனைக்குரியது.

கலைகலாசார, வர்த்தக முகாமைத்துவ பீடங்களை வந்தாறுமூலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என இப்பீட மாணவர்கள் கூறுவது முஸ்லிம் மாணவர்களின் நலனைக் கவனியாது விட்ட தமிழ் பேரினவாதத்தின் நிலையோ அல்லது றொபட் அவர்கள் குறிப்பிட்ட பொய்ப்பிரச்சாரத்தின் விளைவாக எழுந்த இனவாத கருத்து நிலையோ அல்ல. உள்ளார்ந்த சில காரணங்களுண்டு.

1993ம் ஆண்டு ஆரம்பத்தில் கலை கலாசார, வர்த்தக பீடங்கள் மட்டக்களப்பில் தான் இருக்க வேண்டும் எனவும் அதற்கு நெல்சந்தைப்படுத்தும் சபைக்கு சொந்தமான காணியை வழங்கும் படியும் அதில் சகல வசதிகளையும் ஏற்படுத்தித் தரும்படியும் ஒரு போராட்டம் நடத்தினோம். அதன் விளைவாக



ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா அவர்கள் நெல்சந்தைப்படுத்தும் சபைக்கு சொந்தமான காணியை கிழக்குப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கும் படியும் உத்தரவிட்டார். அதனால் ஆஞ்சநேயர் ஆடைத் தொழிற்சாலைக்கு வழங்குவதற்கு இருந்த ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால் இன்றுவரை நெல்சந்தைப்படுத்தும் காணி காடுபிடித்துப் போயிருப்பதை அனைவரும் அறிவர். அதுமட்டுமன்றி கேட்டுப் போராடிய எந்தவொரு அடிப்படை வசதியுமே குறைந்த பட்சமாவது நிறைவேற்றப்படவில்லை. இன்றுவரை சிங்கள மகாவித்தியாலயத்திலேயே எமது விரிவுரைகளும், மிகக் குறைந்த விடுதி வசதிகளும், ஒரு விளையாட்டு மைதானமோ, ஒரு நூலக வசதியோ, ஒரு சிற்றுண்டிச்சாலையோ, ஒரு மாணவர் பொது மண்டபமோ இல்லாத நிலையில் தான் இவ்விரண்டு பீடங்களும் இயங்குகின்றன. சுருக்கமாகச் சொன்னால் ஒரு பல்கலைக்கழகமாகவே இது இல்லை.

வாழ்க்கை காணப்படுவதால் மாணவர்களிடையான கருத்துப் பரிமாற்றங்கள் இல்லாத நிலை உருவாகிறது. அநேகமாணவர்கள் கிராமப்புறங்களில் இருந்து இப்பீடங்களுக்கு தெரிவாகின்றதால் ஏனைய பல்கலைக்கழகங்கள் பற்றிய அறிவோ அனுபவமோ இவர்களிடம் காணப்படுவதில்லை. ஆதலால் பாடசாலை வாழ்க்கை போன்றே பல்கலைக்கழக வாழ்க்கையையும் கருதிக் கொள்கின்றனர்.

ஒரு பல்கலைக்கழக சூழலுக்காக நாம் எதையாவது செய்வோம் என்றால் அது தங்கள் படிப்பினை குழப்புகின்ற ஒரு செயலாகக் கருதுகின்றார்கள். அவர்கள் கருதுவதற்கேற்பவே எங்கள் அமைவிடம் காரணமாக ஏனைய பீட மாணவர்களுடனான தொடர்பு அற்றநிலை உள்ளதால் அவர்களையும் எமது போராட்டத்தில் உள்ளிழுத்துக் கொள்வது முடியாத காரியமாகவே உள்ளது. கருத்தியல் ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் இது உள்ளது. இதனால் ஏதாவது இரு பீடங்கள் பகிஸ்கரிப்புச் செய்யும் போது நிருவாகம் அதனை மூடிவிட்டு மற்றைய இருபீடங்களையும் நடத்துகின்றது. இதனால் மூடப்பட்ட பீட மாணவர்கள் நிருவாகத்துடன் சரணடைய வேண்டி ஏற்படுகின்றது. இந்நிலை மாணவர்களை இந்த பாடசாலைச் சூழலில் வைத்திருப்பதன் மூலம் நிரு

## சு.சிவரெத்தினம்

இவ்வாறான ஒரு நிலைக்கு பல்கலைக்கழக நிருவாகமும், பல்கலைக்கழக ஆணைக்குழுவும், அரசாங்கமும் காரணமாய் அமைந்தது என்று கூறினாலும் பல்கலைக்கழக அபிவிருத்தியில் புறநிலையான அதன் இயங்கு நிலையை தீர்மானிக்கின்ற மாணவர்களும், ஒரு காரணமாகும் என்பதும் மறுக்க முடியாத ஒன்றாகும். ஏனெனில் மாணவர்களிடையான உறவு மிகவும் அன்னியப்பட்ட நிலையில் உள்ளது. பிழைசன் வகுப்பு முடிவடைந்ததும் எவ்வாறு வீட்டுக்கு போய்விடுகின்றார்களோ அதே

வாகத்திற்கு அல்லது நிருவாகத்தினருக்கு சாத்தியமான ஒன்றாகவே இருக்கின்றது. இந்த நிலையை நாங்கள் கடக்க வேண்டும் என்றால் முதலில் நாம் ஒரு பல்கலைக்கழக சூழலை ஏற்படுத்த வேண்டும். எங்களை எல்லாசக்திகளும் கைவிட்ட நிலையில் இப்பல்கலைக்கழக அபிவிருத்தியையும் சூழலையும் எங்கள் ஒற்றுமை மூலம் சாதிக்க முடியும் என்பது எங்கள் அசைக்க முடியாத நம்பிக்கையாகவேயுள்ளது.

தமாகவும் அதன் தரம் சம்பந்தமாகவும் நாங்கள் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். நாங்கள் பாடசாலைச் சூழலில் படித்து வெளியேறுவதை ஏற்றுக்கொண்டாலும் அதன் பின்பு நாங்கள் எங்கள் வேலைக்கான தேடலில் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுடனே போட்டியிட வேண்டியவர்களாக உள்ளோம். அதில் தரமான கற்பித்தலும், தரமான நூலறிவும் தான் எங்களுக்கு துணையாக இருக்குமே தவிர குறுகிய வாதப் போக்குகள் எந்த விதத்திலும் துணை செய்யப்போவதில்லை. 1987/1988ம் கல்வியாண்டுக்கான வர்த்தக முகாமைத்துவ மாணவர்களில் 22 பேரில், இதுவரை சித்தியடைந்து வெளியேறி உள்ளவர்கள் 7பேராகும். இதேவேளை இவர்களுடன் ஏனைய பல்கலைக்கழகங்களுக்குச் சென்றவர்கள் இத்தனை வருடங்களாக இத்தனை விகிதத்தினர் சித்தியின்றி பரீட்சை எழுதிக் கொண்டிருப்பார்களா? என சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும். இதற்கு மாணவர்கள் அறிவில்லாதவர்கள் அதனால் தான் சித்தியடைகின்றார்கள் இல்லை என்பது விதண்டாவாதமாகும். இது கற்பித்தலில் அல்லது அதன் சூழலில் இருக்கின்ற ஒரு குறைபாடாகவே எண்ணத்தோன்றுகிறது.

கலைகலாசார பீடத்தின் கல்விசார், கல்விசார உத்தியோகஸ்தர்களின் நிலையை இங்கு ஏனைய பல்கலைக்கழக கலைகலாசார பீடங்களுடன் ஒப்பிட்டுத் தருகின்றேன்.

இதில் புவியியல் துறையை எடுத்துக் கொண்டால் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் 2 LECTURER, 1 ASST.LECTURER மட்டுமே உள்ளனர். இதே வேளை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 1 PROFESOR, 3 ASST.PROFESOR, 5 SENIOR LECTURER, 2 LECTURER, 6 ASST.LECTURER, 2 TEMP.TUTOR என ஆகமொத்தம் 19பேர் இருப்பதனைக் காணலாம். நூலக வசதியினைப் பார்த்தால் 600 மாணவர்கள் மட்டக்களப்பில் உள்ளோம் 75 பேருக்கு மட்டுமே இருக்கை வசதிகளுண்டு. கலைகலாசார பீடத்திற்கு மொத்தம் சுமார் 2500 புத்தகங்களுண்டு அதிலும் தமிழில் சுமார் 1000 புத்தகங்களே உண்டு. இவ்வாறான கல்வியியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். இத்தகைய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து எதிர்காலத்திலாவது ஒரு பல்கலைக்கழக சூழலையும் கௌரவத்தையும் ஏற்படுத்தும் முகமாகவே நாங்கள் முதல் கட்டமாக வந்தாறுமூலைக்கு செல்ல வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினைகள் எதையுமே பற்றிப் பேசாதவர்களும் அது எங்கு எப்படியுள்ளது என்பது பற்றியும் அறியாதவர்கள் அதன் அமைவிடம் என்று வந்ததும் பெரிதாக இன அக்கறை காட்டிக் கொள்பவர்கள் இனவாதத்தில் குளிர்காய்கிறவர்களும் அவர்களின் அடிவருடிகளாயுமே இருப்பவர்கள் என்பது எமதுநிலை.

| பல்கலைக்கழகங்கள் | பீடாதிபதி | உதவி. பதிவா. | விரிவுரை.. | உதவி. விரி | தற். உத. விரி. | எழுதுவினை | சுருக்கெழு.. | தட்டெழுத்.. | அலு.வே.வே. | தொழி. தட்ட.. | சிற்றூழியாட்.. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிழக்குப்பல்கலைக்கழகம் | 1 | - | - | - | - | 1 | 1 | - | - | - | 1 |
| கொழும்பு | 1 | 1 | - | 2 | 2 | 3 | 2 | - | - | 1 | 6 |
| பேராதெனிய | 1 | 1 | 6 | - | 16 | 2 | 2 | - | 1 | - | 10 |
| ஸ்ரீஜெயவர்த்தனபுர | 1 | 1 | - | - | - | 2 | 1 | 1 | - | - | 2 |
| களனிய | 1 | 1 | - | - | 6 | 6 | 2 | - | - | - | 7 |
| யாழ்ப்பாணம் | 1 | 1 | - | - | 3 | 2 | 1 | - | - | - | 7 |
| ருகுணு | 1 | 1 | 1 | - | 3 | 2 | 1 | 1 | - | - | 3 |

### கிழக்குப்பல்கலைக்கழகம்

| துறைகள் | பேராசிரியர் | இணைப் பேரா. | சிரேஷ்ட விரி. | விரிவுரையாளர் | உதவி. விரி. | தற்காலிக விரி. | போதனாசிரியர் | ஆராய்ச்சி உதவியாளர் | நிலப்பட வியலாளர் | தற். உத. ஆய்வா. | கணனி இயக்குநர் | புள்ளி விபரப் பதி | எழுதுவினைஞர் | சுருக்கெழுத்தா.. | தொழில் நுட்ப.. | அலு. வேற். வேல. | தட்டெழுத்தாளர் | ஆய்வு கூட உதவி. | ஊழியாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொழியியற்துறை | - | - | 4 | 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கவின்கலைத்துறை | - | - | 1 | 1 | 1 | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| இஸ்லாமியத்துறை | - | - | 1 | 2 | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 4 |
| சமூகவிஞ்ஞானத்துறை | - | - | 1 | 1 | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| தத்துவம் | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| சமூகவியல் | - | - | - | 2 | - | 3 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| அரசறிவியல் | - | - | - | 2 | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |

### பேராதனைப்பல்கலைக்கழகம்

| துறைகள் | " | " | " | " | " | " | " | " | " | " | " | " | " | " | " | " | " | " | " |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்த்துறை | 1 | 2 | 2 | 2 | 1 | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | - |
| சமூகவியற்துறை | - | 1 | - | 8 | | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | 1 |
| புவியியற்துறை | 3 | 3 | 4 | | | - | - | - | - | - | - | - | 1 | - | 3 | - | - | 3 | 2 |
| சமூகவிஞ்ஞானத்துறை | 1 | 2 | 1 | 2 | | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | - |
| பொருளியற்துறை | 1 | - | | | | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | 1 |
| சமூகவிஞ்ஞானத்துறை | 1 | 2 | 4 | 4 | 2 | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | 1 |
| [illegible] | | | | | | | | | | | | | | | | | | | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# “தேசிய இனங்களது சுயநிர்ணய உரிமை அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்!”

**கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன**
*ந.ச.ச.க பொதுச்செயலாளர்*

**இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?**

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் போது தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது என்பது அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்படவேண்டும். இதன் அடிப்படையில் வடக்கு - கிழக்கு, தமிழர்களின் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். அத்தாயகத்தில் அவர்களுக்கு முழுமையான சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும். அச்சுயாட்சி அரசிற்கு அவர்களின் தேவைக்கேற்ற அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும். நிதி மூல வளங்களைப் பொறுத்தவரையிலும் தேவையான அளவு நிதி வழங்கல் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்தல் வேண்டும்.

ஆனால் சந்திரிகா அரசு தமிழர்களின் தாயகக் கோரிக்கையை ஏற்கவில்லை, அவர்களுக்கான சுயாட்சி அமைப்பை ஏற்கவில்லை, அவர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்பதை ஏற்கவில்லை. இதனாலேயே தமிழர்களுக்கான சரியான அரசியல் தீர்வை அவர்களால் வைக்க முடியவில்லை.

**வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்கள் பற்றி.......**

முஸ்லிம் மக்களுக்கு அம்பாறை மாவட்டத்தை அடிப்டையாகக் கொண்ட ஓர் சுயாட்சி உள்ளமைப்பு வழங்கப்பட வேண்டும். இச்சுயாட்சி உள்ளமைப்புடன் வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் ஏனைய பிரதேசங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

சிங்கள மக்களுக்கு வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் வாழ்வது போன்ற நிலையை உருவாக்குதல் வேண்டும்.

**சில அரசியலமைப்பாளர்கள் சிங்கள மக்களின் பிரதேசங்களை அருகிலுள்ள சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து விடலாம் என கூறுகிறார்கள் அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

இது தீர்வு முயற்சியின் போது கலந்துரையாடி தீர்க்கப்படுகின்றவிடயம். சிங்கள மக்கள் அவ்வாறு விரும்புவார்களாயின் அவ்வாறான ஒழுங்குகளைச் செய்லாம்.

**தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், அவர்களின் நடவடிக்கைகள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசியவாத முதலாளித்து கட்சி. அவர்கள் தமது வழியில் பிரிவினையை நாடி நிற்கின்றார்கள். அவர்கள் ஒரு முதலாளித்துவ கட்சியான படியால் அவர்களால் ஒரு போதும் சோஷலிஸத்தை கொண்டு வர முடியாது. இனப்பிரச்சினைக்கு அரசு சரியான தீர்வினை முன்வைக்காவிட்டால் அவர்களே வெல்லுவார்கள். அவ்வாறு அவர்கள் வெல்லுவார்களாயின் சர்வாதிகார ஆட்சியையே அவர்கள் மேற்கொள்வார்கள்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் முதலாளித்துவ அமைப்பாக இருந்தாலும் அவர்களின் போராட்டம் நியாயமானது. இடதுசாரிகள் என்றவகையில் அரசுக்கு எதிரான அவர்களின் போராட்டத்தை நாம் ஆதரிக்க வேண்டும்.

**புலிகள் அரசுக்கு யுத்தநிறுத்தம், போக்குவரத்துப் பாதையை திறத்தல், அகதிகளை மீளக் குடியேற்றுதல், கடல் வலயத்தடையை நீக்குதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்கள் அது பற்றி யாது கூறுகின்றீர்கள்?**

இக்கோரிகைகள் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள். இந்த உரிமைகளை அரசு மீறியுள்ளது. இந்நிலையில் புலிகளின் இக்கோரிக்கைகளுக்கு எதுவித நிபந்தனையுமில்லாத ஆதரவினை நாம் வழங்குதல் வேண்டும்.

**இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு புலிகளே இன்று தடையாக உள்ளார்கள் என அரசாங்கத்தை சேர்ந்தவர்களும், தென் இலங்கை புத்திஜீவிகள் சிலரும் குற்றம் சாட்டி வருகின்றார்களே அது பற்றி யாது கூறுகிறீர்கள்?**

இக்குற்றச்சாட்டு ஒரு அபத்தமான குற்றச்சாட்டு. இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசிடம் நேர்மையில்லை. அரசிடம் இது தொடர்பாக நேர்மை இருக்குமாயின் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை முன்வைத்திருப்பார்கள். அவ்வாறு ஒரு தீர்வை முன்வைத்து அதனை தமிழ் மக்கள் ஏற்று புலிகள் ஏற்கவில்லையானால் அது தொடர்பாக தமிழ் மக்கள் புலிகளுடன் பேசிக் கொள்வார்கள். அதற்குப் பின் பிரச்சினை புலிகளுக்கும் தமிழ் மக்களுக்குமே தவிர புலிகளுக்கும் அரசுக்கும் அல்ல.

**மலையக' மக்கள் மத்தியில் வளர்ந்துவரும் மலையக தேசிய வாதம் பற்றியும், மலையகத்துக்கான அதிகார அலகு கோரிக்கை பற்றியும் யாது கூறுகின்றீர்கள்?**

ஒரு இனம் தொடர்ச்சியாக ஒடுக்கப்படும் போது அங்கு தேசியவாதம் வளர்வதும், தேசிய இயக்கம் வளர்வதும் தவிர்க்க முடியாதது. மலையக மக்கள் இன்று மோசமான ஒடுக்கு முறைக்கு உள்ளாகி வருகின்றார்கள். அவர்களுக்கு போதிய கல்வி வசதி இல்லை, காணி இல்லை, வீடு இல்லை, சுகாதார வசதி இல்லை இந்நிலையில் அவர்கள் மத்தியில் தேசியவாத இயக்கங்கள் வளர்வது எதிர்பார்க்கக்கூடியதே. அமைக்கப்பட்ட மாகாணசபைக்குள் மலையக மக்களின் நலன்களைப் பேணக்கூடிய சுயாட்சி உள்ளமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருந்தால் இதனை தவிர்த்திருக்கலாம்.

இடதுசாரிகள் என்ற வகையில் மக்கள் ஆதரவுடன் கூடிய கோரிக்கையாக மலையக தேசியவாத கோரிக்கை வளருமாயின் நாம் அதனை ஆதரிக்க வேண்டும். •

---

# ‘நாளை’



## கலாமோகனின் பிரெஞ்சுக் கவிதைகள்

### புகலிட இலக்கியத்தின் புதிய பரிணாமம்

**-எஸ்.மணிவண்ணன்**

பிரெஞ்சு மொழியையே தனது கவிதை மொழியாக் கொண்ட கலாமோகனுடைய ‘‘நாளை?’’(ET DEMAIN) என்ற பிரெஞ்சுக் கவிதைத் தொகுப்பு 10.12.1994 அன்று சனிக்கழமை பாரிசில் நடைபெற்ற பிரெஞ்சு சுதந்திரவிழாவொன்றில் வெளியிடப்பட்டுள்ளது. இங்கு வந்து ஐரோப்பிய மொழிகளைப் படித்து மொழிபெயர்ப்பு கவிதைகளைச் செய்தவர்களை விட ஒரு ஐரோப்பிய மொழியிலேயே கவிதைகள் படைக்கப்பட்டு கவிதைத் தொகுதி ஒன்றும் வெளிவந்திருந்தது இதுவே முதல் தடவை ஆகும். அகதி வாழ்விற்குள் எழுத்துக்களை அடையாளமாய் தூக்கி நிறுத்தி இருக்கும் கலாமோகனின் இப்படைப்பு இலக்கியத்துறைக்கு ஆழமான வேரோட்டமாய் நிற்பதை அவதானிக்க முடியும்.

கோலாஜ் (Collage) பாணி வண்ண முகப்புப்படமுமாய் அசத்திவிடும் அட்டைப்படத்துடன் ஆரம்பமாகும் இத்தொகுப்பானது 27 கவிதைகளை அடக்கியுள்ளது. இவை பிரெஞ்சு சஞ்சிகை ஒன்றில் வெளிவந்திருப்பதோடு, இக்கவிதைத் தொகுப்பில் இறுதியாக இடம்பெற்றுள்ள

*1. ‘யாரோ ஒருவனின் வீட்டிற்குள் நான்’*
*2. ‘அன்னியமாதலுக்கு எதிராக’*
*3. ‘புறப்படுதல்’*

ஆகிய மூன்று கவிதைகளும் அண்மையில் நடைபெற்ற புகலிடக் கவிஞர்களின் பிரெஞ்சுக் கவியரங்கில் வாசிக்கப்பட்டதாகும். இக்கவிதைகளில் சில ஏற்கனவே தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

பிரெஞ்சுப் பாடசாலை மாணவர்களுக்கான ஆசிரியர்களின் பாடவிதான நூலில் ஜெர்மனியக் கவிஞன் பெர்ட்ரோல்ட் பிரெச்ட் (Bertolt Brecht) , லத்தீன் அமெரிக்கக் கவிஞன் பப்லோ நெருடா (Pablo Neruda), ஆகியோரின் கவிதைகளோடு ‘அகதி நிலம் எரிகிறது’ என்ற கவிதையின் மூலம் ஈழத்துக் கவிஞனாய் கலாமோகனும் இனங்கண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கவிதை நூலிற்கு பின்னுரை வழங்கியுள்ள முன்னாள் பிறேசில் பல்கலைக்கழக பேராசிரியரும், பிரெஞ்சு நாட்டின் அகதிகள் ஆவண காப்பக இயக்குணரும், கவிஞருமான பேதறு வியன்னா (Pedro Vianna), தனது பின்னுரைக் குறிப்பில் கலாமோகனுடைய இக்கவிதைகள் பிரெஞ்சு மொழிக் கவிதை இலக்கியத்திற்கு ஒரு புதிய வளம் சேர்க்கின்றதெனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கவிஞனாய், சிறுகதை எழுத்தாளனாய், நாடக எழுத்தாளனாய் எல்லாவற்றிலும் தொட்டுக் கொண்ட கலாமோகன் அகதி வாழ்வின் சிதிலங்களை அப்பட்டமாக்கிய ‘குளிர்’ சிறுகதையானது ‘பனியும் பனையும்’ சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறுகிறது. இச்சிறுகதை குமுதம் (17.11.1994) இதழில் அண்மையில் மறுபிரசுரமானதையடுத்து பரந்த வாசகர் மட்டத்தில் பேசப்படும் புகலிடச் சிறுகதையாளனாக அவர் தன்னை ஸ்தாபித்திருக்கிறார். ‘வீடும் வீதியும்’ என்ற நாடக நூல் ஏற்கனவே வெளிவந்திருக்றது.

***‘‘என்னிடம் விளக்கு இருக்கிறது***
***உன்னிடம் ஒளி இருக்கிறது***
***திரியை விற்றவர் யாரோ?’’***

என்ற பிரெஞ்சுக் கவிஞர் ஜக் பிறவேரின் (Jaque Prever) பெரும்பாலான கவிதைகளை தமிழுக்குக் கொண்டுவந்ததில் இவர் பெரும் பங்கு வகிக்கிறார். பிரெஞ்சு மொழியில் இருந்த மூன்றாம் உலக புகலிடக் கவிஞர்களின் கவிதைகளையும் தமிழில் கொண்டுவந்துள்ளார்.

‘‘பிரெஞ்சின் இலக்கியக் கொடுமுடியான ஜெனே’’, ‘‘புகலிடக் கவிதையின் மீதான இருத்தலியல் விசாரணைகள்’’ ஆகிய இவரது விமர்சனக்கட்டுரைகள் இலக்கிய விமர்சனத்தில் இவரது ஆளுமையை வெளிக்காட்டுகின்றன. புகலிட இலக்கியத் தளத்தில் பரந்த வீச்சைக் கொண்டிருக்கும் கலாமோகனின் படைப்புக்கள் வெளிவராத புகலிடச் சஞ்சிகைகளைத் தேடல் அரிது.

தாய் மண்ணிலிருந்து 1983ம் ஆண்டு பிரெஞ்சு நாட்டின் ஒரு தொழிலாளர் விடுதிக்குள் தள்ளிவிடப்பட்ட கலாமோகன்,

***‘‘வானத்திற்கும் நிலத்திற்கும்***
***இடையே***
***மனிதர்கள்***
***இனிமேலும் அழகிய நாட்கள்***
***வருமென***
***இவர்கள் நம்புகிறார்கள்?’’***

என்று இந்தக் கவிதைக் தொகுதியின் மூலம் எழுப்பும் இந்தக் கேள்வி ஓர் அகதியின் குரல்தான். இதை ஒரு கலாமோகன் தான் எழுப்பமுடியும்.. •

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொடரும் விவாதம்

## தமிழ்த் தேசியம் எந்த ஒரு இனத்திற்கும் எதிரானதல்ல!

அண்மையில் சரிநிகரில் எழுந்துள்ள தேசியவாதம் பற்றிய விவாதம் இந்தக் காலகட்டத்தில் நிதானமாகவும் ஆரோக்கியமான விதத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய விவாதமாகும். இதன் நிமித்தம் கருத்துக்கள் சிலவற்றை முன்வைக்கும் நோக்குடனேயே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினை பிரித்தானியர் ஆட்சியிலேயே ஆரம்பமாக வளர்ந்து படிப்படியாக வலுப்பெற்ற ஒன்று. ஆகவே இனப்பிரச்சினை பற்றிய கருத்துக்களும் தேசியவாதம் பற்றிய கருத்துக்களும் இந்த ஆரம்பங்களூடாக ஆராயப்பட வேண்டியது அவசியம். பிரித்தானியர் கையளித்த ஆட்சி முறை உத்திகளும் இரு இனங்களை அடிப்படையாகக் கொண்ட இரு தேசியவாதங்களின் வளர்ச்சியை கோரி நின்றன.

பிரித்தானியரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு தேசியவாத போராட்டம் தேவைப்படவில்லை. ஆயினும் அரசியல் நாட்டம் கொண்ட சிலர் மத்தியிலும் அறிவியல் சமூகத்தினர் மத்தியிலும் தேசியவாதம் பற்றிய கருத்துக்கள் நிலவிவந்தன. இந்த தேசியவாதம் பற்றிய கருத்துநிலை இலங்கையில் பொது தேசியவாதம் என்ற வடிவம் பெற்றதற்கு இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் முக்கிய காரணியாக அமைந்திருந்தது.

பிரித்தானிய ஆட்சியாளர் இலங்கையரில் மேலாதிக்கம் செலுத்தும் பொது எதிரி என்ற வடிவத்தை பெறாதபடியால் இலங்கையில் வாழ்ந்த இனங்களுக்கிடையில் பிரித்தானியரை ஒன்றுபட்டு எதிர்க்கும் உணர்வு வலுப்பெறவில்லை. இலங்கையரின் சுயநிர்ணய உரிமைக்காக போராடும் உத்வேகமும் அவ்வளவாக தேவைப்பட்டிருக்கவில்லை. இதனால் 'இலங்கையின் தேசியவாதம்' என்ற கருத்தாக்கம் செயற்பாட்டு வடிவம் பெறத் தேவையான சூழ்நிலை உருவாகவில்லை.

பிரித்தானியர் வெளியேறிய பொழுது இலங்கையின் ஆட்சி அதிகாரம் இலங்கையரின் கைக்கு மாறியது. இந்த ஆட்சி அதிகாரத்தைப் பெற்றவர்கள் வசதிபடைத்த மேற்கத்தைய போக்குடைய ஒரு குழுவினர். இவர்கள் இலங்கையருக்கு எசமானர் போலவும் பிரித்தானியரை பிரதியீடு செய்பவர்களாகவும் அமைந்தார்களேயன்றி தமது நாட்டில் தமது சக மக்களின் அரசியல் தலைவர்களாக செயற்படத்தவறினார்கள்.

இதனைத் தொடர்ந்து நடந்த ஜனநாயக ஊடாட்டத்தில் கட்சிச் செல்வாக்கினை முதன்மைப்படுத்த சிங்கள இனவாதமும் பௌத்த மதமும் அரசியல் தளத்தில் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. இப்படியாக அரசியல்வாதிகள் இனம் மதம் இரண்டையும் தமது சொந்த அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்தப் பழகிக் கொண்டார்கள். இத்தருணத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தோற்றத்திற்கு பௌத்த சிங்களவாத சுலோகம் அடிப்படையாக அமைந்ததனை நாம் மனங்கொள்ள வேண்டும்.

இலங்கையில் சிங்கள தமிழ் தேசியவாதங்களின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவத்திற்கும் பிரித்தானியர் கையளித்து சென்ற ஜனநாயக அரசியல் முறைமையின் பங்களிப்பு முக்கியமானது. இந்த பல் கட்சிப் பாராளுமன்ற ஜனநாயக அரசியல் அமைப்பின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இலங்கையில் இனவாதமும் மதவாதமும் முக்கிய அடித்தளங்களாயமைந்து வந்துள்ளன. ஆகவே இங்கு கருத்திலெடுக்கப்பட வேண்டிய இன்னொரு முக்கிய அம்சம் ஜனநாயக அரசியல் முறைமையின் பொருத்தப்பாடு பற்றியதாகும்.

நாமறிந்தளவில் செயற்பாட்டு வடிவில் ஜனநாயக அரசியல் அதிகாரமானது பெரும்பான்மையினரின் ஒரு குழுவிற்கு பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினர் மீது ஆட்சிசெலுத்த கொடுக்கும் அதிகாரம் தான். இந்த ஆட்சியமைப்பில் பெரும்பான்மையினரின் நலன்களை பாதுகாப்பது ஆட்சியாளரின் தலையாய கடமையாக மாறியுள்ளது.

பெரும்பான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு ஆட்சியாளரும் வெவ்வேறு பொருளாதார, அரசியல், இராணுவ, அபிவிருத்தித் திட்டங்களை முன்வைக்கிறார்கள். இந்த செயற்திட்டங்களில் ஆட்சியாளரின் போக்கு மாற்றமடையும் போது அல்லது அந்த ஆட்சியாளர் மீது பெரும்பான்மையினர் சலிப்படையும் போது மக்கள் இன்னொரு குழுவிற்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குகிறார்கள்.

ஜனநாயகம் மக்களிடையே இருக்கும் பிரிவுகளையும், பிளவுகளையும் முதன்மைப்படுத்துவதனை ஊக்கக்கூடிய ஒரு அரசியலமைப்பாகும். எம்மைப் பொறுத்தவரையில் மதம், இனம், மொழி ஆகிய பிரிவுகள் ஜனநாயகம் வளர்ந்த அடித்தளங்களாய் அமைந்துள்ளன.

ஜனநாயகம் தோன்றி வளர்ந்த கலாசாரம் எமது கலாசாரத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. ஜனநாயகம் தோன்றி வளர்ந்த நாடுகளில் நிலவிவரும் அரச நிர்வாகமும் அதனைக் கட்டுப்படுத்தி ஆற்றுப்படுத்தும் அரசும் அவற்றிற்கிடையிலான உறவுமுறையும் முற்றிலும் வேறுபட்டது. அந்த நாடுகளின் அரசியல்வாதிகள் ஜனநாயகத்தை கையாளும் விதமும், சக மனிதர்களுடைய ஜனநாயக உரிமைகளை மதிக்கும் விதமும் எம்மவரின் புரிதலுக்கும் அப்பாற்பட்ட விடயங்களாகும்.

ஆக, ஒரு அரசியலமைப்பின் வெற்றிக்கு அந்த அரசியலமைப்பு அந்த கலாசாரச் சூழலுக்கு தோதானதாக அமைவது அவசியமாகிறது. இந்த அடிப்படையில் மேலைத்தேய ஜனநாயக முறைமை எமது கலாசார பின்புலத்திற்கு நேரடியாக பிரயோகிக்கப்படக்கூடிய அரசியலமைப்பு அல்ல.

மேலைத்தேய ஜனநாயக முறைமைகளில் இருக்கும் சில பல விடயங்களை எமது அரசியல்வாதிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதாலேயே எமது பிரச்சினைகள் இவ்வளவு சிக்கலான நிலைக்கு போயுள்ளன. இலங்கையின் முன்னைய அரசியலமைப்பிலிருந்த சிறுபான்மையினரின் பாதுகாப்பு சம்பந்தமான பகுதிகள் அகற்றப்பட்டது முதற்கொண்டு தான்தோன்றித்தனமாக அரசியலமைப்பு மாற்றப்பட்டது வரை இந்த சுயநல மனப்பாங்கினருக்கு ஜனநாயக அரசியலமைப்பு கொடுத்த நெகிழ்வுத்தன்மையின் வெளிப்பாடுதான் இன்றைய நிலை. எமது அரசியல்வாதிகள் ஜனநாயக அரசியலை தக்க முறையில் கையாளும் அரசியல் பக்குவம் அற்றவர்கள்.

ஆகவே எமது கலாசாரப் பின்புலத்திற்கு இந்த ஜனநாயக அரசியலமைப்பின் பொருத்தப்பாடு கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. இந்த ஜனநாயக முறைமை கலாசார மயப்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

இப்படியான ஜனநாயக அரசியலமைப்பின் துஷ்பிரயோகம் காரணமாக தமிழ் மக்கள் தங்கள் பொருளாதார, அறிவியல், புவியியல், அரசியல் தளங்களில் பல முட்டுக்கட்டைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் தமது இருப்பை நிச்சயித்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட ஈழத்தமிழ் தேசியவாதம் வலுப்பெறத் தொடங்கியது. இது வெறும் கருத்தியலாக மட்டுமன்றி செயற்பாட்டு வடிவினையும் பெற்றது. இந்த தமிழ் தேசியவாதம் பற்றிய கருத்துக்களும் அரசியலில் மட்டுமல்லாது அறிவியல் தளத்திலும், ஏனைய தளங்களிலும் வலுப்பெறத் தொடங்கியது. இதனை நாம் பல அறிஞர்களின் முயற்சிகளில் காணலாம். அறிவியல் தளத்தில் 'ஈழத்தமிழர்' என்ற பதமும் தமிழ் தேசியமும் மிகப் பரந்த மனப்பாங்குடன் ஒரு இனத்தின் தன்மானத்தை சுட்டும் பதங்களாகப் பாவிக்கப்பட்டதனை நாம் காணலாம்.

இருப்பினும் இந்த 'தமிழ் தேசியம்' என்ற கருத்தியல் ஜனநாயக அரசியலுக்கு ஒரு கேடயமாகப் பயன்படத்தொடங்கியது. தமிழ் அரசியல்வாதிகள் 'தமிழ் தேசியம்' என்ற கருத்திற்கு ஏகபோக உரிமை கொண்டாடி தம்மை தமிழரின் ஏக பிரதிநிதிகளாகவும் காப்பாளராகவும் நியமித்துக் கொண்டார்கள். அரசியல் தளத்தில் இந்த கருத்தியல் வலுப்பெற்று காலப்போக்கில் அதுவே 'யாழ்ப்பாணியத்தின்' முதன்மைக்கும் வழிகோலியது.

இனப்பிரச்சினை கூர்மையடையத் தொடங்கியதும் அறிவியற் சமூகம் மௌனமாகியது. இளைஞர் சக்திகள் முதன்மை பெறத் தொடங்கின. இதனைத் தொடர்ந்து அக முரண்பாடுகள் அதிகரித்து 'தமிழ்த் தேசியம்' ஒரு பகடைக்காயாக மாறியது. இந்த காலகட்டத்தில் அறிவியற் சமூகத்தினர் அரசியல் நிகழ்வோட்டங்களிலிருந்து தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டி ஏற்பட்டது.

இப்படியான பல காரணங்களால் 'தமிழ்த் தேசியம்' என்ற கருத்தியல் இன்று 'யாழ் தமிழ் தேசியவாதம்' என்ற செயற்பாட்டு வடிவினைப் பெற்றுள்ளது. இந்த 'யாழ் தமிழ் தேசியவாதம்' தமிழரிடையே இருக்கக்கூடிய மற்றைய எல்லா பண்பாட்டு உபகுழுமங்களுக்கு மேலாகவும் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது. இதன் ஒரு வெளிப்பாடாகத்தான் யாழ்ப்பாணத்து முஸ்லிம் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசத்திலிருந்து விரட்டப்பட்ட நிகழ்வு கருதப்பட வேண்டும். இந்நிகழ்வு இலங்கை வாழ் தமிழர்களில் சிங்கள பௌத்த 'பெரும்பான்மை மனம்' எப்படி செயற்படுகின்றதோ அதையொத்த ஒரு செயற்பாடுதான் என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

இந்த அடிப்படைகளில் நாம் இரண்டு விடயங்களை குறிப்பாக கருதலாம்.

ஒன்று, இலங்கைக்கான (தமிழரையும் சிங்களவரையும் இணைக்கும்) பொதுத் தேசியம் பற்றிய கருத்து நிலவிவந்தாலும் அது செயற்பாட்டு வடிவம் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கவில்லை. 'இலங்கைத் தேசியம்' சிங்கள மக்களது பெரும்பான்மை மனப்பாங்கு காரணமாக சிங்கள பௌத்த தேசியவாதம் என்ற செயற்பாட்டு வடிவிலேயே இருந்து வருகிறது.

இரண்டாவது; தமிழ் தேசியவாதத்துள் வேகமாக வலுப்பெற்று வரும் ''யாழ் தமிழ் தேசியவாதம்' என்னும் பெரும்பான்மை மனப்பாங்கும், செயற்பாடுகளும் இனம் காணப்பட்டு விவாதத்திற்குள்ளாக்கப்படவேண்டியுள்ளது.

அரசாங்கங்களும் போராட்ட சக்திகளும் கையாளும் அரசியல் கருத்தியல்கள் அவற்றிலுள்ள பலங்களும், பலவீனங்களும் அவற்றைச் சார்ந்து நிற்கும் மக்களது மனச்சட்டகத்தினை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த அதிகார சக்திகள் வெளிப்படுத்தும் 'மனப்பாங்குகள்' அந்த சமூகத்தின் மனப்பாங்குகளாகப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் , யதார்த்தத்தில் அதனையே அச்சமூகம் தனது மனப்பாங்காகவும் காலப்போக்கில் வரித்துக்கொள்கிறது. ஆகவே அரசியல் கருத்தாக்கங்கள் ஒரு சமூகத்தை தக்க விதத்தில் ஆற்றுப்படுத்தும் தன்மையினதாயமைவது அவசியமாகிறது.

தத்துவார்த்தத்தளத்தில் விவாதிக்கப்படுபவை எல்லாம் செயற்பாட்டுத் தளத்தில் சாத்தியப்படுவதில்லை. தான், தனது இருப்பு தனது சிந்தனை, தனது அடையாளம் என்ற சுயநல அடிப்படைகளிலிருந்தே ஒரு மனிதனின் செயற்பாடுகள் பரிணமிக்கின்றன. நாடுகளுக்கிடையே பரிவர்த்தனை அதிகரிக்க அதிகரிக்க உலகம் சுருங்கி விட்டதாக ஒரு பிரமை. இதுவே ஒருவனுக்கு தனது அடையாளத்தையும் (Identity) சுயமான இருப்பையும் நிச்சயித்துக் கொள்ள வேண்டிய தேவையினையும் உணர்த்துகிறது. தனது வாழிடத்தையும், தனது வாழ்முறைகளையும் தனக்கே உரித்தானதாக வெளிப்படுத்திக் கொள்ளும் தேவையையும் ஏற்படுத்துகிறது. இதன் வெளிப்பாடாகவே ஜனநாயகத்தின் சிகரமாகக் கருதப்படும் ஐக்கிய ராச்சியத்தில் கூட இன்று இனத்தேசியவாத அரசியல் செயற்பாட்டு வடிவம் பெறத் தொடங்கியுள்ளது.

பல்லினத் தேசியங்கள் வாழும் நாடுகளில் அரசுகள் இனங்களின் தனித்துவத்தையும் சுயநிர்ணயத்தையும் அங்கீகரிக்காத பட்சத்தில் அவை இனத்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இட்டுச் செல்லப்படுவது தவிர்க்கப்பட முடியாதது. 'பெரும்பான்மை மனப்பாங்கு' எந்த சமூக அலகிற்கு எதிராக செயற்படுகின்றதோ அந்த சமூக அலகினை அடிப்படையாகக் கொண்ட தேசியவாத எழுச்சியை அந்த அலகு இனமாக அரசியல் வரலாற்றினால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ''பெரும்பான்மை மனப்பாங்கு'' செயற்பாட்டுத்தளத்தில் வலுப்பெற்ற ஒன்றாக இருந்து வந்தாலும் கருத்தியல் தளத்தில் அதற்கு எதிரான போக்குகள் அவ்வப்போது வெளிப்படவே செய்கின்றன. அண்மைக்காலங்களில் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் அறிவியற் சமூகத்தினரும் ஏனையோரும் 'பெரும்பான்மை' மனப்பாங்கினை நிராகரிக்கும் ஒரு கருத்தியலை வரித்து வருகிறார்கள். இந்த மாற்றம் முற்போக்கு குணாம்சமாக இனம்காணப்பட்டு கருத்தியல் தளத்தில் பெரும் செல்வாக்கு செலுத்தினாலும் செயற்பாட்டுத் தளத்தில் இவர்களிடம் உள்ளார்ந்து கிடக்கும் பெரும்பான்மை மனம் தலை காட்டவே செய்கிறது.

கருத்தியல் தளத்தில் அவர்களது நிலையும் கருத்துப் பரம்பலில் அவர்கள் எடுக்கும் முயற்சிகளும் எந்த அளவிற்கு அரச அதிகார அமைப்பின் செயற்பாடுகளில்

**கொ.ற.கொன்ஸ்ரன்ரைன்**

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக மக்களும் அரசியலமைப்புத் திருத்தமும்

புதிய அரசியல் திட்டங்களை உருவாக்குவது தொடர்பாக அரசினால் உருவாக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு அதன் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன. இத்தெரிவுக்குழுவுக்கு பல்வேறு இனங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மலையக அமைப்புக்களில் மலையக மக்கள் முன்னணி புதிய ஜனநாயகக் கட்சி என்பன மட்டும் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளதாக தெரிய வருகிறது. மலையக அமைப்புக்களில் முக்கியமான அமைப்பான இ.தொ.கா இதுவரை தமது யோசனைகளைத் தெரிவித்ததாக தெரியவில்லை.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டாலும் அதனைப் பரிசீலனை செய்தல், சம்பந்தப்பட்ட அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல், விவாதங்கள் நடாத்துதல், போன்ற செயற்பாடுகள் இனிமேல்தான் நடைபெறவிருக்கின்றன. இந்நிலையில் அவ்வாறான செயற்பாடுகள் நடைபெறும் போது மலையக மக்கள் தொடர்பான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் மலையக பிரதிநிதிகள் மலையக கல்விமான்கள் என்போர் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டியது மிகமிக அவசியமானதாகும்.

மலையக மக்களுக்கான அரசியல் தீர்வுகளை முன்வைக்கும் போது இரு முக்கிய விடயங்களை மிகுந்த கவனத்தில் கொள்வது அவசியமானது. ஒன்று மலையக மக்கள் தனியான ஒரு தேசிய இனம் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் பெரும்பாலானது தேசிய இனப்பிரச்சினைகளே. இரண்டாவது மலையக மக்களை இலங்கையில் வாழும் ஏனைய சமூகத்தவர்களுடன் சமநிலையில் வைத்துப் பார்க்கக்கூடாது. அவர்கள் இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களைவிட மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இந்நிலையில் அவர்களுக்கு விசேட கவனிப்புத் தேவை. இவ்விரு அம்சங்களையும் கவனத்தில் கொண்டு தீர்வுக்கான யோசனைகளை முன்வைக்கும் போதே அத்தீர்வுகள் மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக அமையும்.

தேசிய இனங்கள் தொடர்பான சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறைபற்றி இலங்கைக்கு என ஒரு சிறப்பான வரலாறே உண்டு. பேரினவாதம் எந்த ஒரு கட்டத்திலும் ஏனைய தேசிய இனங்களுடன் நேர்மையான அதிகாரப்பகிர்வுக்கு முன் வரவில்லை. சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு காப்பீடாக மத்தியில் அரசு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல்திட்ட முயற்சிகளுக்கும், பேரினவாதம் ஆதரவாக இருக்கவில்லை (உதாரணமாக: சோல்பரி அரசியல் யாப்பின் 29ஆவது பிரிவு). இந்நிலையில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்குள்ள ஒரேவழி பிரதேச மட்டத்தில் தமக்கான அதிகார அலகைப் பெற்றுக் கொள்வதே, மலையக தேசிய இனத்திற்கும் இதுவே தீர்வாக அமையமுடியும். மலையக மக்கள் முன்னணி இது தொடர்பாக மலையக பிராந்திய சபைக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. பிராந்திய சபையின் மையமாக மலையக மக்கள் செறிவாக வாழும் ஐந்து மாவட்டங்களும் அடங்கும் என்றும், இதற்குள் அடங்காத மலையக மக்களின் ஏனைய பகுதி அமைப்பையும் இப்பிராந்திய சபையுடன் இணைக்க வேண்டும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது. இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தை ஒத்த வகையிலான ஒரு பிராந்திய சபையை அது முன்வைத்துள்ளது. ஆயினும் பிராந்திய சபையின் அதிகாரம் பற்றி அது எதுவும் குறிப்பிடவில்லை.

பிராந்திய சபையை அமைத்தால் மட்டும் போதாது. அது அதிகாரமுடைய பிராந்திய சபையாகவும் இருக்கவேண்டும்.

அமெரிக்க சமஷ்டி அமைப்பினைப் போன்று பாதுகாப்பு, வெளிவிவகாரம், நிதி, முப்படை போன்றவை தொடர்பான அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான அதிகாரங்கள் குறிப்பாக காணிப்பகிர்வு, உள்ளூர் பாதுகாப்பு, வரிவசூலிப்பு மற்றும் உள்ளூர் நிர்வாகம் போன்றவைகளில் பூரண அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் அவ் அதிகாரங்களைப் பயன்படுத்தி பின்தங்கிய நிலையில் உள்ள மலையக சமூகத்தை தூக்கி எழுப்பிவிட முடியும்.

அதிகார அலகை உருவாக்கும் போது தோட்டங்களையும், தோட்டங்களில் வாழும் மக்களையும் வேறு வேறாக பிரிக்க வேண்டும். பெருந்தோட்டங்கள் மத்திய அரசின் கீழ் இருக்கலாம். ஆனால் மலையக மக்களின் குடியிருப்புக்கள், பாடசாலைகள், சுகாதார நிலையங்கள், கோவில்கள், விளையாட்டுத்திடல்கள், குடியிருப்புக்கான பாதைகள், மின்சார வசதிகள், குடிநீர் வசதிகள் அனைத்தும் பிராந்திய சபையின் அதிகாரங்களுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். இதன் மூலமாக தோட்ட நிர்வாகமே மலையக மக்களின் வாழ்வினைத் தீர்மானிக்கின்ற தற்போதைய நிலையை இல்லாமல் செய்தல் வேண்டும்.

மலையக மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளில் இன்னோர் முக்கியமான பிரச்சினை பிரஜாவுரிமைப் பிரச்சினையாகும். அரசியல் ரீதியாக இப்பிரச்சினை தீர்க்கப் பட்டுள்ளது எனக் கூறப்பட்டாலும், சட்ட ஏற்பாடுகள் போதிய பாதுகாப்பாக இல்லை. இதுவிடயத்தில் தற்போதுள்ள ஏற்பாடுகள் நீக்கப்பட்டு இலங்கையில் பிறந்த அனைவருக்கும் பிரஜாவுரிமை என்ற ஏற்பாட்டினை சேர்த்தலே மலையக மக்களுக்கு பாதுகாப்பானதாக அமையும்.

இது தொடர்பான இன்னோர் விடயம், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், சிறிமா - இந்திரா ஒப்பந்தம் என்பவற்றின் கீழ் இந்தியாவில் குடியேறியோர் பற்றியதாகும்.

இவர்கள் இந்தியாவுக்கு தாமாக விரும்பிச் செல்லவில்லை பலவந்தமாக நாடு கடத்தப்பட்டார்கள். அங்கு ஓர் அரைகுறை அடிமை நிலையில் மோசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீளவும் இலங்கையில் குடியேற விரும்பின் அவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை கொடுத்தல் வேண்டும். இதுவிடயத்தில் அவர்கள் இந்தியாவில் வாழ்ந்தாலும் மலையகத்தவர்கள் என்பதை மறுக்க முடியாது.

இறுதியாக, புதிய அரசியல்திட்ட மாற்றம் ஏற்படும் போது ஆட்சியாளர்கள் மலையக தேசிய இனத்தின் பிரச்சினைகளை சிலவேளை தட்டிக் கழித்து விடலாம். ஆனால் மலையக தேசிய இனம் அவற்றை தட்டிக் கழித்துவிட முடியாது. ஏனெனில் இது அவர்களுக்கு ஒரு

→15




அண்மையில் ஹட்டன் பகுதியில் புளியவத்தை என்னும் இடத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றில் இரு ஆசிரியர்கள் ஒரு மாணவி மீது பாலியல் பலாத்கார முயற்சியை மேற்கொண்டுள்ளனர். மாலை நேர பிரத்தியேக வகுப்புக்களை நடாத்திய இரு ஆசிரியர்களும் வகுப்புமுடிந்து மாணவிகள் வீட்டுக்குச் செல்லும் நேரத்தில் ஒரு மாணவி மீது இப்பலாத்கார முயற்சியை மேற்கொண்டனர். இவர்களின் அகோரப்பிடியிலிருந்து ஒருவாறு தப்பித்து கிழிந்த உடையுடன் அழுதபடி அம்மாணவி வீடு நோக்கி ஓடியதை பலர் பார்த்திருக்கின்றனர். அடுத்தநாள் காலை பெற்றோர்களும், ஊரவர்களுமாக சுமார் 2000 பெற்றோர்கள் காலையிலிருந்து நண்பகல் வரை பாடசாலையைச்சுற்றி வளைத்து இரு ஆசிரியர்களையும் தம்மிடம் ஒப்படைக்கும்படி ஆர்ப்பாட்டம் செய்தனர். அதிபர் அறை ஒன்றிற்குள் அலுமாரிக்குள் இரு ஆசிரியர்களையும் பூட்டி வைத்துவிட்டு சம்பந்தப்பட்ட இரு ஆசிரியர்களும் பாடசாலைக்கு வரவில்லை என்றார். எனினும் சந்தேகம் கொண்ட பெற்றோர்கள் அறையின் கதவை தகர்க்க முற்பட்ட போது அதிபர் பொலிசுக்கு அறிவித்தார். பொலிசார் உடன் வந்து ஆசிரியர்கள் இருவரையும் மீட்டு பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

இதே போன்ற ஒரு சம்பவம் கடந்த மாதத்தில் இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றுள்ளது. தூரஇடத்தில் இருந்து பஸ்ஸில் வரும் மாணவர்கள் இருவர் பஸ் நேர காலத்தோடு வந்த படியால் பாடசாலை தொடங்குவதற்கு சில மணி நேரம் முன்னதாகவே பாடசாலைக்கு வந்துவிட்டனர். அந்நேரம் அங்கு இருந்த அதிபர் மாணவிகளுக்கு கூட்டுதல், பொருட்களை அடுக்குதல் போன்ற சில வேலைகளைக் கொடுத்தார். அவ்வேலையை ஒரு மாணவி மேற்கொள்ளும் போதே அம்மாணவி மீது பாலியல் பலாத்காரத்திற்கு முயற்சி செய்துள்ளார். இதனை எதிர்பார்க்காத அம்மாணவி ஒருவாறு அவரிடமிருந்து விடுவித்துக் கொண்டு தனது சக மாணவ மாணவிகளிடம் நடந்தவை பற்றிக் கூறியுள்ளார்.

மாணவர்கள் டிசம்பர் தவணை விடுமுறை தினம் வரை பொறுத்திருந்தனர். விடுமுறை தினம் அன்று அதிபரின் அலுவலகத்திற்கு சென்று அதிபரின் மேசை, கதிரைகள் அவரது மற்றைய உடமைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து தமது ஆத்திரத்தை தீர்த்துள்ளனர்.

அண்மையில் பன்வில தமிழ் மகா வித்தியாலயத்திலும் இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. இச்சம்பவத்திற்கு அடுத்தநாள் ஆசிரியர்கள் பாடசாலை வந்த போது மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர் அனைவரையும் பாடசாலைக்குள் நுழைய விடாது கல்லெறிந்து கலைத்தனர். அதிபரும், ஆசிரியர்களும் பின்னர் பொலிஸ் பாதுகாப்புடனேயே பாடசாலைக்குள் நுழைந்தனர்.

இவற்றைவிட நோர்வூட் பகுதியிலும் உள்ள பாடசாலை ஒன்றிலும் அதிபர் ஒருவர் மாணவி ஒருத்தியுடன் தகாத முறையில் நடந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நோர்வூட் சம்பவம் பற்றி அப்பாடசாலை மாணவி ஒருத்தி பின்வருமாறு குறிப்பிட்டார். **''மாணவர்கள் தவறு செய்தால் ஆசிரியரிடம் முறையிடலாம் ஆசிரியர் தவறு செய்தால் அதிபரிடம் முறையிடலாம் அதிபரே தவறு செய்தால் யாரிடம் தான் கூற முடியும்?''**

மாணவிகளிடம் இருந்து எழுந்த பாதுகாப்புக்குரல் இவ்வாறு இருக்க, ஹட்டன் டினியாவத்தைப் பாடசாலை சம்பவம் பற்றி ஹட்டன் பகுதி தமிழ் கல்வி உயர் அதிகாரி தெரிவித்துள்ள கருத்து எல்லாப் பெற்றோர் மாணவ சமுதாயத்தையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. அவர் குறிப்பிட்டார்; '' இது சிங்களப் பாடசாலைகளிலும் நடைபெறும் சாதாரண பிரச்சினை இதனை ஏன் பெரிது படுத்த வேண்டும்''

## ஊழல்: 1 நீரிறைக்கும் இயந்திரங்கள் ஒழிந்திருந்த கதை

அண்மையில் தோட்டமக்களுக்கென அரசாங்க நிதியிலிருந்து பெறப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் சிலவற்றை பதுளை மாவட்ட இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டில் வைத்து பொலிஸார் கைப்பற்றி உள்ளார்கள்.

மேற்படி நீர்இறைக்கும் இயந்திரங்களுக்கான நிதியை சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் தனது பாராளுமன்ற உறுப்பினருக்கான நிதியிலிருந்தே ஒதுக்கியிருந்தார்.

மேற்படி இயந்திரங்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு வந்த போது கையொப்பமிட்டு தோட்டத்திற்கு கையளிப்பதற்காக எடுத்துச் சென்றே தனது தோட்ட மக்களுக்கு கொடுக்காமல் தனது இருப்பிடத்தில் வைத்திருந்தார்.

இது தொடர்பான பத்திரிகைச் செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்தே பொலிசார் மேற்படி நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

## ஊழல்: 2 மக்கள் பணத்தில் வீடு விஸ்தரிப்பு

பதுளை மாவட்ட தெளிவத்தை தோட்டத்தில் ஒரு மன்றத்துக்கு கட்டிடம் கட்டுவதற்காக ஊவா மாகாண சபையின் இ.தொ.கா உறுப்பினர் சுப்பையா ஒரு தொகைப் பணத்தினை ஒதுக்கியிருந்தார். இப்பணத்தினை மேற்படி தொழிற்சங்கத்தின் தோட்டப்பிரதிநிதி மன்றத்தலைவர் என்ற வகையில் உதவி அரசாங்க அலுவலகத்திலிருந்து தானே கையொப்பம் இட்டுப் பெற்றுச் சென்றிருக்கின்றார்

தோட்டப்பிரதிநிதி அப்பணத்தில் மன்றத்துக்கான கட்டிடம் எவற்றையும் கட்டவில்லை. மாறாக, தனது வீட்டின் ஒரு பகுதியை விஸ்தரித்துக் கட்டியுள்ளார்.

இவ்விடயம் பொலிசாருக்கு எட்டியது. பொலிசார் மேற்படி பிரமுகரின் வீட்டை சுற்றி வளைத்தனர். இப்போ பிரமுகர் அப்பணத்தை மீளத் தருவதாக ஒப்புக் கொண்டு பொலிசாரிடம் கையளித்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத் தமிழ் — தேசியவாதத்தின் ஆரம்பம்

## ஆறுமுகநாவலர் அல்ல — 04

**சிவராம்**

காலடுவெல் பாதிரியாரின் 'திராவிட மொழியின் ஒப்பிலக்கணம்' 1856இல் வெளிவந்ததிலிருந்து, தோன்றி வளர்ச்சியுற்று வந்த திராவிட கோட்பாட்டின் வழி நின்றே தமிழக அறிஞர்கள் தமிழ் மொழி, இன தனித்துவத்தை பற்றி பேசிவந்த ஒரு காலகட்டத்தில் அத்திராவிடக் கோட்பாட்டினை விடுத்து அல்லது கண்டு கொள்ள மறுத்த சைவ மரபுடன் தொடர்புபட்ட ஒரு தளத்தில் நின்று தமிழபிமானத்தை வளர்க்க 1900 - 1916 காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் பிரதானமானதாக **'மகா விஜயலட்சுமி'** பத்திரிகையை குறிப்பிடலாம். இது யாழ்.சீதாரி என்னும் இடத்தைச் சேர்ந்த **சு.முருகேசு பிள்ளை** என்பவரால் வெளியிடப்பட்டது.

1910 ஏப்பரலில் ஒரு மாதாந்தப் பத்திரிகையாகத் தொடங்கப்பட்டு, 1911 ஜனவரியிலிருந்து இருவாரப் பத்திரிகையாக வெளிவரலாயிற்று. நாம் போன இதழில் குறிப்பிட்டது போல இந்தியச் சுதேசி இயக்கத்தின் பாதிப்பினால் ஏற்பட்ட சுய மொழிக் கல்வி நாட்டம் மற்றும் சுதேசக் கைத்தொழில் அபிவிருத்தி பற்றிய எண்ணங்கள் ஆகியனவே யாழ்ப்பாணத்தில் இந்நூற்றாண்டின் முதற் 16 வருடங்களில் ஊற்றெடுக்கத் தொடங்கியிருந்த தமிழுணர்வின் கருத்தியற் தளமாக இருந்தன. எனவே யாழ்ப்பாண உயர் சைவ வேளாளரினால் இக்காலகட்டத்தில் வெளியிடப்பட்ட பல பத்திரிகைகளிலும் காணப்பட்ட திராவிடக் கோட்பாட்டினைச் சாராத் தமிழுணர்வின் இரு கருத்தியற்தளங்களென சிவஞான முனிவர் வழிவந்த தமிழ் போற்றும் மரபினையும், தமிழகத்தில் ஏற்பட்ட சுதேசி இயக்க எழுச்சியையும் குறிப்பிடலாம். இவை வெறும் கருத்தியற் தளங்களாக மட்டும் இருக்கவில்லை.

சிவஞான முனிவர் தோன்றிய மடமான திருவாவடுதுறை ஆதீனத்துடன் யாழ் உயர் சைவ வேளாளருக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததென நாம் ஏலவே கண்டோம். 1905 உடன் தமிழகத்தில் உக்கிரப் பெற்ற சுதேசி இயக்கமும் யாழ்ப்பாணக் கற்றார் ஒரு சாராரிடையே கடும் தாக்கமொன்றை நேரிடையாகா ஏற்படுத்திற்று என்பதும் தெரிகிறது. 'கப்பல் ஒட்டிய தமிழன்' வ.ஊ.சி 1906 ஏப்ரல் மாதம் தம் கொள்கையைப் பரப்ப கொழும்பு வந்தார். கொழும்பிலிருந்து வெளிவந்த ஒப்சேவர் பத்திரிகை அவரைப் பேட்டி கண்டு எழுதிற்று. அவருடைய வருகையை மையமாக வைத்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'உதய தாரகை' ஆசிரியர் தலையங்கம் வரைந்தது (12.4.1906). கப்பல் கம்பனி ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றியும் சுதேசக் கைத்தொழில்களை - உதாரணமாக, உள்ளூர் நெசவு இயந்திரங்களினை பெருக்க வேண்டுமெனவும் வ.ஊ.சி கூறிய கருத்துகளை வரவேற்று 'உதயதாரகை' மேற்கண்ட ஆசிரியர் தலைப்பை வரைந்தது.

ஆனால், ஒரு வருடம் கழிந்து சுதேசி இயக்கம் உக்கிரமான முறையில் ஒரு ஆயுதப்போரையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முன்னெடுக்க முயற்சிக்கிறது, அது சுதந்திரத்தை நாடுகிறது என்பதை உணர்ந்த நிலையில் ஏகாதிபத்திய சார்புக் கிறிஸ்தவப் பத்திரிகையான 'உதயதாரகை' இந்தியச் சுதந்திரப் போரை எதிர்த்து ஓர் ஆசிரியர் தலையங்கத்தை 14.02.1907 இதழில் எழுதிற்று

வ.ஊ.சியின் வருகையும், தமிழக நிகழ்வுகளும் யாழ் சைவ வேளாளரின் ஒரு பகுதியினர் மத்தியில் சுய தொழில்விருத்தி, சுயமொழி ஆர்வம் என்ற வகையில் ஓர் தமிழ் தேசிய உணர்விற்கான உந்தலாய் அமைந்தன. அந்த பின்னணியிலேயே நாம் ''மகா விஜயலஷ்மி'' போன்ற யாழ் பத்திரிகைகளின் தன்மையை நோக்க வேண்டும்.

தமிழர் அந்நிய (ஆங்கில) மோகத்தைக் கைவிட்டு தமிழையே கற்க வேண்டுமெனவும், தமிழ் பழம் பெருமைமிக்கது சுமாத்திரா போன்ற கடல் கடந்த நாடுகளில் கூட வழங்கியுள்ளது எனவும், ஆங்கிலக் கல்வியில் இளைஞரின் ஆசாரம் கெடுகிறது எனவும் மகா விஜயலஷ்மி ஆசிரியர் தலைப்புக்களை வரையலாயிற்று (உதாரணம், 2.3.1911 இதழில் 'தமிழ்க்கல்வி' எனும் ஆசிரியர் தலைப்பு) 'திராவிட பாஷைச் சிறப்பு' என்ற விஜயலஷ்மியின் ஆசிரியர் தலையங்கமானது (25.7.1911) திராவிடக் கோட்பாட்டைப் புறந்தள்ளி, சைவ மரபு வழித் தமிழ்ப்புலவர் போற்றி நிறுவிய தமிழுணர்வின் ஒரு குறிப்பிடத்தக்க வெளிப்பாடு எனலாம். இத்தலையங்கத்தில் ஆசிரியர் சைவத் தமிழ்ப்புலவர் பலர் தமிழின் தனித்துவத்தைப் பற்றிக் கூறிய பல விடயங்களை எடுத்துக் கூறி தமிழ் சமஸ்கிருதத்தின் கிளைப்பாஷை அல்ல என வலியுறுத்துகிறார்.

''தண்டமிழெனவும் சங்கத் தமிழெனவும் பைந்தமிழெனவும் சிறப்பித்துச் சீரியோர் செப்பியது சீணிப்பதற்கா?. சுதேசிகளாயிருந்து சுதேச பாஷாபிவிருத்தி செய்யாதது, சுய குலத்தை இகழ்ந்து அயலதைப் புகழ்வது போலாமன்றோ?'' எனவும் (25.7.1911) சுயாபாஷையாகிய தமிழைக் கற்று யாழ்ப்பாணம் சுயகைத்தொழில்களில் முன்னேற வேண்டும் எனவும் ஆங்கிலக் கல்வியால் பயனில்லை எனவும் ''இவ்வூர்ச் சனங்களுக்கு சுருட்டாகிய கைத்தொழிலே மேலான முயற்சி'' எனவும் ('தமிழ் கல்வி'எனும் ஆசிரியர் தலைப்பு 17.02.1911) விஜயலஷ்மி எழுதிற்று.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது யாதெனில் பால கங்காதர திலகரினால் முன்னெடுக்கப்பட்ட இந்து மத வயப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வானது எங்ஙனம் தமிழகத்தில் மு.இராகவையங்கார் ஊடாகவும், பாரதி ஊடாகவும் ஒரு தமிழ்த் தேசிய மீழ் எழுச்சிக்கான உந்தலாக வெளிப்பட்டதோ அதே போல் வட இந்தியாவினின்றும் தமிழகத்தின் மூலமாகவும் யாழ்ப்பாணத்திற்குப் பரவிய அவ்வெதிர்ப்புணர்வின் கருத்தியற் தாக்கமே குடா நாட்டில்தமிழ்த் தேசிய எழுச்சி பற்றிய எண்ணங்களை 1900-16 கால கட்டத்தில் உருவாக்கிற்று எனலாம்.

எனினும் இலங்கையில் தமிழ் தேசியக் கருத்தியலின் சினை கொள் தளமாக நாம் இதைக் காண்பதில் இரு முக்கிய சிக்கல்கள் உள்ளன. ஒன்று: சிவஞான முனிவர் போன்றோரின் சைவத்தமிழ் மரபுவழிக் கருத்தியல் மொழியபிமானம் என்னும் அடித்தளத்திலேயே தொழிற்படுகிறது. அதற்கு ஒரு ஸ்திரமான இனக்கோட்பாடு கிடையாது. எனவே தமிழினம் என்னும் கருத்து இம்மரபினுள் நிலை கொண்டு மேலோங்க வாய்ப்பிருக்கவில்லை. இரண்டு: இக்கருத்தியல் சைவ மதச்சார்புடையதாய் இருந்தமையால் தமிழ்த்தேசிய தனித்துவத்தை உருத்தெரியாமல் பிராமணீயக் கலாசாரத்தினுள் கரைத்துவிடக்கூடிய சமஸ்கிருதமயமாதற் போக்கினையும் தன்னகத்தே கொண்டிருந்தது.

இவ்விரு காரணங்களாலும் யாழ் உயர் சைவ வேளாளரின் பிரதான சமூக உந்து சக்தியென நாம் கூறிய சமஸ்கிருதமயமாதலை எதிர்த்து தமிழின் இன, மொழி, மற்றும் தாயகக் தனித்துவம் பற்றிப் பேசிடக்கூடிய, நீண்ட காலம் நிலைத்திடக்கூடிய ஒரு தேசியக் கருத்தியலாக 'விஜயலட்சுமி' போன்ற யாழ் பத்திரிகைகளினூடாக வெளிப்பட்ட தமிழ்த் தேசியம் அமையாமற் போயிற்று எனலாம். பிற்காலத்தில் யாழ் சைவ வேளாள மரபு பெரியார் அண்ணாத்துரை வழிவந்த சில கருத்துக்களை எதிர்க்க முற்பட்டதும் இதனாலேயாம்.

அங்ஙனமாயின் இலங்கையில் தமிழ் தேசியத்தின் காத்திரமான கருத்தியல் முன்னோடி எனக் கருதப்படக்கூடிய முயற்சி எது? நீர்கொழும்பைச் சேர்ந்த பரதவர் வகுப்பினைச் சேர்ந்த தமிழ் கத்தோலிக்கரான ஜே.ஆர்.மிரண்டோ வெளியிட்ட 'திராவிட மித்திரனே இலங்கையில் ஒரு திட்டவட்டமான தமிழ்த் தேசியக் கருத்தியலின் முதல் வெளிப்பாடு எனலாம். இப்பத்திரிகை 1910ம் ஆண்டு தொடங்கப்பட்டது. (அக்காலகட்டத்தில் கொழும்பில்(?) 'திராவிடபிமானி' எனும் ஒரு பத்திரிகையும் வெளியிடப்பட்டதாக மிரண்டோ கூறுகிறார். இது கிடைத்திலது.)

திராவிட மித்திரன் அதன் முதலாவது இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் தான் வெளிவருவதன் நோக்கினைப்பற்றியும், தனது குறிக்கோளைப்பற்றியும் வருமாறு எழுதிற்று.

***''திராவிடம் என்பது தமிழர், தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள், கொங்கண ராகிய ஐந்துசாதியாருங் குடியேறிய தென்னிந்தியாவாம். திராவிடரென பூர்வத்தில் இந்த ஐந்து சாதியருமே கொள்ளப்பட்டுவந்தனர். திராவிட பாஷாவிலக்கணத்தில் பிஷப் கால்ட்வெல் திராவிடமென்னும் பதம் திராமிடவாய் பின் திராமிலமாய் அதன் பின் தமிழாய் வந்ததாகக் கூறுகின்றனர். இதை கர்ணல் யூலும், டக்டர் பேர்ணலும், டக்டர் குறோலும், டக்டர் ஜி.யூ.போப்பும், டக்டர் கன்டேர்ட்டும் அனுவத்தித்துப் பேசியிருக்கின்றார்கள். இந்தியாவின் தென்பாகத்தில் வழங்கப்படும் வடுகு பாஷையிலிருந்து பிறம்பான தெனக்காட்டும் நோக்கமாகவே வடுகதேசத்துக்கு தென்பாகத்தில் தமிழ் வழங்கப்பெறுவதால் தென்மொழியெனக் கூறப்பட்டுவந்ததென்றும், அத்தென்மொழியே சிதைந்து பழக்கத்தில் தமிழ் என வந்ததாய் அபிப்பிராயங் கொள்வாருமுளர்.***

***மேற்கூறிய பஞ்ச திராவிடர்களுள் தெலுங்கர், கன்னடியர் மலையாளிகள், கொங்கணராகிய நான்கு பிரிவினரும் படிப்படியாய் குறைவடைய, தமிழர் மேன்மையடைந்து வந்தனர். இவ்விதம் தமிழ்ச்சாகியத்தவர் முதன்மைக்கு வரவே, திராவிடர் என்னும் பதம் தமிழரை மாத்திரம் கருதுவதாயிற்று. இவ்விதம் தமிழர்கள் இருந்தநாடு சேர சோழ பாண்டியரென மூன்றாகப் பிரிந்திருந்தது. இம் மூன்று நாட்டினுள்ளும் பாண்டிய நாடே செந்தமிழ் வளரப்பெற்ற விஷேட நாடாயிருந்தது. திராவிடர் என்று சொல்லப்படும் சேர, சோழ பாண்டிய நாடுகளிலுள்ள தமிழர்கள் முற்காலத்திலே எத்தேசத்திலுமுள்ள எச்சாதியரைப் பார்க்கிலும் மிகச் சீர்திருத்த முடையவர்களாயும், வர்த்தக அபிவிருத்தியுடையவர்களாயும் இருந்தார்களென்பது பூர்வ சரித்திரங்களால் நன்கு தெள்ளிதிற்தெரியக் கிடக்கின்றது. சேர, சோழ, பாண்டிய என்னும் முந்நாட்டாரும் பொனீஷியர் முதலாய அன்னிய சாதியாருடன் கிறிஸ்து பிறக்க ஆயிரம் வருஷத்தின் முன்னர் கப்பல் மார்க்கமாய் வர்த்தகம் செய்து வந்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவிரின் அரசனாகும் தார்ஷிஸ் எபிரேய வரசராகும் சலோமோனுக்கு தோகையொன்றை உபகரித்தனரென்பதாய் வர்த்தகத்தை குறித்தெழுதும் பொழுது டக்டர் கால்ட்வெல் எழுதியிருக்கின்றனர். இங்ஙனமின்றி கிறிஸ்து பிறக்க 2000 வருஷங்களின் முன்னர் பர்வாயீம் என்னும் பொன்னை பாண்டிய நாட்டின் ஒவிரி என்னும் துறைமுகத்திலிருந்து சாலோமோ னரசர் கப்பல் மார்க்கமாய் கொண்டு போயினரென்பதாய் கிறிஸ்தவ பழைய யேற்பாடென்னும் சுவிசேஷத்தில் 1வது அரசராகமம் 9ம் அதிகாரத்திலும், 2வது நாளாகமம் 9ம் அதிகாரம் 10,11,13,14ம் வசனங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது***

***............... ........................***

***மித்திரன் என்பது சினேகன், அன்பன் என்னும் பொருள்களையுடையது. ஆகவே, திராவிட மித்திரனென்பது எச்சமயத்தவராயிருப்பினும் திராவிடமென்னும் தமிழ்ப்பாஷையைத் தம்பாஷையாய்க் கொண்டுள்ள சகல தமிழர் மீதும் அன்புடையவன் என்பதாம். நம் சாகித்தியவராகும் தமிழர், குடிமதிப்புக் கணக்கின்படி தென்னிந்தியாவில் சுமார் ஒரு கோடியே 25 இலக்ஷத்து 74 ஆயிரம் பேர் வசிக்கின்றார்கள். இலங்கையில் தாம் அரபிகளெனச் சொல்வாரை ஒத்த முகம்மதியருட்பட சுமார் பதின்மூன்று லக்ஷம் தமிழர்கள் வசிக்கின்றார்கள். இங்ஙனமன்றி நம் சாகித்தியவர்கள் மேற்கூறிய விருவிடங்களிலுமிருந்து உலகிலுள்ள எல்லாப் பிரதான ஸ்தானங்களுக்கும் சென்று குடியேறியிருக்கின்றார்கள். அவ்விதம் குடியேறியவர்களின் தொகையை யாம் ஈண்டு குறிக்க வியலாதவர்களாயிருப்பினும் இலக்ஷக்கணக்கானவர்கள் வெளியே யிருக்கிறார்களென நம்பக்கிடக்கின்றது.***

***திராவிடரெனச் சொல்லப்படும் தமிழர் மீது அன்புடையவனாய் இப்பத்திரிகை வெளிப்படுவதால், தமிழர்கள் தம்மீது அன்புடையவனாயிருக்கு மிப்பத்திர புத்திரனை அகமகிழ்ச்சியுடன் அங்கீகாரஞ்செய்து ஆதரித்து வருவார்களென நம்புகிறோம்''.***

(முதலாவது இதழ் தலைப்பு 12.10.1910)

இங்கு மதவேறுபாடுகட்கு அப்பாலான இனம் பற்றிய, இன வரலாறு, பொற்காலம் பற்றிய, மொழி மேன்மை பற்றிய திட்டவட்டமான ஒரு தமிழ்த் தேசியவாதக் கருத்தியல் முன்வைக்கப்படுவதைக் காணலாம்.

வரும்

www.tamilarangam.net



நிதானமாக புதிய சிந்தனையாளர்கள் சிந்தித்தார்கள். அதன் பின் ''மலையக வெகுசன இயக்கம்'' உதயமாயிற்று. இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் தலவாக்கொல்லையில் நடந்தபோது, மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர்களும், கல்விகற்றோர்களும் வருகை தந்து தங்களின் ஆதரவை வழங்கினர். மக்களின் துன்பத்திற்கு விடிவை நாடி, சிந்திக்கும் ஆற்றல் மிகுந்திருந்தோர் பலரும் கலந்து கொண்டு தங்களின் எண்ணக் கருத்துக்களை பகிர்ந்தனர்.

செயலால் மலையக மக்கள் உறுதியற்ற நிலைப்பாட்டுடன் வாழ்ந்தனர். சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி, ஒரு நிலையான எண்ணத்துடன் இருந்தவர்களும் நிலைகலைந்தனர். இலங்கையிலே தொடர்ந்து வாழ உறுதி கொண்டு இருந்தவர்களும், இந்தியா செல்லவேண்டும் என்ற முடிவிற்கே வந்துவிட்டனர். இக்காலகட்டத்தில் மலையக மக்கள் முன் மூன்று நிலைப்பாடுகள் தோன்றின; அவை, இந்தியா செல்லவேண்டும்; வடகிழக்கில் குடியேறவேண்டும்; மலையகத்திலே தொடர்ந்து வாழ வேண்டும் என்ப

யேற்ற விடயத்தில் ஈடுபட்டு செயலில் இறங்கின. சில புத்திஜீவிகள் மலையக மக்களுக்கு மலையகத்தில் பாதுகாப்பு இல்லை, இங்கு வருதலும் சாத்தியமில்லை என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

இந்தியாவுக்குச் சென்றாலும், வடகிழக்கில் குடியேறினாலும் உழைக்கின்ற மக்கள், உழைக்கின்றவர்களாக துன்பப்படுபவர்களாகவே வாழ்க்கை நடத்துகின்றனர். உழைப்பாளர்கள் மதிக்கப்படாத நிலையில் வேறு பிரதேசங்களுக்குச் சென்று புதிதாக வாழ்க்கையை

## மலையக அரசியல் கலாசார அமைப்புகள் — 14

இலங்கையில் மலையக மக்கள் 'சிறுபான்மை தேசிய இனம்' என்ற கருத்தினை இவ்வியக்கம் முன்வைத்தது. இக்கருத்தினை அரசு ஏற்றுக்கொண்டால் மலையக மக்களும் இம் 'மண்ணின் மைந்தர்கள்' என்பதை இந்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகும். அரசு இம்மக்களை இன்று ஒதுக்குமாப்போல் ஒதுக்கிவைத்திருக்க முடியாத நிலை உருவாகும் எனத் தீர்மானித்தது. இக்கருத்தினை முன்வைத்து பல கருத்தரங்குகளை நடத்தியது. இக்கருத்து தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அது செயல்பட்டது. பல தேசிய அமைப்புக்கள் இக்கருத்தினை விமர்சிக்கும் அளவிற்கு ஓர் எண்ணக்கருவை உருவாக்கியது. மலையக மக்கள் மத்தியில் புதிய சிந்தனை மாற்றத்திற்கு வழிவகுத்தது; மலையகமக்கள் 'சிறுபான்மை தேசிய இனமாக' ஏற்றுக்கொள்ளப்பட்டு இலங்கை மக்களோடு இணைத்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள் என்பதை நியாயப்படுத்தி; புள்ளிவிபரங்களோடு எடுத்துக்காட்டியதோடு நிற்காது 'தேசிய இனப்பிரச்சினை'' - என்ற நூலையும் இவ் அமைப்பின் பொதுச் செயலாளர் திரு.பி.எ.காதர் வெளியிட்டு மேலும் இக்கருத்துக்கு வலுவூட்டினார். ஐ.தே.க.கட்சியின் உயர்மட்டத்தில் இக்கருத்து சம்பந்தமாக பல அபிப்பிராயங்கள் பரிமாறப்பட்டுள்ளன. இக்கருத்தினை ஆதரித்து, தேசிய பத்திரிகைகளில் கருத்து வெளியிடப்பட்டன.


மலையக மக்களின், அரசியல் பொருளாதார, சமூகப்பிரச்சினைகளை அரசியல் கண்ணோட்டத்துடன் சிந்தித்தே செயற்படவேண்டுமென இவ்வியக்கம் கருதியது, மலையக மக்கள் சமவுரிமையுடன் இந்நாட்டில் வாழவேண்டும்; அவர்களின் தாயகம் மலையகமே என்ற கருத்தினை முன்னெடுத்துச் சென்றது.

இவ் இயக்கத்தை திருவாளர்கள்: பி.எ.காதர், எ.லோறன்ஸ், வி.ரி. தர்மலிங்கம், எஸ்.சரவணப்பிரகாசம், தேவசிகாமணி, சுப்பிரமண்யம் ஆகியோருடன் திருவாளர்கள்: பி.சந்திரசேகரன், எம்.நாகலிங்கம், கே.மெய்யநாதன் ஆகியோரும் இணைந்து தோற்றுவித்தனர். மக்கள் சக்தியைத் திரட்டி, செயல்படும் திட்டங்களுடன் குறுகிய காலமே செயல்பட்டனர். இவ் இயக்கங்கள் சொற்ப காலம் செயற்பட்டாலும் உறுதியான நிலைப்பாட்டை முன்வைத்து அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு முன்னெடுத்துச் சென்றது.

1977ம் ஆண்டு இடம் பெற்ற வன்

தேயாகும். இந்த மூன்று நிலைப்பாடுகள் பற்றி மலையக அமைப்புக்கள் தங்கள் எண்ணத்தை வெளிக்காட்டின.

ஆரம்பிப்பதைவிட வாழ்கின்ற இடத்திலேயே துணிவுடன் தங்கள் நிலையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினை மலை




இ.தொ.காங்கிரசும், மற்ற தொழிற்சங்கங்களும் மக்கள் இந்தியாவுக்குச் செல்வதை ஆதரித்தனர். 'மலையக மண்ணுக்கு உரியவர்களே மலையக மக்கள்' என்ற உணர்வை, துணிவை மக்கள் மனதில் ஏற்படுத்த முடியாத இவர்கள், பயப்பீதியுடன் வாழ்ந்த மக்களை மேலும் பயமுறுத்தவதுபோல் செயல்பட்டார்கள். இந்தியா செல்வதே நன்மை பயக்கும் என்று துண்டுப்பிரசுரம் வெளியிட்டும், விண்ணப்பப் படிவங்கள் அச்சடித்துக் கொடுத்தும் பிரச்சாரம் செய்தனர்.

வடகிழக்கில் பெரும்பாலான நிலங்கள் காடுகளாகக் கிடந்தன. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை அரசாங்கம் திட்டமிட்டு

யக வெகுஜன இயக்கம் முன்வைத்தது.

இந்திய மண்ணிற்கு சென்றோர் துன்பத்தில் வாடுகின்ற நிலைதான் எங்கள் காதுகளுக்கு எட்டுகின்றன. வட- கிழக்கில் குடியேறினாலும்,வளர்ந்து வரும் அரசியல் மாற்றத்தினால் இப்பகுதி வட-கிழக்கு மீக்களுக்குரியது, வந்தேறியவர்களுக்கு இங்கு இடமில்லை என அடித்துத் துரத்தக்கூடிய நிலைக்கு ஒரு காலத்தில் தள்ளப்படலாம். எனவே எப்போதும் வாழும் இடத்தைப் பலப்படுத்திக் கொண்டு வாழ்வதே நன்மை பயக்கும். மலையக மக்கள் சிறுபான்மை தேசிய இனமாக மலையகத்திற்கு உரியவர்களாக, குடியுரிமை

**வி.ரி.தர்மலிங்கம்**

இப்பிரதேசத்தில் குடியேற்றியது. இதனை முறியடிக்கும் முகமாக தமிழ் மக்களின் செறிவை அதிகரித்துக் கொள்ளும் எண்ணத்துடன் பாதிக்கப்பட்ட மனநிலையில் இருந்த மலையக மக்களை இப்பிரதேசத்தில் குடியேற்ற எண்ணம் கொண்டனர். அதற்கு ஆதரவாக பல அமைப்புக்கள் செயல்பட்டன. தமிழர் விடுதலைக் கூட்டணி, காந்தீய இயக்கங்கள் ஆகியன இதில் அதிகம் ஈடுபாடுகாட்டின. மலையகத்தில் செயல்பட்டஇலங்கைத் தொழிலாளர் கழகம், மலையக மறுமலர்ச்சி மன்றம் (HECSEL) கிறிஸ்தவ தொழிலாளர் மன்றம் போன்ற அமைப்புக்கள் நேரடியாக இக்குடி

படைத்தவர்களாக, இந்த நாட்டில் வாழும் நிலையை உருவாக்க வேண்டும் என்ற கருத்தினை ''மலையக வெகுசன இயக்கம்'' முன்வைத்து செயல்பட்டது.

1983ம் ஆண்டு ஆடிக்கலவரம் தமிழ் மக்கள் அனைவரையும் ஆட்டிப்படைத்தது. மலையகத்தில் இளைஞர்கள் மத்தியில் சிந்தனை மாற்றம் ஏற்பட்டது. உறுதியுடன், இந்நாட்டில் பாதுகாப்புடன் வாழும் வழியை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கியது. ஆனால் ''மலையக வெகுசன இயக்கம்'' ஆடிக்கலவரம் காரணமாக செயலிழந்தது.

## சிலுவைகளும், ஏமாற்றுப்பிரிவும்

உடல்களை சுமந்தபடி
மலை
முகட்டில் நின்றிருந்த
சிலுவைகளெல்லாம்
தங்கள் கால்களை
பிடுங்கி எடுத்துக்கொண்டு
நடந்து சென்றன தெற்காய்.

என்னுடலைச் சுமந்து நின்ற
முதிரைச்சிலுவை மட்டும்
தன்னை
அசைக்கக் கூட முடியாமல்
நின்றிருந்தது தன்னிடத்தில்.

நடந்து சென்ற சிலுவைகளெல்லாம்
தாங்கள் தாங்கியிருந்த
உடல்களை
கரையில் போட்டுவிட்டு
ஏமாற்றுப்பிரிவில் குதித்தன.
சந்தோஷமாக குளித்தன.
நீச்சலடித்து விளையாடின.
ஒன்றுக்கொன்று
தண்ணீரால் அடித்து
தனகிக் கொண்டன.

ஏமாற்றுப்பிரிவு
பெருக்கெடுத்தது திடீரென்று.
கரையில் கிடந்து உடல்களையெல்லாம்
அள்ளிச் சென்றது.

நீச்சல் முடிந்த சிலுவைகள்
நிர்வாணமாய்
மலையேறி வந்தன.
சிரித்தது எனது சிலுவை.
என்னுடலால் உடைபூண்ட
பெருமிதமதற்கு.

-தமயந்தி

## நிறவெறி

எத்தனையோ பொழுதுகள் வந்து போகின்றன.
கறுப்பர்களுக்கென்று ஒரு பொழுதும் வந்ததேயில்லை.
அடிக்கடி வரும் நிறவெறிப் பொழுதொன்றில்...
ஆரியக் குடும்பத்தில் வாடகைக்கு இருக்கும் மனிதர்கள்.
வசந்தங்களை, கனவுகளை, பனிமலர்களை நுகர அழையாது வந்தவர்.

எப்போதும், எப்போதும் போலவே...
கொண்டாட்டங்களிலும், விழாக்களிலும்
பியர் நுரையிலும், சிகரட் புகையிலும் நீச்சலடித்து
கழியும் கடந்த காலங்கள்.

1994யில் ஒரேயொரு விருதுக்காய்
உலகமே உதைபடும் பந்தாட்டம் போல்.
"ஹலோ, கிறேப்சி, பொக்குவா"—என்ற
வணக்கப் பதங்களைக் கூடச் சொல்லாதீர்கள்
பந்துகள் நிறையவே தேவை.
இந்த மனிதர்கள்... நிறத்தையே...
"வெள்ளை நிறத்தையே"
பார்த்துப் பார்த்துப் பழகிப் போனவர்கள்.

லெபனீயச் சிறுமியை நெருப்பில் நாசி சுவைக்க
பொப்பிசைகள் அதிர
நாவில் எழுந்தது பாடலொன்று.

"குழந்தைகளை விரும்புகிறோம்.
இதமான துண்டு துண்டாக".

நிறவெறிப் பொழுதுகளில்...
ஆசியக் குழந்தைகளை வீதியில் செல்ல விடாதீர்கள்
கழுகுக் கண்கள் மொய்த்த வண்ணம்.

—கவிதாஞ்சன்—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண்ணிலைவாத நோக்கில் தமிழ் சினிமா — 3

சுசீலா ரவி

## 1970 பின்னரான திரைப்படங்களின் பொதுவான போக்கு

முன்னர் காணப்பட்ட திரைப்படங்களில் தொடர்ச்சியாக 1970க்குப் பின்னரும் திரைப்படங்கள் வெளிவரத் தொடங்கின. அதே கருத்துப் போக்குகள், அதே அம்சங்கள் இடம் பெற்றன. அவை மெருகேற்றிக் கொடுக்கப்பட்டன. இந்த மாற்றங்கள் திடீரென ஏற்பட்டனவல்ல. இதே காலத்தில் தான் அதிகமான திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. அதிகமான ஸ்ரூடியோக்கள் திறக்கப்பட்டன. அத்துடன் படப்பிடிப்புத் தளங்களும் கட்டப்பட்டன. அதிகளவு தொழில் நுட்பவியலாளர்கள் உருவாகினர். ஸ்ரூடியோக்கள் தொழிற்சாலையாகிப் பொருட்களை உற்பத்தி செய்வது போலத் திரைப்படங்களை உற்பத்தி செய்து வெளியிட்டன. திரைப்படத் தயாரிப்பினை ''கனவுத் தொழிற்சாலை'' என எழுத்தாளர் சுஜாதா கூறுகிறார். இந்தியர்களே உலகிலேயே மிக அதிகமான திரைப்படங்களைத் தயாரிப்பவர்களாவர். தெலுங்குத் திரைப்படத்துக்கு அடுத்ததாகத் தமிழ்த் திரைப்படங்களே அதிகமாக வெளிவந்தன. திரைப்படக் கலையாக்கத்தின் முன்னேற்றத்தை விட தயாரிப்பில் தான் அதிகமாக முன்னேறின. இவ்வாறான திரைப்படங்கள் பெண்கள் பற்றி எத்தகைய கருத்தினைக் கொண்டுள்ளது என்பதே இங்கு நோக்கவேண்டியுள்ளது. பொதுவாகப் பெண்கள் பற்றிப் பல கருத்துக்கள் இங்கு கூறப்படுகின்றன. இது முற்பட்ட காலப்படங்களின் தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும் இருந்த போதிலும் சமூக அரசியல் பொருளாதாரக் காரணிகளினால் வேறுபாடான கருத்துக்களும் வெளிப்பாடு அடைந்தன. இது இங்கு நோக்கப்பட வேண்டியது.

இக்கட்டுரைக்கு மேலும் வலிவு சேர்ப்பதற்கு சில திரைப்படங்களை வகை மாதிரியாக கொண்டு அவற்றின் சில அம்சங்களைத் தெளிவு படுத்தி அதன் ஊடாக ஏனைய திரைப்படங்கள் பற்றிய பார்வையை விசாலிக்கலாம். **திக்கற்ற பார்வதி(1974), அரங்கேற்றம்(1973), அவள் ஒரு தொடர் கதை(1974), சில நேரங்களில் சில மனிதர்கள்(1977), தீர்க்க சுமங்கலி(1974), அவள் அப்படித்தான்(1979), மெட்டி(1982), அக்கினி சாட்சி(1983), புதுமைப் பெண்(1984), நான் பாடும் பாடல்(1984), சிறை(1985), சிந்து பைரவி(1985)** போன்ற திரைப்படங்களையும் இங்கு நோக்கலாம். இவை மாத்திரம் அல்ல வேறு சில திரைப்படங்களையும் ஆராயலாம்.

1970க்குப் பின்னர் திரைப்படங்களில் ஒரு பெரும் மாறுதல் ஏற்படிருக்கின்றது என முன்னர் கவனித்தோம். தொழில் நுட்ப ரீதியாகப் பெரும் வளர்ச்சி அங்கு ஏற்படத் தொடங்கியது. புதிய புதிய சாதனங்களும், புதிய புதிய கலைஞர்களும் தோன்றினர். கலர் லபோற்றரி சென்னையிலே உருவாகின. புதிய புதிய படங்களை சிருஷ்டிப்பதை விட கலர் லபோற்றரியை விரிவுபடுத்துவதிலும் புதிய இயந்திர சாதனங்களை அதில் இணைப்பதிலும் ஜெமினி நிர்வாகம் கவனம் செலுத்தத் தொடங்கியது. பிற தயாரிப்பாளர்களின் வண்ணப் பிரதிகளை உருவாக்குவதில் ஜெமினி கலர் லபோற்றரி முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளத் தொடங்கியது. 2'தமிழகத்தில் வண்ணப் படப் பிடிப்பின் வருகையைத் துரிதப்படுத்திக் கொள்வதிலும், அதிகப்படுத்திக் கொள்வதிலும் முதல் ஸ்தாபனமாக ஜெமினி விளங்கியது'' என அரங்கநாதன் கூறியிருப்பதனை நினைவு கூரலாம்.

தமிழ் திரைப்பட உலகம் வண்ணப் படங்களை அதிகமாகத் தயாரிப்பதுடன் அல்லாது கனவுகளையும் அள்ளி வழங்கத் தொடங்கியது. திரைப்படங்களில் கனவுகளை அள்ளி வழங்குவதற்குத் தொழில் நுட்பக் கலைஞர்கள் பெரிதும் உதவினர். இங்கு கவர்ச்சி மிக முக்கியமான பொருளானது. கதா நாயகிகளும் கவர்ச்சி காட்டத் தொடங்கினர். வில்லிப் பாத்திரம் ஏற்பவர்களும் கவர்ச்சியைக் காட்டினர். கிராமத்துப் பெண்ணாகக் கதாநாயகி பாத்திரம் ஏற்றுக் கொண்டாலும் கனவுக்காட்சியில் கவர்ச்சி காட்டுபவளாகக் காணப்படுகின்றாள். விஜய லலிதா, சோதிலஷ்மி, ஆலம், கெலன், சகுந்தலா, அருணா ராணி, ஜெய மாலினி, சில்க் ஸ்மிதா, அனுராதா, விஜய சாந்தி என இத்தொடர் நீண்டது. இவர்களில் ஒருவராவது நடிக்காத திரைப்படங்களோ, இவர்கள் காட்டாத கவர்ச்சிகளோ வெளி வந்ததில்லை. ஆடை விஷயத்தில் மிகவும் தாராளமாக நடந்து கொண்டார்கள். கவர்ச்சி நடிகைகள் நவீன ஆடைகள் அணிவதுடன், உடற்கட்டின் அழகையும் தெரியப்படுத்தினார்கள். கதாநாயகிகளும் இவ்வாறே கவர்ச்சியாக நடிப்பது முக்கிய அம்சமாகி விட்டது.

திரைப்படத்தின் பிரதான அம்சமான இசை ஒரு பெரும் வளர்ச்சியை இக்காலகட்டத்தில் அடைந்தது. இசை பெரும் அளவுக்கு விரசத்தை வெளிப்படுத்துவபனாகக் காணப்படுகின்றது. பாடல்கள் இரட்டை அர்த்தம் தொனிப்பதாகவும், விரசத்தை வெளிப்படுத்தும் முனகல் கொண்டதாகவும் வெளிப்படுகின்றன. பாடகியரே முனகலை அதிகம் வெளிப்படுத்துகின்றார்கள். பாடல் ஆசிரியர்களோ பெண்களைக் கீழ்மைப்படுத்திப் பாடல்கள் எழுதுகின்றார்கள். பெண்களின் கவர்ச்சியைப் பாடல்கள் மூலம் எடுத்துக் காட்டுகின்றது.





இது ஒரு வியாபாரமாக இருப்பதால் இவை சாத்தியமாகின்றன. இதே நேரம் உரிமை பற்றி எழும் பாடல்களும் இல்லாமல் இல்லை.

**''துணிந்தால் துயரமில்லை துக்க**
**மில்லை வெட்கமில்லை**
**பணிந்தால் தான் அடக்க வைப்**
**பார் உலகிலே - மகளே**
**பாய்ந்தாலே அடங்கி நிற்பார்**
**காலிலே''.**

இது 'தாய் வீட்டுச் சீதனம்' என்ற படத்தில் உள்ள பாடல் ஆகும். இவ்வாறு புதுமைப்பெண் திரைப்படத்திலும் காணலாம்.

வசனம் என்கின்ற அளவிலும் இந்த நிலையைக் காண முடிகிறது. இரட்டை அரத்தம் தொனிக்கும் வசனமாகவே அதிகம் காணப்படுகின்றது. பெண்களைக் கீழ்மைப்படுத்தம் போக்கே அதிகம். வசனங்கள் அதிகம் பெண்களைப் போகப் பொருளாகவே காட்டுகின்றன. இதிலிருந்து விலகி சிறிது வித்தியாசமாக சில திரைப்படங்களில் வசனம் இடம் பெறுகின்றது. உதாரணமாக 'தாய்க்குலமே வருக' எனும் திரைப்படத்தில் பெண்களுக்கு தாலாட்ட மாத்திரமன்றி, சண்டை பிடிக்கவும் தெரியும் எனக் கருத்துப்படவும், அகப்பை பிடிக்கும் பெண்களால் ஆயுதமும் தூக்க முடியும் எனக் கருத்துப்படவும் வசனம் வருவதனைக் காணலாம். இன்னும் 'மெட்டி' திரைப்படத்தில் தங்கையின் தாலியை அறுத்து நெற்றியில் உள்ள குங்குமத்தை, குங்குமத்திலேயா பெண்களுக்கு உலகம் அடங்கி இருக்கின்றது என ஆண் கேட்பதில் இருந்து இதனை கவனிக்கலாம். புதுமைப்பெண், அக்கினி சாட்சி போன்ற திரைப்படங்களிலும் இத்தகைய வசனங்களைக் காணலாம். இங்கு இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனங்களும், பெண்களின் அடிமைத்தனத்தைக் கூறும் வசனங்களும். பெண் உரிமையை நலிவுறுத்தும் வசனங்களும் வருகின்றன. நடனம் இல்லாத திரைப்படங்கள் இக்காலகட்டத்தில் இல்லை எனக்கூறலாம். மேடையில் நின்று இரசிகர்களைப் பார்த்து நடனமாடுவது போல காதலனும் காதலியும் பூங்கா வீதிகள், வீடுகள் ஆகியவற்றில் ஓடிப்பிடித்து ஆடுவார்கள். சில சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு உதவியாகப் பெண்கள் குழுவாக ஆடுவார்கள். பெண்கள் ஆடும் போது மிகவும் கவர்ச்சிகரமான உடைகளை அணிந்து ஆடுகிறார்கள். புதுமைப் பெண் திரைப்படத்திலும் இவ்வாறே பெண்கள் கவர்ச்சிகரமாக ஆடுகிறார்கள். வியாபார நோக்கிலான திரைப்படங்களுக்கு இத்தகைய காட்சிகள் அவசியமாகின்றன. இங்கு பெண்கள் விற்பனைப் பண்டமாக பணிக்கப்படுகின்றார்கள். இதனை விட வியாபார நோக்கில் அமைந்த அனைத்துத் திரைப்படங்களிலும் கிளப் டான்ஸ், கபாலே நடனம் போன்றன காணப்படுகின்றன. விஜய லலிதா, சோதிலஷ்மி, கெலன், ஆலம், சகுந்தலா, அருணா ராணி, ஜெய மாலினி, சில்க் ஸ்மிதா, அனுராதா, சங்கீதா, டிஸ்கோ சாந்தி போன்றோர் தமிழ்த் திரைப்படங்களில் இத்தகைய டான்ஸ் ஆடுபவர்களாகக் காணப்பட்டனர். மிகவும் கவர்ச்சிகரமான கோதைக்கு உரியவர்களாகவும், கோதைப் பொருட்களாகவும் இவர்கள் சித்தரிக்கப்படுகின்றார்கள். இவர்கள் கிளப் டான்சர்களாக மாத்திரமல்லாது பிராந்திய நடனங்கள் என்கின்ற பெயரிலும் கவர்ச்சிகரமான உடைகளுடன் நடனம் ஆடுகின்றார்கள். இவ்வாறு ஆடுபவர்கள் பெரும்பாலும் வில்லிகளாகவும், உடலை விற்பவர்களாகவும், சில சமயங்களில் கதாநாயகருக்கு உதவி செய்பவர்களாகவும் காட்டப்படுகிறார்கள்.

1970க்குப் பின்னரான திரைப்படங்கள் சிறுபான்மையாயினும் கூட சமூக பிரக்ஞை அதிகம் இருப்பதைக் காணலாம். முன்னைய காலத் திரைப்படங்களுடன் ஒப்பிடும் போது ஓரளவுக்காயினும் விஞ்ஞான பூர்வமாக அணுகும் தன்மையும், சமூகப் பிரக்ஞையுடன் கூடிய கலையாக்கமாகவும் காணப்பட்டது. இக்காலத் திரைப்படங்கள் பெண்கள் பற்றி அதிகம் பேசின. பெண்கள் உரிமை, சமூகத்தில் அவர்களின் நிலை, தன்மை, அவர்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி எல்லாம் திரைப்படங்கள் பேசின. சமூகத்துடன் ஒட்டி பிரக்ஞை பூர்வமாக சில அம்சங்களை இக்காலத் திரைப்படங்கள் வெளிக்காட்டின. ஆண் பெண் உறவு, குடும்பச் சிக்கல்கள், சின்னச் சின்ன சந்தோஷங்கள், பெரிது பெரிதான துக்கங்கள் போன்றன சில திரைப்படங்களில் அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டன. ஒப்பீட்டு அளவில் அதிகமான திரைப்படங்கள் கலா பூர்வமான வெளிப்பாடாக இருந்தன. தொழிலாளர் பிரச்சினைகள் அடிநிலை மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் போன்ற இவைகள் எல்லாம் திரைப்படங்களில் வெளிவந்தன. இப்போராட்டங்களில் பெண்கள் பங்கு கொண்டு போராடுவதை வலியுறுத்தின. உதாரணமாக, 'ஏழாவது மனிதன்' திரைப்படத்தில் தொழிலாளர் பிரச்சினைகளில் பெண்களின் பங்கும் அவற்றில் அவர்களின் போராட்டங்களும் காட்டப்படுகின்றன. அவர்கள் போராடுவதற்கு ஆயுதம் தூக்குகிறார்கள். கரிசல் கிராமத்தில் வாழும் அடிநிலை மக்களின் தண்ணீர் இல்லாப் பிரச்சினையை சொல்லும் தண்ணீர் தண்ண்ீர் எனும் திரைப்படம், பல வழிகளிலும் பெண்களின் போராட்டத்தைக் காட்டுகின்றது. இத்திரைப்படத்தின் கதையை நகர்த்திச் செல்பவர்களாகப் பெண்ணே சித்தரிக்கப்படுகின்றாள். அவளே அங்கு நடைபெறும் போராட்டத்திற்கு தலைமை வகித்துச் செல்பவராகக் காட்டப்படுகின்றாள். சுதந்திர வேலியாகக் கூட அவளைக் காட்டப்படுகின்றது.

கண் சிவந்தால் மண் சிவக்கும் திரைப்படத்தில் நிலப்பிரபுக்கு எதிரான போராட்டத்தில் பெண்களுக்கு உரிய பங்கு முக்கியமாக வழங்கப்படுகின்றது. நிலப்பிரபுவின் வைப்பாட்டியாக இருந்த பாப்பாத்தியும் வர்க்க உணர்வின் அடிப்படையில் அடிநிலை மக்களுடன் இணைந்து நிலப்பிரபுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுகின்றாள் அம்மக்களும் தங்களுள் ஒருத்தியாக அவளையும் கருதிப் போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இவைகளை நோக்கும் போது இக்காலத்திய திரைப்படங்களில் சமூகப் பிரக்ஞை அதிகம் காணப்படுகின்றது எனலாம்.

(வரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*சென்ற இதழ் தொடர்ச்சி*

சாதாரண லௌகீக வாழ்வில் நாம் சந்திக்க நேரும் அனைத்துப் பிரச்சினைகளையும் எம்மைப் போன்றே இந்தக் கவிஞர்களும் சந்திக்க நேர்கிறது. இதற்கும் மேலால் தமது மனோவியல் தரிசனங்களுக்கும் யதார்த்த நடப்பியல்களுக்கும் இடையிலான பாரிய போராட்டங்களையும் இவர்கள் எதிர்கொள்கிறார்கள். நம்மைப் போலவே இவர்களும் சில கணங்களில் சோர்வுறவும் சில கணங்களில் அதீத நம்பிக்கையுடன் செயற்படவும் காண்கிறோம். இவர்கள் நிராசைகளினதும் நம்பிக்கைகளினதும் கூட்டுக்கலவையாகவே பல சந்தர்ப்பங்களில் தென்படுகிறார்கள். இதுவா செய்தி என்று எரிந்த கட்சி, எரியாத கட்சி விவகாரம் இவர்களில் சாத்தியமில்லை.



பிரகடனம் செய்யும் கவிதையாக அறிவிக்கும் அவலம் மாதவனுக்கு நேர்கிறது.

**''என்னிடம்**
**நம்பிக்கையும் முடிவும் சொல்லத் தக்க**
**வார்த்தைகள் இல்லை''**

என்று 1989ல் சிவரமணி எழுதியதாக இவர் தனது 'சரிநிகர்' கட்டுரையில் தெரிவிக்கிறார்.

கலப்படம் செய்யும் கபடத்தனமான வியாபாரியின் கயமைத்தனத்தைத்தான் மாதவனின் இந்தச் சரிநிகர் மேற்கோளில் காண்கிறேன்.

சிவரமணியின் கவிதை இப்படித் தான் தொடங்குகிறது:

**''என்னிடம்**
**ஒரு துண்டுப்பிரசுரத்தைப் போல்**
**நம்பிக்கையும் முடிவும் சொல்லக் கூடிய**
**வார்த்தைகள் இல்லை''**

ஒரு எழுத்து மாற்றமே கூட கவிதை பற்றிய தவறான புரிதலுக்கு இட்டுச் செல்லும் சூழலில் சிவரமணியின் இந்த நேர்த்தியான கவிதையில் தனக்கு வசதியாக 'ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல்' என்ற வரியை மிகவும் சாமர்த்தியமாக மாதவன்



இவையெல்லாம் அடிபட்டுப் போன பழைய சமாச்சாரங்கள்.

''தனது SARRASINE என்ற கதையில் ஒரு பெண்ணின் உருவில் மறைந்திருக்கும் காயடிக்கப்பட்ட ஒரு ஆண் பாடகனைப் பற்றி விபரிக்கும் போது பால்ஸாக் பின்வருமாறு எழுதுகிறார்:

''அவளின் திடுமென்ற அச்சங்கள், அவளின் பகுத்தறிவு சாராத வினோத ஆசைகள், அவளின் இயல்பான கவலைகள், அவளது முரட்டுத்தனமான துணிச்சல், அவளின் பிகுபண்ணல்கள், மனோகரமான அவளின் மென்னுணர்வு எல்லாமாய் அது அவளேதான்''

(ரோலன்ட் பார்த் கேட்கிறார்)

இந்தக்கதையில் இப்படிப் பேசுவது யார்?

ஒரு பெண்ணின் தோற்றத்தில் மறைந்திருக்கும் காயடிக்கப்பட்ட ஆண்பாடகனைத் தெரிந்து கொள்ள மாட்டாத இக்கதையின் நாயகனா? அல்லது பெண் பற்றிய தனது சுயமான தத்துவத்தோடு தனது தனிப்பட்ட அனுபவத்தின் பலத்தில் பேசும் பால்ஸாக் என்ற தனிநபரின் குரலா? பெண்மை பற்றி 'இலக்கியபூர்வமான' கருத்துகளை முன்னெடுக்கும் பால்ஸாக்

# சிவரமணி

# ஒரு முறை செத்தது போதும்!

கறுப்புமையால் அடித்துவிட்டுப் போகிறார்.

சிவரமணியின் இந்தக் கவிதை அவர் எழுதிய சூழலில், எத்தகைய நிகழ்வுகளும் நியாய - அநியாயங்களுக்கப்பால் அதிகார லகான்களைத்தங்கள் கையில் வைத்திருப்பவர்களால் நியாயப்படுத்தப்பட்டுப் போய்விடும் நிலைமைக்கு எதிரான சமூகக் கண்டனமாகும். கடந்த பத்தாண்டுகளில் யாழ்ப்பாணத்தின் அரசியற் சூழலை சித்திரிக்கும் பதாகையின் முகப்புப் பொறிகளாக சிவரமணியின் இக்கவிதை வரிகளை நாம் பதிக்க முடியும். எந்தக் கூச்சமும் இல்லாமல் சிவரமணியின் கவிதையில் 'ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல்' என்ற வரியை நீக்கிவிட்டு அவர் வாழ்வின் மீதான அவநம்பிக்கையைத்தான் இதில் வெளிப்படுத்துகிறார் என்று கூறுவது எவ்வளவு **வக்கிரமான - விகாரமான வெளிப்பாடு!**

சிவரமணி அவநம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அவர் திரித்து மேற்கோள் காட்ட முயன்றிருக்கும் அதே கவிதையில்தான்,

**''நான் மனிதனாய் வாழும் முயற்சியில்**
**பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்''**

என்றும் வருகிறது.

ஒரு கசாப்புக் கடைக்காரனின் குரோத முனைப்புடன் கத்தியைக் கொண்டு இக்கவிதையைக் கூறுபோட்ட மாதவன் சிவரமணியின் இந்தக் கவிதை வரிகளில் ''வாழ்வின் மீதான நம்பிக்கையைப் புலப்படுத்தும்'' வசனங்களைத் தரிசித்திருக்கலாமே! அவர் தமது பகுப்பாய்வில் வகுத்துள்ள 1986 பட்டறைக்கு வசதியாகத் தூக்கிப் போடத்தக்க வரிகளாயிற்றே இவை! 'கருத்துநிலை வளர்ச்சிக்கு' இது முரண்டு கொண்டு நிற்கிறதே! அதைத் தெரியாத மாதிரி விட்டுவிடுவது மாதவனுக்கு வசதியாகப் போய்விட்டது.

இதே கவிதையின்,

***''இந்தச் சமூகத்தின் தொப்புள் கொடிக்கு***
***துப்பாக்கி நீட்டப்படும் போது***
***ஒருமெல்லிய பூநுனியில்***
***உட்காரக் கூடிய***
***வண்ணத்துப்பூச்சியின் கனவு***
***எனக்குச் சம்பந்தமற்ற***
***ஒரு சம்பவிப்பு மட்டுமே''***

என்று வரும் வரிகள் யதார்த்த வாழ்வின் குரூரத்திற்கும் பிரகாசமான அவரது அழகிய கனவுக்கும் இடையில் நிகழும் போராட்டத்தின் வீரியம் மிகுந்த வரிகள். ''கண்முன்னால் உள்ள உலகம் பிற்போக்குச் சக்திகளுக்குச் சொந்தமாக்கப்பட்டு விட்டது. நாலாபுறத்தாலும் கபளீகரம் பண்ணப்பட்டு விட்ட இந்த மண்ணின் எதிர்காலம் தான் என்ன?'' என்று ராஜனி துயருற்று எழுதிய சமூகத்தை கவிதையிலே எதிர்கொள்ள முனைந்த சிவரமணி என்ற கவிஞையின் நெஞ்சிலே தாங்கிய ரணத்திலிருந்து சிந்தும் ரத்தத் துளிகளுக்கும் அவள் அவாவி அணைத்துக் கொள்ளத்

## மு.நித்தியானந்தன்

துடித்த அற்புதமான கனவுலகிற்கும் இடையே நிகழ்ந்த கூர்மையான போராட்டத்தின் கனல் தெறிப்புகள் இவை.

1991 மே மாதம் 19ம் திகதி தற்கொலை செய்து கொண்டு வருவதற்காகவே சிவரமணி கவிதை எழுதியது மாதிரி மாதவன் தனது கட்டுரையில் தீட்ட முயலும் சித்திரம் விகாரமானது. இதுபோன்ற கருத்து நிலை வளர்ச்சிப் பின்னல்கள் எல்லாம் கவிதையின் ஒற்றை அர்த்தப் பரிமாண வழிபாட்டிலிருந்து எழுவதாகும். கவிதை பற்

என்ற கதாசிரியனின் குரலா? பிரபஞ்ச ஞானத்தின் குரலா? கற்பனாவாத உளவியலின் குரலா? எதுவென்று நாம் ஒருபோதுமே கூறிக் கொள்ள முடியாது. இதற்குரிய நல்ல காரணம் ஒன்றே ஒன்றுதான். எழுத்து என்பது ஒவ்வொரு குரலையும் அதன் தோற்றத்தின் ஒவ்வொரு புள்ளியையும் அழித்து எழுதுவதுதான்''

(Image - Music - Text என்ற நூலில் Roland barthes)

கவிதையின் பன்முக அர்த்தபரிமாணம் நவீன எழுத்துலகில் இன்று வலிமையோடு பேசப்பட்டு வருவதாகும். வக்கிரங்களையும் மனவக்கரிப்புளையும் களைந்துவிட்டு ஆத்மசுத்தியோடு சிவரமணியின் கவிதையுலகைத் த்ரிசிக்க முனையும் ஒருவருக்கு சிவரமணியின் கவிதைகள் எழுப்பும் உணர்வலைகள் மிகவிரிந்தன.

''சிவரமணியும் தற்கொலையும்'' என்ற கட்டுரையில் நான் மொழி பெயர்த்திருக்கும் மாலசேதுங்கின் கட்டுரையிலேயும் மாதவன் தனது திரித்தல் கைவரிசையைக் காட்ட முனைந்திருக்கிறார்.

மாஓ தற்கொலை பற்றிக் கூறுகையில் 3 விடயங்களைக் குறிப்பிடுகிறார். முதலில் தற்கொலையை அவர் நிராகரிக்கிறார். இரண்டாவது சமூகத்திற்கு எதிராகப் போராடியாக வேண்டும் என்கிறார். இந்த அம்சத்தை வலியுறுத்துகையில் ''நாம் ஒரு போராட்டத்திலேயே மரணிக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு மாஓ அதற்கு அடுத்த வரியில், ''மூன்றாவதாக தங்களது சொந்த வாழ்க்கைக்கு தாங்களே துணிச்சலோடு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டவர்கள் மீது மக்கள் மரியாதை செலுத்துகிறார்கள் என்றால், அது ஒருநாளும் அவர்கள் தற்கொலையைக் கௌரவிக்கிறார்கள் என்று ஆகமாட்டாது''

என்று கூறுகிறார். மாஓவின் இந்தத் தொடர்ந்த வரிகளை - மாஓ வலியுறுத்தும் மூன்றாவது அம்சத்தை மாதவன் தனது மேற்கோளில் சாமர்த்தியமாகத் தட்டி விட்டு, அதற்கு அடுத்த பந்தியில் வரும் வரிகளை முதற்பந்தியோடு சேர்த்து தனது பாணித்திரிப்பு வேலையை நடத்துகிறார். அறிவாய்வுலகில் இம்மாதிரியான அடிப்படைப்பண்பு மீறப்படுவது மோசமான நேர்மையீனமாகவே கருதப்படும்.

சுந்தரம் தொடர்பான கொலையை ஆதரித்துத் துண்டுப் பிரசுரம் எழுதிக் கொடுத்ததாக என் தொடர்பாக மாதவன் கூறும் அபாண்டமான பொய்யுரையை அவரது மிக இழிந்த மனநிலையைக் காட்டுகிறது. எந்தவிதக் கூச்சமும் இல்லாமல் ஒரு பொய்யை இவர்களால் எப்படி இவ்வாறு எழுதிச் செல்ல முடிகிறது என்பது வியற்பிற்குரியது.

''என் மனம் மிக மென்மையானது. உண்மையில் நான் அழுதுவிட்டேன். சிறு அதிர்ச்சி கூட என்னால் தாங்க முடியாது..... ஆகிய தொகுப்புகள் வாசித்தவுடன் என் அழுகையை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. என் கண்ணீர் பெருகியது. என்ன செய்வது? நம் தலைவிதி'' என்று சரிநிகரில் (1-5 ஒக்ரோபர் 93) எழுதப்பட்டிருக்கும் வாக்கியங்களைத்தான் மாதவனின் இந்தக் விமர்சனக் கட்டுரையைப்படித்த போது திருப்பி வாசிக்கத் தோன்றியது,

மாதவன் எழுதியுள்ள இக்கட்டுரைக்கு சிவரமணியின் கவிதையை விடச் சிறந்த விமர்சனத்தை பதிலாக என்னால் தரமுடியாது. சிவரமணியின் கவிதை இது:

*''பேய்களால் சிதைக்கப்படும்*
*பிரேதத்தைப் போன்று*
*சிதைக்கப்பட்டேன்.*
*ஆத்மாவின் உணர்ச்சிகள்*
*எல்லாம்*
*இரத்தம் தீண்டிய கரங்களால்*
*அசுத்தப்படுத்தப்பட்டன.*
*என்னை*
*மேகத்திற்குள்ளும்*
*மண்ணிற்குள்ளும்*
*மறைக்க எண்ணிய வேளையில்*
*வெளிச்சம் போட்டுப் பார்த்தனர்*
*அவர்களின்*
*குரோதம் நிறைந்த பார்வையும்*
*வஞ்சகம் நிறைந்த சிரிப்பும்*
*என்னைச் சுட்டெரித்தன.*
*எனது*
*ஆசைகள், இலட்சியங்கள்*
*சிதைக்கப்பட்டன.*
*அவர்களின் மனம்*
*மகிழ்ச்சி கொண்டது.*
*அவர்களின் பேரின்பம்*
*என் கண்ணீரில் தான்*
*இருக்கமுடியும்*
*ஆனால் என் கண்களுக்கு*
*நான் அடிமையில்லை*
*அவர்களின் முன்*
*கண்ணீரைக் கொட்ட*
*என்வேதனை கண்டு*
*ரசித்தனர் அவர்கள்*
*என்றைக்குமாய் என்தலை*
*குனிந்து போனதாய்*
*கனவு கண்டனர்*
*ஆனால்*
*நான் வாழ்ந்தேன்*
*வாழ்நாளொல்லாம் நானாக*
*இருள் நிறைந்த*
*பயங்கரங்களின் ஊடாக*
*நான் வாழ்ந்தேன்*
*இன்றும் வாழ்கிறேன்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடிந்தும் விடியாதது...

**புதுமைப்பித்தனின் எழுத்துக்களால் ஆகர்ஷிக்கப்பட்டு அவரை நேரிலே சந்தித்தது மட்டுமன்றி பித்தன் என்ற புனை பெயரையும் வரித்துக் கொண்ட மட்டக்களப்பின் மூத்த தலைமுறை எழுத்தாளர் திரு.மீராஷா(1922 - 1994) அண்மையில் காலமானார்.**

**தமிழ் எழுத்தாளராகப் பிறந்துவிட்ட அவலம் அயல் விடு கூட அவர் பெருமை பற்றி அறிந்திருக்கவில்லை. அவர் மரணித்த பின்தான் அவரது சிறுகதைப் தொகுப்பு வரவேண்டும் என்பது மற்றொரு அவலம். மரணம் பற்றி நல்லதொரு நாவல் எழுதிய சம்பத் தனது நாவலின் 'புறாவ்'வினை ஆவது பார்த்துவிட்டு மறைந்தார். பித்தனுக்கு அதுகூட வாய்க்கவில்லை!**

**பித்தனை நினைவுகூருமுகமாக ''களம்'' சஞ்சிகையில் (யூலை-1984) வெளியான இச்சிறுகதையை மறுபிரசுரம் செய்கிறோம்.**

**பித்தனின் புகழ்பெற்ற படைப்பான 'பாதிக் குழந்தை'யுடன் ஒரு விதத்தில் தொடர்புபட்டது இச்சிறுகதை.**

பாம்புக்கு நஞ்சையும் மனிதனுக்கு நெஞ்சையும் படைத்து விட்ட இறைவனின் நாசுக்கான நகைச்சுவையை எந்த அளவுகோல் கொண்டு அளப்பது! எந்தத் தராசு கொண்டு நிறுப்பது?

மனிதன், வாழ்க்கை என்ற இரண்டோடு உலகம் நின்று விடுகிறதா? இல்லையே!

பாவ[illegible]ண்ணியம், நியாயம் அநியாயம், நீதி நேர்[illegible] ஒழுக்கம் என்று எத்தனையோ? இத்தனைக்கும் மேலே இறைவன் அவைகளையெல்லாம் தொகுத்துச் சிந்திக்க நினைத்தால் ஏதோ தொடர்பற்று அறுந்து நிற்கிறதே!

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகக் தெரிகிறது. இவை எல்லாவற்றையும் மிதித்து மேலேறி சற்று உயரத்தில் நின்று கைகொட்டிச் சிரிக்கிறதே ஒன்று அதன் பெயர்தான் மனிதன்.

மனிதன்!

நாடகத்திலே முகத்திற்கு அரிதாரம் பூசிக் கொள்வது போல நெஞ்சுக்கும் அரிதாரம் போடக் கற்றுக் கொண்டவன் மனிதன்!

இலக்கியத்திலே அகமும் புறமும் என்று இருப்பது போல வாழ்க்கையையும் ஆக்கிக்கொண்டவன் மனிதன்!

அந்தரங்கம் புனிதமானது என்கிறார்கள். சில மய[illegible]அது அசிங்கமாகவும் இருக்கிறதே!

இந்த [illegible]எண்ண ஓட்டங்களுக்கு மத்தியிலே எனக்கு உமறு லெப்பை ஹாஜியாரின் ஞாபகம் தான் வந்தது.

உமறு லெப்பை ஹாஜியார் இந்த உலகத்தை விட்டு மறைந்து எட்டு வருசங்கள் ஆகிவிட்டன. என்றாலும் எண்ணூறு ஆண்டுகள் அவருடைய புகழ் நின்று நிலைக்கும் என்பது என்னுடைய எண்ணம் மட்டுமல்ல இந்தக் கிராமத்தவர்கள் எண்ணமும் கூட.

கிராமத்தின் முன்னேற்றம் மக்களின் வாழ்க்கை உயர்வு. இவைகள் உமறு லெப்பை ஹாஜியாரின் புகழுக்குச் சான்று. ஊருக்கு மத்தியிலே தெரிகிறதே அந்தப் பெரிய கட்டிடம், அதுதான் 'சுபைதா மன்ஸில்' இது உமறு லெப்பை ஹாஜியார் விட்டுச் சென்ற ஞாபகச் சின்னம். ஏழைப் பெண்கள் அங்கே கல்வி கற்கிறார்கள். தொழில் பழகுகிறார்கள். அங்கேயே தொழில் செய்து ஒரு நாளைக்கு எட்டுப் பத்தென்று சம்பாதிக்கிறார்கள். இப்பொழுதெல்லாம் பணம் இல்லையென்று பெண்களின் விவாகம் தடைப்படுவதில்லை. குடும்பச் சீர்கேடுகள் நிகழ்வதில்லை. மானமாகவும் மகிழ்ச்சியாகவும் ஏழைகள் வாழ்கிறார்கள்.

ஏழ்மைதான் எல்லாச் சீர்கேட்டுக்கும் காரணம் என்பது எவ்வளவு உண்மை.

"வரும் போது எதையும் கொண்டு வாறதில்ல, போகும் போது எதையும் கொண்டு போறதும் இல்ல தம்பி!''

இப்படி உமறு லெப்பை ஹாஜியார் அடிக்கடி சொல்லுவார். இப்படிச் சொல்லிக் கொண்டே, மனிதர் எவ்வளவு பெரிய பெருமைகளைச் சுமந்து கொண்டு போய்விட்டார்!

நான் மட்டுமல்ல இந்தக் கிராமமே அவரைப் பார்த்து வியந்தது.

ஹாஜியாரின் ஒரு புறத்தைப் பார்த்து நின்று எல்லாரும் வியந்து நின்ற பொழுது அவருடைய மறு புறத்தைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்ட பொழுது நான் அதிர்ந்து போனேன்.

ஹாஜியாரும் நானும் மிக நெருங்கிய நண்பர்கள், பிறப்பிலே முந்திவிட்ட ஹாஜியார் இறப்பிலும் என்னை முந்திவிட்டார்.

அவர் பிறந்த வீடும் நல்ல சொத்துள்ள வீடு, கலியாணத்தின் போதும் ஏராளமான சொத்து வந்து சேர்ந்தது, மனிதர் கொடிகட்டிப் பறந்தார்.

முதல் முறை மக்கத்துக்குப் போன போது நானும் அவரும் ஒன்றாகவே போனோம். இரண்டாவது முறை அவர் மட்டும் போய்வந்தார். அதன் புறகுதான் அவர் வாழ்க்கையிலே அந்த மாற்றங்கள் ஏற்பட்டன!



இரண்டாவது முறை மக்கத்துக்குப் போய் வந்த ஹாஜியார் யாருடனும் அதிகம் பேசுவதில்லை. நடையிலே ஒரு பதனம், பேச்சியே ஒரு அமைதி, இல்லையென்று சொல்லாது கொடுப்பதிலே ஒரு மகிழ்ச்சி. சேர்ந்த பணத்தை மட்டுமல்ல சேரும் பணத்தையும் ஏழைகளுக்குக் கொடுப்பதுதான் அவருடைய வேலையாக இருந்தது.

எட்டு வருடங்களுக்கு முன் ஒரு நாள் இரவு நான் இஷா தொழுதுவிட்டு பள்ளி வாசலிலே இருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். வழியிலே ஹாஜியாரின் வேலைக்காரனைச் சந்தித்தேன்.

''எங்கே ஹாஜியார்? கடைப்பக்கம் காணவே இல்லையே?'' என்றேன்.

''ஹாஜியாருக்குச் சுகம் இல்ல. முதலாளி உங்கள‌க் கூட்டி வரச்சொன்னாரு'' என்றான்.

சுகமில்லை என்று வேலையாள் சொன்னதும், ஹாஜியாரின் வீட்டைநோக்கி வேகமாக நடந்தேன் நான். வீட்டுக்குள் நுழைந்த பொழுது எங்கும் அமைதி நிலவியது. பள்ளி வாசலுக்குள் நுழைவது போன்று ஒரு சுகமான அனுபவம் அது, மென்மையான மல்லிகை மணம் காற்றோடு கலந்து வந்து மனதைச் சிலிர்க்க வைத்தது.

வேலையாள் வழிகாட்ட நான் அந்த அறைக்குள் நுழைந்தேன். அங்கே ஹாஜியார் தரையில் பாய் விரித்துப் படுத்திருந்தார்.

''அஸ்ஸலாமு அலைக்கும்'' என்றேன் நான்.

மெதுவாக கண்விழித்த ஹாஜியார் சலாம் சொல்லியபடி எழுந்து சுவரில் சாய்ந்து ' வாங்க தம்பி!'' என்றார்.

'உடம்புக்கு என்ன ஹாஜியார் ?' என்றேன் நான்.

''உடம்புக்கு எப்பவும் நோய் வந்ததில்லை தம்பி! இந்த மனசுக்குத்தான் சுகமில்லை நெஞ்சு நோவு'' என்றார்.

''நீங்க இப்படித தரையிலே படுக்கிறிங்களே, அப்படி அந்தக் கட்டிலில் படுக்கலாமே என்றேன்.

ஹாஜியாரின் முகத்தில் வழமையான அந்தப் புன்னகை படர்ந்தது.

'இப்ப இருபது வருஷமா இதுதான் தம்பி என்ட படுக்க!'' என்றார்.

அவர் முகத்தில் வேதனை படர்ந்தது.

''நீங்கள் என்னைக் கூப்பிட்டீங்களாம்'' என்றேன் மெதுவாக.

''ஓம் தம்பி உங்களக் கூப்பிட்டன். உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும்'' என்று சொல்லி விட்டு ஒரு பெருமூச்சு விட்டார். சிறிது நேரத்தில் திரும்பவும் தொடர்ந்தார்.

''உங்களுட்ட சொல்லவேணும் தம்பி. இந்த வீட்ட வேலைக்கார இபுராகீமுக்குப் பாதியும், சுலைமானுக்குப் பாதியுமாக எழுதி வைச்சுட்டன்'' என்றார்.

எனக்கு அவருடைய இந்தச் செயல் புதிராகவே இருந்தது!

''விசுவாசமுள்ள வேலைக்காரன் இபுராகீம். அவனுக்கு எழுதுனீங்க சரி, சுலைமானுக்கு ஏன் ஏழுதி வச்சீங்க? அவன்தான் இந்தக் கிராமத்திலேயே அடாவடிக்காரனாச்சே!

எனது இந்தப் பேச்சைக் கேட்டதும் ஹாஜியார் முகத்தைச் சுளித்தார். ஒரு பெருமூச்சு விட்டபடி பிறகு சொன்னார்.

''சுலைமான் சுபைதாவோட வாப்பா அதுக்காகத்தான் தம்பி எழுதி வச்சன்'' என்றார்.

''சுபைதாவா! எந்த சுபைதாவ சொல்லுறீங்க?'' என்றேன்.

''சுபைதாவ உங்களுக்குத் தெரியும் தானே. இருவது வருசத்துக்கு முன்னால இந்த ஊரிலை வேலைக்கு இருந்த புள்ள'' என்றார்.

நெற்றியைச் சுருக்கியபடி யோசித்தேன், ஞாபகம் வந்தது. ஹாஜியார் வீட்டில் வேலைக்கு இருந்த பெண்! நடத்தை கெட்டு கர்ப்பமாகி ஊரைவிட்டுத் துரத்தினார்களே!

''அந்த சுபைதாவா?'' என்றேன் ஆச்சரியத்தோடு.

ஹாஜியார் தலையை அசைத்தபடி பேச்சைத் தொடர்ந்தார்.

கலியாணமாகாத வயசுப்பெண் வயிதில உண்டாயிட்டுது. அதப்பார்த்து இந்த ஊரே திரண்டு வந்தது. நானும் ஊரோடு சேர்ந்து சுபைதாவ துரத்தினன். சுபைதாட வயித்துல வளர்ந்தது என்னுடைய குழந்த என்பது யாருக்கும் தெரியாது. ஊருக்கு மறைச்சன் ஆண்டவனுக்கு மறைக்க முடியுமா?''

இந்த இடத்தில் பேச்சை நிறுத்தி விட்டு செஞ்சைத் தடவினார். பிறகு தொடர்ந்தார்.

என்ட கதையைக் கேட்டதும் உங்கட நெஞ்சு படபடக்கிறது எனக்குத் தெரியும் தம்பி! உம்.... என்ன செய்ய? நல்லதும் கெட்டதும் சேர்ந்து தான் இந்த உலகம். ஜமா அத்து தொழுகை, நோன்பு, சாகத்து, ஹஜ் இதுகளச் செய்தா மட்டும் ஒருவன் நல்லவனாகி விடுவானா? இந்த நப்சி இருக்குதே அதுதான் நம்பட மனசு. இதக் கட்டுப்படுத்த வேணும் தம்பி! மனசு சுத்தமில்லாட்டா ஈமானுக்கு அதுல இடமில்ல.

ஹாஜியார் சிறிது நேரம் மௌனமாக இருந்நதார். பிறகு, என்ட மனதைத் தொறந்து உங்களுட்ட சொல்றன் தம்பி! அப்பதான் இந்தப் பாரம் குறையும். இருபது வருஷத்துக்கு முன்னால ஒரு இரவு பத்து மணிக்கு மேல நான் ஊட்டுக்கு வந்தன். சுபைதா மண்டபத்துக்குள்ள படுத்திருந்தா, அவ படுத்திருந்த மாதிரியப் பார்த்ததும் என்ட மனசுக்குள்ள சைத்தான் பூந்திட்டான், நான் மிருகமாயிட்டன். அவ மைத்தாகிட்டா. அதுக்குப் பிறகு எத்தனையோ சம்பவங்கள், ஒரு நாள் இந்த ஊராக்களோட சேர்ந்து சுபைதாவ இந்த ஊரஉட்டே துரத்தினன்.

இதைச் சொல்லிவிட்டு ஹாஜியார் கண்ணீர் வடித்தார். நான் அவரையே பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தேன்.

''நான் இந்தப் பாவத்துக்கு மன்னிப்புக் கேட்கத்தான் தம்பி இரண்டாவது தடவயா மக்கத்துக்குப் போனேன். அங்கே போனதில என்ட பாவம் அழிஞ்சு போச்சுதா தம்பி! என்ட மனசு அத ஒப்புக்கொள்ளல, இந்த இருவது வருஷமா நானும் செய்யாத நன்மை இல்ல, எல்லாம் செஞ்சு பார்த்தன். கணக்குத் தீர்ந்தபாடில்லை. உம்...! எப்படியெல்லாம் மனிதன் பாவம் செய்றான் இதுக்கெல்லாம் எப்ப கணக்குத் தீர்க்கப் போறாங்களோ?''

ஹாஜியார் இந்த இடத்தில் பேச்சை நிறுத்தி விட்டு நெஞ்சைத் தடவிக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில திரும்பவும் தொடர்ந்தார்

வெளிச்சம் போட்டு வாழ்ரத நான் எப்பவும் விரும்பினவனில்ல தம்பி! அன்றைக்கு ஊருக்கு முன்னால நானும் கொஞ்சம் வெளிச்சம் போட்டுட்டன்! வெளிச்சம் கண்ணத்தான் கூசும், ஆனால் நான் போட்ட வெளிச்சம் இருக்குதே அது என்ட மனசக் கூச வைச்சுட்டுது தம்பி! இந்த இருவது வருஷமா எனக்குப் பொழுது விடிஞ்சதுமில்ல, பொழுது சாஞ்சதுமில்ல, என்னவோ இன்டைக்குத்தான் என்ட மனசுக்குக் கொஞ்சம் தெம்பு வந்திருக்கு.

ஹாஜியார் நன்றாகக் களைத்துப்போய்விட்டார். நெற்றியில் வியர்வை துளிர்த்தது. அசதியோடு கண்ணை மூடிக்கொண்டு சாய்ந்திருந்தார்.

ஹாஜியார் தூங்கட்டும் என்று எண்ணியபடி நான் இருப்பிடத்தை விட்டு மெல்ல எழுந்தேன். ஹாஜியார் கண்விழித்துக் கொண்டார்.

கொஞ்சம் அசதியாக இருந்தது தம்பி! கண்ண மூடிட்டன்'' என்றார்.

''உங்களுக்கு ஓய்வு தேவை நன்றாகத் தூங்குங்கள்'' என்றேன்.

''எனக்கில்ல தம்பி! என்ட மனசுக்கு ஓய்வு வேணும். இந்த இருவது வருஷமா என்ட மனசு நல்லா அலைஞ்சு அலுத்துப் போச்சுது, சரி தம்பி! நல்லா நேரமாச்சுது, நீங்க ஊட்டுக்குப் போங்க, நாளைக்குச் சந்திப்பம்'' என்றார்.


குழம்பிய மனதோடு நான் வீட்டை நோக்கி நடந்தேன்.

மறுநாள் பொழுது விடிந்தது! ஆனால் உமறு லெப்பை ஹாஜியாருக்கு விடியவில்லை, அவர் இந்த உலகத்தைவிட்டுப் போய்விட்டார்.

**பித்தன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மதங்கள்: விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவையா?

அருண்

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இலங்கை விஜயத்தோடொட்டி பல நல்ல காரியங்கள் நடந்து வருகின்றன.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாடு காணப்பட்டிருப்பது; வடக்கிலிருந்து கொழும்பு வரும் பயணிகள் பாதுகாப்பாக வருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது என்பன அரசியல் ரீதியான முக்கிய விடயங்கள்.

கொழும்பில் மூலை முடுக்கெல்லாம் துப்பரவு செய்யப்படுவது துரித கதியில் பாதைகள் சீர் செய்யப்படுவது என்பவற்றுடன் பலகாலமாக கவனிப்பாரற்று சீரழிந்து போய்க் கொண்டிருந்த காலி முகத்திடல் புனரமைக்கப்பட்டு அழகான மேடையொன்றும் தயார் செய்யப்பட்டு வருகிறது.

தமிழர்கள் வாழ்கனற, கொட்டாஞ்சேனையையும் அதை அண்மித்துமுள்ள பகுதிகளிலுள்ள வீடுகளில் திரும்பவும். பொலிஸ் நிலையங்களில் பதியப்பட்டவர்கள் மட்டும் தான் இருக்கின்றார்களா என பொலிஸாரால் பார்க்கப்படுகின்றன.....

இதேவேளை பாப்பரசரின் சர்ச்சைக்குரிய நூலான 'Through the Thireshold of hope' (நம்பிக்கையின் நுழைவாயிலினூடாக) இல் பௌத்த மதம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கருத்துக்கள் இலங்கையின் பௌத்த மத குருமார்கள் மத்தியில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதால், அவரது வருகையின் போது ஏதாவது எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது.

பாப்பரசர் அவர்களது நூலில் பௌத்த மதத்தை ஒரு 'அவநம்பிக்கைவாத' தன்மை கொண்ட மதமாக வர்ணிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இது பௌத்த மதத்தை அவமதிக்கும் ஒரு கூற்று என்று பௌத்த பீடாதிபதிகள் தெரிவிக்கின்றனர். பாப்பரசர் தனது இக்கூற்றுக்கு மன்னிப்பு கோர வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போலிஸ் மொழியில் எழுதப்பட்ட பாப்பரசரின் மேற்படி நூல் ஆங்கில மொழி வழியாக இலங்கை பௌத்த மதத்தினருக்கு வந்தடைந்தபோது ஏற்பட்டிருக்கக் கூடிய மொழி பெயர்ப்புத் தவறுகளை கணக்கிலெடுத்து, பாப்பரசருக்கு பௌத்த மதத்தை அவமதிக்கும் நோக்கம் ஒருபோதும் இருந்ததில்லை என்ற அடிப்படையில் அவரை பௌத்த மதத்தினர் அணுகவேண்டும் என்று கிறிஸ்தவ மத தலைவர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, பாப்பரசரின் மேற்படி நூல் தொடர்பாக பௌத்த மதபீடங்கள் எழுப்பியுள்ள கேள்விகளையடுத்து, பாப்பரசரின் வத்திக்கான் அலுவலகத்திலிருந்து அவரது செயலாளரான காடினல் ஏஞ்சலோ அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில், பாப்பரசரின் கூற்று பௌத்த மதத்தலைவர்களை புண்படுத்தியிருந்தால், அதற்காக மனம் வருந்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், இவ்வறிக்கை பாப்பரசரால் நேரடியாக தெரிவிக்கப்படாததால் பௌத்த மத தலைவர்களுடைய அதிருப்தியை போக்கிவிட முடியவில்லை. அவர் நேரடியர்கவே தமது நூலிலுள்ள குறிப்புகட்காக மன்னிப்புக் கோர வேண்டுமென பௌத்த மத தலைவர்கள் கோருகின்றனர். பாப்பரசரின் செயலாளரது அறிக்கை பற்றி கருத்து தெரிவித்த பௌத்த மத ஸ்தாபனங்களின் கூட்டு அமைப்பின் தலைவரான கலகே புண்ணியவர்தன கருத்து தெரிவிக்கையில், இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் மனவருத்தச் செய்தி ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதில்லை. ஏனென்றால், பாப்பரசர் . தனது நூலில் தெரிவித்துள்ள பௌத்த மதம் குறித்த தவறான வியாக்கியானங்கள் இதனால் மீளப் பெறப்படவில்லை; மாறாக வெறும் கவலை மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது' என்று தெரிவித்தார்.

பாப்பரசர் நேரடியாகவே மன்னிப்பு கோரவேண்டும் எனக் கோருவது - உண்மையில் அவர் தவறு செய்தவரா என்று கூட பார்க்காமல் கோருவது நியாயமானதல்ல என்றும், கிறிஸ்தவ மதம், யேசு கிறிஸ்து தொடர்பாக எல்லாம் பௌத்த பீடங்கள் உண்மைக்கு முரணான, அவதூறான வார்த்தைகளை பல தடவைகள் குறிப்பிட்டிருந்த போதும், கிறிஸ்தவ மதத்தினர் ஒரு போதும் இவ்வாறான ஒரு பகிரங்க மன்னிப்பு கோரலை செய்யுமாறு கோரியதில்லை என்று கிறிஸ்தவ மதப்பிரிவினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுபற்றி மேலும் கருத்து தெரிவித்துள்ள Archbishop கலாநிதி மார்க்கஸ் பெர்ணாண்டோ அவர்கள், பாப்பரசர் அவர்களது வருகையின் போது எல்லாம் நல்ல முறையில் நடக்கக்கூடிய விதத்தில் எம்மிடையே சகோதரத்துவம் நிலவும் ஒரு சூழலை உருவாக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

எல்லா மதங்களும் நல்லவற்றையே போதிக்கின்றன. வெறுப்புணர்வுக்கு எந்த மதத்திலும் இடமில்லை. எமது நாட்டின் இன, அரசியல் மற்றும் பிரச்சினைகளால் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் பிளவு மேலும் மதத்தினால் வலுவடைந்து விடக்கூடாது! என்றும் அவரது அறிக்கை கோரியுள்ளது.

பௌத்த மதத்தினரை பெரும்பான்மையினராகவும், பௌத்த மதத்தை அரச மதமாக்வும் கொண்ட ஒரு நாட்டிற்கு பாப்பரசர் விஜயம் செய்யும் இந்நிலையில் இவ்வாறானதொரு நிலை தோன்றியிருப்பது அரசுக்கும் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

ஏதாவது, கறுப்புக்கொடி அது இதென்று ஏடாகூடமாக நடந்து விடக்கூடாது என்பதில் அது மிகவும் கவனமாக உள்ளது. பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டிருப்பதும், இத்தகைய நடவடிக்கைகள் பற்றி அவர்கள் உஷார்படுத்தப்பட்டிருப்பதும் குறித்து கிறிஸ்தவ மதத் தலைவர்கள் திருப்தி தெரிவித்துள்ளனர்.

இருவேறு மதநம்பிக்கை உள்ளவர்கள் தத்தமது மதங்கள் உயர்வானவை என்று கருதுவதற்கு உரிமையுள்ளவர்கள்தான். ஆனால் பிறமதங்களை கொச்சைப்படுத்துவது, பிறமதத்தினரின் மனதைப் புண்படுத்தும் செயல் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பாப்பரசர் பிறமதங்கள் பற்றி அபிப்பிராயங்கள் சொல்லும் போது அவதானமாக இருந்திருக்க வேண்டும். எல்லா மதங்களும் மக்களுக்கு வழிகாட்டுவதாக நம்புபவர்கள் மட்டுமல்ல, அவர்களை மந்தைகளாக்கி விடுகின்றன என்று நம்புபவர்களும் கூட இந்த உலகில் இருக்கிறார்கள். எனவே மதத்தலைவர்கள் தமது மதம் பற்றி மட்டும் பேசிக் கொள்வதுடன் நின்று கொள்வது மட்டுமே, யாரையும் புண்படுத்தாமல் இருக்க உதவும். பௌத்த மதத்தலைவர்கள் பிறமதங்கள் தொடர்பாக குறிப்பிடும் கருத்துகட்கும் இது பொருந்தும். சில காலங்களுக்கு முன்பு பள்ளிவாசல்களில் ஒலிக்கும் குர் ஆன் ஓதல் பற்றி இவர்கள் தெரிவித்த அபிப்பிராயங்களும் இவ்விடத்தில் நினைவு கூரப்படக்கூடியவை.

இந்த ஜனநாயக உலகில் மதங்கள் மட்டும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவையாக கருதப்படுவது எந்த வகையில் நியாயமானது? மதநம்பிக்கை ஒரு ஜனநாயக உரிமையானால், அவற்றின் மீதான விமர்சனங்களும் ஒரு ஜனநாயக உரிமை தானே? விமர்சனங்களை விமர்சனங்களால் எதிர்கொள்வதற்குப் பதில் வேறு வழிகளில் அவற்றை எதிர்கொள்வது எந்த வகையில் நியாயமானது?

# அ.உ.த. ஆராய்ச்சி மாநாடா? அ.தி.மு.க. பிரச்சார மாநாடா?

எட்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு என்ன நடந்தது?

இலங்கைத் தமிழ் மக்களின் முகங்களில் கரி பூசியது போல, இங்கிருந்து மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற பேராளர்களைத் திருப்பி அனுப்பி வைத்திருக்கிறது தமிழக அரசு.

இலங்கையிலிருந்து சென்ற பேராளர்களை நிழல் போல் தொடர்ந்த பொலிஸார், மாநாடு தொடங்குவதற்கு முதல் நாள் நள்ளிரவு அவர்கள் தங்கியிருந்த அறைக் கதவைத் தட்டி 'உங்களது விசாரத்துச் செய்யப்பட்டுள்ளது; நீங்கள் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது' எனக் கூறி திருப்பி அனுப்பி வைத்துள்ளனர்'.

பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம் தான் இவர்கள் திருப்தி அனுப்பப்பட்டதாக ஒரு ஊகம் நிலவுகிறது.

பாதுகாப்புக்கு இவர்கள் எப்படிக் குந்தகமாக இருந்தார்கள் என்பது திருப்பி அனுப்பிவைத்த 'கடமை வீரர்களுக்குத்' தான் வெளிச்சம்!

இலங்கைப் பேராளர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதை பத்திரிகையில் படித்துக் கொண்டிருந்த சக ஆசிரியர் ஒருவர் சொன்னார். இந்திய அரசாங்கமும் றோவும் சரியான புத்திசாலிகள் தான் என்று.

ஏன்? - இது நான்

'புலிகள், புலிகளோடு சேர்ந்தவர்களை எப்படி அவர்கள் அனுமதிப்பார்கள்' என்று திருப்பிக் கேட்டார் அவர்.

'அவர்கள் புலிகள் என்று இவர்கள் எப்படிக் கண்டுபிடித்தார்கள்' என்று கேட்டேன் நான்.

அவர் என்னை பரிதாபமாகப் பார்த்து விட்டு சொன்னார் 'பிரபாகரன் வடமராட்சி; சிவத்தம்பியும் வடமராட்சி இது போதாதா றோவுக்கு?

மாநாட்டிற்குப் போன கல்விமான்கள் எல்லோருமே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தவர்கள். 87இலேயே ஐ.பி.கே.எவ் வந்து இறங்கினதே பல்கலைக்கழக மைதானத்திலே தானே?

''பாவம் பேராசிரியர் வேலுப்பிள்ளை. அவருக்கும் அரசியலுக்கும் தொடர்பே இல்லை'' என்று நான் கூறி முடிக்க முன்னமே அவர் குறுக்கிட்டுச் சொன்னார். ''றோ அறிக்கை கொடுத்திருக்கும் பிரபாகரனுடைய அப்பா வேலுப்பிள்ளைதான் இவர் என்று, தடாச்சட்டத்திற்குக் கீழே பிடித்து உள்ளுக்குப் போடாமல் விட்டதே பெரிய விசயம் என்று நினையுங்கோ'' என்றார் அவர்.

'யாழ்ப்பணத்தில் இருப்பது தான் நாங்கள் செய்த குற்றமோ?'' என்று கேட்கிறார் திருப்பி அனுப்பப்பட்டவர்களுள் ஒருவரான பேராசிரியர் சிவத்தம்பி.

பேராசிரியர் சிவத்தம்பி மாநாட்டில் கட்டுரை சமர்ப்பிப்பதற்காக அகில உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுத் தலைவர் ஹரோஷிமாவினுடைய அழைப்பை ஏற்று குடும்பத்தினருடன் தஞ்சாவூர் சென்றிருந்தார். இவர்கள் தங்கியிருந்த தஞ்சாவூர் பல்கலைக்கழக விடுதி கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு மாநாட்டுக்கு முதல் நாளிரவு அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்களுள் பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் அடங்குவர்.

அகில உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இலங்கைக்கிளைச் செயலாளரான துரைராஜா பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'வழமைபோல் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கான விண்ணப்பங்களை தமிழ் நாட்டில் இருந்து பெற்று விநியோகித்தோம். சிலர் நேரிடையாகவும் விண்ணப்பங்களை பெற்றிருந்தார்கள். ஆனால், விண்ணப்பித்தவர்களுக்கு பங்குபற்றுவதற்கான எதுவித அறிவித்தலும் கிடைக்கவில்லை.

நாங்கள் இது தொடர்பாக எழுதிய கடிதங்களுக்கும் இதுவரை பதில் இல்லை. இலங்கைக்கிளையைச் சேர்ந்த சச்சிதானந்தம் தமிழ் நாட்டிலே தற்போது நிற்கிறார். அவர் எடுத்த முயற்சிகளும் பலிக்கவில்லை.

உண்மையிலேயே இலங்கைக் கல்விமான்கள் கலந்து கொள்வதை விரும்பவில்லை என்றால் விசாவை வழங்காமலே விட்டிருக்கலாம். இப்படிக்கூப்பிட்டு அவமதிக்கக்கூடாது என்று மிகுந்த ஆதங்கத்தோடு குறிப்பிட்டார் துரைராஜா அவர்கள்.

நடந்த சம்பவத்திற்கான காரணத்தை

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கிழக்குப் பல்கலைக்கழக ..........

றுகுனு பல்கலைக்கழகம்

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்த்துறை | 1 | | 8 | | 4 | 1 | | | | | | | | | | | | | | |
| சமுகவியல்துறை | 1 | | 6 | 5.4 | | | | | | | | 2 | | | | | | | | 2 |
| புவியியற்துறை | 1 | | 8 | 3.1 | 1 | | | | | | | 1 | | | | | | | 1 | 1 |
| பாளி / பௌத்தத்துறை | | | 1 | 5.2 | 2 | | | | | | | | | | | | | 1 | | 1 |
| பொருளியல்துறை | 1 | | 5 | 2.5 | | | 1 | | 2 | | | 1 | 1 | 2 | | | | 1 | | 1 |

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்த்துறை | 3 | 1 | 5 | | | | | | | | | | 1 | | | | | | | |
| நுண்கலைத்துறை | 1 | | | 2 | | | | | | | | | | | | | | | | |
| புவியியல் துறை | 1 | | 10 | | | | 2 | | | | | | 1 | | 1 | | | 1 | 1 | |
| இந்துநாகரிகத்துறை | 1 | | 5 | 1 | | | | | | | | | 1 | | | | | | | |
| பொருளியல்துறை | 1 | 1 | 8 | 4 | | | | | | | | | 1 | | 1 | | | | | |
| தத்துவத்துறை | | | 3 | 1 | | | | | | | | | | | | | | | | |

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்த்துறை | 1 | 1 | 4 | | 1 | | | | | | | | 1 | | | | | | | 1 |
| சமூகவியற்துறை | 1 | 1 | | 3 3.4 | | | | | | | | | | | | | | | 1 | |
| புவியியற்துறை | 1 | 1 | 4 | 1 | 6 | | | | 1 | | | 1 | | 1 | | | | | 2 | 2 |
| வரலாறு / தொல்பொருள்துறை | 1 | 1 | 3 | 1 3.1 | | | | | | 1 | | | | | | | | | | 1 |
| பொருளியல்துறை | 2 | 2 | 10 | 2.5 | | | 1 | | | | | 1 | | | | | | | | 2 |

களனியப்பல்கலைக்கழகம்

| | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிங்களத்துறை | 1 | 2 | 10 | 2 | 2 | | | | | | | | | | | | | | | |
| நுண்கலைத்துறை | 1 | | 2 | | 1 | | | 1 | | | | | | 1 | | | | | | |
| பாளி / பௌத்தத்துறை | 2 | 1 | [illegible] | 1 | | 3 | | | | | | | | | | | | | | |

* முதுவிரிவுரையாளர் / சிங்களம்
1. உதவிவிரிவுரையாளர்

* முதுவிரிவுரையாளர் / ஆங்கிலம்
1. உதவிவிரிவுரையாளர்

* தற்காலிகம்

## இன்னொரு .........

கின்றனர். இதற்குக் காரணமாக கந்தசாமி அவர்கள் கடந்த ஒரு வருடமாக புளொட் அணியினருடன் முரண்பட்டு இருந்தார் என்றும், குறிப்பாக இறுதியாக நடந்த பொதுத்தேர்தலில் பின் இம்முரண்பாடு வலுவடைந்து இயக்க நடவடிக்கைளில் இருந்து ஒதுங்கி அலுவலகத்திற்கு கூட செல்லாமல் வீட்டிலேயே இருந்தார் என்றும், வேறு சில குழுக்களின் தலைவர்களுடன் தனது அரசியல் எதிர்காலம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார் என்றும், அப்பேச்சுவார்த்தை தொடர்பாக புளொட் இயக்கத்தினர் மறைமுகமாக கண்டித்திருந்தனர் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இக்கருத்துக்களை வன்மையாகக் கண்டித்து புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் விடுத்த அறிக்கையில் இவையாவும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுவரும் தமது இயக்கத்தினர் மீது வெறும் சேறு பூசும் நடவடிக்கையே என்று தெரிவித்துள்ளார்.

இக்கொலை தொடர்பாக அங்கியின் குடும்பத்தாரிடம் கேட்டபோது ''எங்களுடைய மலையே சரிந்துவிட்ட பின்பு யார் செய்தது என்று தேடுவதில் என்ன இருக்கிறது. எஞ்சியுள்ள எமது குடும்பத்தையாவது பாதுகாக்க வேண்டுமல்லவா'' என்று கூறுகின்றனர். ஆயினும் இது திட்டவட்டமான அரசியல் படுகொலையே என்று மட்டும் அவர்கள் கூறுகின்றனர்.

உண்மைதான்! அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறதுதான். அரசியல் முரண்பாடுகள் ஆயுதமுனையில் தீர்க்கப்படுவது தமிழ் மக்களின் கடந்த கால போராட்ட வரலாறு முழுவதிலும் நடந்து வந்த ஒன்று தானே.

கொலைகாரர்கள் ''இந்த இயக்கத்தவர்'' என்று அறியப்பட்டதால், அவை கண்டிக்கப்பட்டதால் மட்டும் அவை எல்லாம் இல்லாமலா போய்விடப்போகிறது. கொலை கலாசாரமே தமிழ் மக்களின் அரசியல் போராட்ட வரலாற்றின் கலாசாரமென்று வரலாறு எழுதப்பட வேண்டும் என்பதற்காகவே தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கும் இயக்க அரசியல்விதிகள் என்றைக்கு புதைக்கப்படுகிறதோ அன்றைக்குத்தான் தமிழ் மக்களுக்கு விடுதலை பிறக்கப்போகும் நாள் ஆரம்பிக்கும் என்பதை மட்டும் சொல்லாம்.

## அ. உ. த.....

அ.உ.த. மன்றத் தலைவர் ஹரோஷிமாவிடம் கேட்டிருக்கிறோம். அவரிடமிருந்து தகுந்த பதில் வரும் என்று எதிர்பார்க்கிறோம். அதேவேளையில், தஞ்சாவூர் மாநாட்டுத் தீர்மானங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. பதிலாக 9வது மாநாட்டை இலங்கையில் நடாத்துமாறு கோர இருக்கிறோம். இது தவிர புறக்கணிக்கப்பட்ட ஈழத்துக் கல்விமான்களை அழைத்து அதற்கு ஈடாகவும், அவர்கள் கட்டுரையைப் படிப்பதற்காகவும் கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்யும் உத்தேசமும் உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

உண்மையிலே இது அ.உ.த மாநாடு அல்ல. அ.தி.மு.க. பிரச்சார மாநாடு என்று குறிப்பிடுவதே பொருந்தும் என்றார் தமிழ் ஆய்வாளர் ஒருவர்.

தமிழகத்தில் வீழ்ச்சியடைந்து வரும் ஜெயலலிதா அரசை தூக்கி நிறுத்தவும், தமிழக தமிழ் மக்களிடையே புத்துயிர் பெற்றுவரும் தமிழ்த் தேசிய உணர்வை தாமே முன்னெடுப்பதாக பாவ்லா காட்டி தமிழ்த் தேசிய இயக்கங்களை நசித்து விடவுமே ஜெயலலிதா லண்டனில் நடக்க இருந்த இந்த எட்டாவது மாநாட்டை தமிழகத்திற்கு இழுத்து வந்தார். இதற்குச் சில கல்வி மான்களும் சோரம் போயிருந்தனர் என்றார் ஒரு அரசியல் அவதானி.

தமிழ்த் தேசிய உணர்வை தாமே முன்னெடுப்பதாக காட்டிக் கொள்ளும் அதே வேளை தேசிய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் தேசத்திலிருந்து வந்தவர்களை மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிப்பதானது தாம் மாநாட்டை நடத்தும் நோக்கத்திற்கு அப்பால் இழுத்து சென்று விடலாம் என ஜெயலலிதா அரசு கருதியிருக்கலாம்.

அதே வேளை இந்திய மத்திய அரசும், புலனாய்வுத்துறையும் கூட போராட்டம் நடக்கும் தேசத்திலிருந்து வரும் இவர்களால் தமது நலன்களுக்குப் பாதகம் விளையும் என்று பயந்திருக்கலாம். அதன் விளைவுதான் இந்த வெளியேற்றம் என்றும் அவர் விளக்கினார். இந்தப் புறக்கணிப்புகள் வெளியேற்றங்கள் பற்றிய சுரணையே இல்லாமல் அரச குழுவின் சார்பில் 11பேர் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுள் த.வி.கூவின் மட்டக்களப்பு எம்.பி.யோசப் பரராஜசிங்கமும் அடங்குவார்.

சரியாக இருபது வருடங்களுக்கு முன்னர் 1974இல் நான்காவது உலக தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்த போது, அச்சம் கொண்ட அரசு படையினருடைய உதவியுடன் மாநாட்டைக் குழப்பியது. 11பேர் உயிர் நீத்தனர்.

இயக்கவிதி ஆயுதப்போராட்டமாயிற்று.

1995இல் தஞ்சாவூரில் இலங்கைத் தமிழ் பேராளர் புறக்கணிப்பு நடந்திருக்கிறது.

இன்னும் இருபது வருடங்களின் பின்பு இயக்கவிதி வரலாற்றில் எதைத்தருமோ?

## மலையக ......

வாழ்வியல் பிரச்சினை. இதில் பின் வாங்குகின்ற ஒவ்வொரு கணமும் அவர்கள் தங்கள் கழுத்தில் மரணக் கயிறு இறுக்கப்பட்டு வருவதை உணர்ந்து கொண்டு வருகின்றார்கள். இதன் வளர்ச்சியில் ஆட்சியாளரின் கைைவிட்டு மட்டுமல்ல, இன்று மலையகத்தில் ஆதிக்கம் செலுத்தி வரும் அரசியல்வாதிகளின் கையை விட்டுக்கூட மலையகம் சென்று விடக் கூடிய நிலை உருவாகலாம். இது விடயத்தில் வடக்கு - கிழக்கின் படிப்பினையை கற்றுக் கொள்ள மலையக அரசியல் வாதிகளும், ஆட்சியினரும் தவறுவார்களேயானால் தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளி போட்டவர்களாக ஆகிவிடுவார்கள்.

## தமிழ்த் தேசியம் .............

செல்வாக்குச் செலுத்தும் என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

அத்துடன் அரசின் அரசியல் கருத்து நிலையில் பௌத்த மதபீடத்திற்கு இருக்கும் செல்வாக்கை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. இலங்கையின் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் மேலாண்மைக்கு அரசியல்வாதிகளும் பௌத்த ஸ்தாபனங்களும் சம பங்காற்றியுள்ளன. ஆகவே இனப்பிரச்சினை அதற்கான தீர்வின் வடிவம் பெருமளவிற்கு பௌத்த மத ஸ்தாபனங்களின் செல்வாக்குக்குட்பட்டே அமையும்.

அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்கள் நம்மவர் மத்தியில் கருத்து மீள்பரிசீலனைக்கான தேவையினை ஏற்படுத்தியுள்ளன. இனவாத அரசியல் அண்மைய தேர்தல்களில் அவ்வளவாக எடுபடவில்லை. இதனால் சிங்கள மக்கள் இனப்பிரச்சினையைத் தீர்க்க தற்போதைய அரசிற்கு வாக்களித்ததாகப் பரவலாக நம்பப்படுகிறது. தற்போதைய அரசின் வெற்றிக்கான பல காரணங்களில் அதன் ''சமாதான மோகமும்'' ஒரு காரணியாக கருதப்படலாம்.

இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்க்கப்பட வேண்டும். இந்தப்போர் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு சமாதானம் நிலவ வேண்டும் என்ற கோஷங்கள் தேர்தல் காலத்தில் உக்கிரமாக முன் வைக்கப்பட்டு தற்போதும் ஓரளவிற்கு பகரப்படுகின்றன.

ஆனாலும் தமிழர் தனது கல்வி, பொருளாதார, சமூக, அரசியல், புவியியல் ரீதியில் தனது இருப்பை ஸ்திரப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்றோ அல்லது எந்த அளவிற்கு தமிழரது அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படும் என்பது பற்றியோ எந்தவித தெளிவான கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. மேலும் கொண்டு வரப்பட வேண்டிய தீர்வு பற்றி பல முரண்பாடான கருத்துக்கள் வெளிப்பட்டதும் நாம் அறிந்ததே.

அத்துடன் ஜனாதிபதிக்கு பௌத்த மத தலைவர்கள் ஆசி கூறி கொடுத்த அறிவுரைகளும் ஜனாதிபதியின் பதவியேற்பு உரையில் வலியுறுத்தப்பட்ட பெரும்பான்மை சிங்கள மக்களின் நலன்களின் பாதுகாப்பு பற்றிய கருத்தும், கருத்தியல் செயற்பாட்டு வடிவம் பெறுவதில் ஏற்படக் கூடிய சிக்கல்களை எடுத்தியம்புகிறது.

ஆகவே இந்த ''சமாதான மோகம்'' அடிப்படையில் ஒரு அரசியல் சுலோகமாகவும் போரை நிறுத்தி போரில் விரயமாகும் பணத்தை மீதப்படுத்தும் முயற்சியுமே அன்றி தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் கருத்தியலாக அடையாளம் காண்பது கடினமாகவே உள்ளது.

அண்மைய தேர்தல் முடிவுகளை வைத்து சிங்கள மக்கள் போரையும் போருக்கு வித்திட்டு வளர்த்து வரும் இனவாத அரசியலையும் புறக்கணித்துள்ளதாக கருதப்படலாம். ஆனால் அவை தமிழரின் சுயநிர்ணய உரிமையை சிங்கள மக்கள் அங்கீகரிப்பதன் வெளிப்பாடு எனக் கருதுவது தவறானதாகும்.

இந்த தேர்தல்களும் பிற்பாடு சிங்கள அறிவியற் சமூகத்தினர் மத்தியில் ஏதோ இப்போது தமது கடமை முடிந்து விட்டதாகவும் இனி தமிழரின் கையில்தான் 'பந்து' உள்ளது என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. ஆனாலும் இந்த குழுவினர் கூட தமிழருக்கு எந்த விதமான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் பெருமளவு மௌனம் சாதிப்பதனை நாம் கருத்திலெடுக்க வேண்டும்.

டொனமூர், சோல்பரி ஆணைக் குழு முதற்கொண்டே அரசியல் மாற்றங்கள் தமிழரின் மத்தியில் அவ்வப்போது பெரிய எதிர்பார்ப்புக்களை வித்திடவே செய்கிறது. அந்த வரிசையில் தற்போதைய எதிர்பார்ப்புக்களையும் சேர்த்து விடலாம் என்றே தோன்றுகிறது.

இனங்கள் ஒடுக்கப்படும் பொழுது அவற்றில் தேசிய எழுச்சி உருவாகுவதும் அது தக்க விதத்தில் தீர்க்கப்படாத நிலையில் அவை தொடர்ந்து உக்கிர நிலையினை அடைவதும் வரலாற்றில் திரும்பத் திரும்ப வரும் நிகழ்வுகள் தான். ஏனெனில் அரசியல்வாதிகள் வரலாறு தரும் பாடங்களைக் கற்றுக் கொள்ளவில்லை.

தமிழ் தேசியம் எந்த ஒரு இனத்திற்கும் எதிரான ஒரு கருத்தியலாக அமைய வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனைய இனங்களினது அபிலாஷைகளையும் கலை இலக்கிய தனித்துவங்களையும் சிறப்புக்களையும் மதிக்கும் ஒரு தேசிய இனமாக அது வளர வேண்டும். அதேவேளை தன்னுள் இருக்கும் பண்பாட்டு உபகுழுமங்களை மதித்து அவற்றை சமதளத்தில் வைத்து அவற்றின் மேம்பாட்டிற்கான பொது முயற்சிகளை எடுக்கும் மனப்பக்குவத்தினை தமிழ் தேசியம் வளர்த்தக் கொள்வது மிக அவசியமானதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தம்பனாவெளி:

# இராணுவ காடைத்தனத்திற்கு ஓய்வில்லை

ஜனவரி முதலாம் திகதி (புதுவருடதினத்தன்று) மட்டகளப்பு தம்பனாவெளி பிரதேசத்தில் இராணுவத்தில் மேற்கொள்ளப்பட்ட பாலியல் பலாத்காரம், வீடுகள், வயல்கள் நாசமாக்கியமை பலபேரை அடித்து நொருக்யமை போன்ற சம்பவங்களை மூடி மறைப்பதற்கான முயற்சிகள் ராணுவ தரப்பில் மேற்கொள்ளப்புட்டு வருகின்றன.

சென்ற வருடம் டிசம்பர் மாதம் 29ம் திகதி தம்பனாவெளி ராணுவ



**என்.சரவணன்**

முகாம் தாக்கப்பட்டதற்கு பழிக்குபழியாகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொப்பேகடுவ கொலைக்கு ஒரு மைலந்தனை (அனுராதபுரம் சம்பவத்துக்கு ஒரு நற்பிட்டிமுனை (1985), என்பது போல தொடர்ச்சியாக பழ்க்குப் பழி சம்பவங்கள் நடந்து வந்துள்ளமை புதிதல்ல. ஆனால் ஒவ்வொரு முறையும் இராணுவத்தரப்பில் பழிவாங்கும் நடவடிக்கைகள் யாவும் பொது மக்கள் மீதே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன - என்பது முக்கியமானது. அந்த வரிசையில் தம்பனாவெளி சம்பவமும் அடங்குகிறது.

தம்பனாவெளி பிரதேசத்தில் காயனடி எனும் பகுதியில் 19 வயது இளம் பெண்ணொருவர் வயதான தந்தையுடன் செங்கலடிக்கு சென்று கொண்டிருந்த போது அந்தப் பகுதிக்குள் பிரவேசிக்க இராணுவத்தினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளவே அசையாமல் நின்றுள்ளனர். பின்னர் இளம் பெண்ணை சோதனை செய்ய வேண்டும் என இழுத்துச் சென்ற பலாத்காரம் செய்துள்ளனர். தகப்பன் கதறிய போது தாக்குதலுக்கு உள்ளானர். இளம் பெண்ணை மீண்டும் தகப்பினிடம் ஒப்படைக்கும் போது அப்பெண்ணிடமிருந்து கிரனைட் ஒன்றை கண்டெடுத்தாகவும் வெளியில் தங்களைப்பற்றி மூச்சுவிட்டால் நடவடிக்கை எடுப்பதாகவும் மிரட்டி அனுப்பியுள்ளார்.

மேலும் அப்பகுதியில் வழல் வாவிகளை நாசம் செய்ததுடன் சில வீடுகளை தீக்கிரையாக்கியுமுள்ளனர்.

அப்பகுதியிலுள்ள பல குடும்பங்களை அடித்துத் துன்பப்படுத்தி ஒரு இடத்தில் குவித்து ஆண்களை மிகவும் பயங்கரமான முறையில் துப்பாக்கிகளால் தாக்கியுள்ளார்கள். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். அவர்களில் 68வயதடைய ஒரு வயோதிபரும், 62வயதுடைய ஒரு வயோதிரும் மோசமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பெண்களை தனியாக அழைத்துச் சென்று கிரனைட் இருக்கிறதா என சொதனை செய்வதாக கூறி ஆடைகளை களையச் செய்துள்ளனர். ஆடைகளை களையாத பெண்களை பலமாக தாக்கியும் இராணுவத்திரே பலாத்காரமாக ஆடைகளை களைந்து இம்சை படுத்தியுமுள்ளனர். சோதனை செய்வதாகக் கூறி உடலில் குறிப்பிட்ட பகுதிகளை அழுத்தியும் வேறு சில சேட்டைகளையும் செய்து தங்களை இம்சைப்படுத்தியதாக சில பெண்கள் தெரிவித்தனர்.

தம்பனாவெளி பகுதியை சூழ்ந்துள்ள ப மாச்சோலை, காயன்காடு, சின்ன கதிர்காமம் போன்ற இடங்களிலும் இத்தகைய சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. மொத்தம் 3 பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டனர்.

3ம் திகதி செஞ்சிலுவை சங்கத்தினர் அதிகாரிகள் முன்னிலையில் மேற்படி பெண்கள் உட்பட பலர் வாக்கு மூலமளித்தனர். ஆனால் 4ம் திகதியன்று இதுபற்றி விசாரித்து இராணுவ நடவடிக்கை (Military Action) எடுக்கப் போவதாக கூறி வாக்குமூலம் எடுக்க வந்த இராணுவ இணைப்பதிகாரியிடம் மேற்படி பெண்கள் பயத்தின் காரணமாக வாக்குமூலமளிக்க முன்வரவில்லை. அப்படியெதும் நடக்கவில்லை என மறுத்துள்ளனர்.(பாதிக்கப்பட்டவர்களின் நலன்கருதி பெயர்கள் பாவிக்கப்படவில்லை)

அப்பெண்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதாகவும் வாக்குமூலமளிதீது ஒத்துழைக்கும் படியும் வற்புத்திய பின்னர் ஒரு பெண் மட்டும் வாக்குமூலமளிக்க முன்வந்தார். அப்பெண்ணின் வாக்குமூலத்தைப் தொடர்ந்து உடனடியாக தம்பனாவெளி இராணுவ முகாமில் இராணுவ அடையாள அணிவகுப்பொன்றை நடாத்திய இணைப்திகாரி அப்பெண்ணை அடையாளம் காட்டக்கோரவே அப்பெண் அணிவகுப்பில் முதலாவது நின்ற நபரையும் மூன்றாவதாக நின்ற நபரையும் அடையாளம் காட்டியுள்ளார்.

பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டதாக அடையாளம் காட்டப்பட்ட இருவரையும் விசாரணை செய்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதாக கூறுயுள்ளார்.

இருந்த போதும் இறுதியாக கிடைத்த தகவல்களின் படி சம்பந்தப்பட்ட பெண்ணின் உடன்பாட்டோடே உடலுறவில் ஈடுபட்டதாகக் கூறி இதனை கற்பழிப்பு இல்லை என நிருபிப்பதற்கான முயற்சிகள் இராணுவத்தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளிவருகின்றன.

பாதிக்கப்பட்ட ஒரு வயோதிபத் தாய் இப்படிச் சொன்னார்.

''எவனோ ஒருவன் இவன்களை தாக்கினான் என்றால் தைரியமாக அவனோடு மோத வேண்டியது தானே. முதுகெலும்பில்லாத காடையர்கள் எங்களிடை பெட்டைப் பிள்ளையள்ளயெல்லே தங்கட வீரத்த காட்டினாங்க ...தூ''

## இராணுவ வேட்டைக்கு இரு மீனவர்கள்

கடந்தவாரம் நாவற்குடா கடற்பிரதேசத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இரு மீனவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொலப்பட்டனர்.

மட்டக்களப்பில் சில கரையோர பிரதேசங்களில் இரவில் மீன்பிடிதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வனுமதிக்கேற்ப மீன்பிடிப்பவர்கள், இராணுவத்தினரால் இடைக்கிடை 'தவறுதலாக' கொல்லப்படுவது வழக்கமான விடயம். இவ்வாறு கொல்லப்பட்ட மீனவர்களைப் புலிகள் என்றும் இராணுவம் அறிவிப்பதுண்டு.

கடந்த வாரம் நடைபெற்ற சம்பவம் தவறுதல் என்று அறிவிக்கப்பட்ட போதும் அது நிகழ்ந்தேறிய முறை சற்று வித்தியாசமானது.

இரு மீனவர்களும் வலைவீசிக் கொண்டிருந்த போது விளக்கு அணைந்து விட்டிருக்கிறது. கரையோரமாக காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் இவர்களை அழைத்திருக்கின்றனர். ''அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்'' என்று மீனவர்களிடம் வினவப்பட்டிருக்கிறது. வலை வீசிக் கொண்டிருந்த போது விளக்கு அணைந்து விட்ட விடயத்தைக் கூறவே இராணுவத்தினர் மீனவர் இருவரையும் போகும் படி கூறியிருக்கின்றனர். சிறிது தூரம் அவர்கள் சென்றதும் அவர்களை நோக்கி இராணுவம் பின்னாலிருந்து சுட ஆரம்பித்திருக்கிறது.

இறந்த மீனவர்கள் இருவரது உடல்களிலும் ஏறத்தாழ 96 ரவைகள் பாய்ந்த துளைகள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இரு மீனவர்களும் இதற்கு முன்னர் காத்தான் குடியில் மேசன் தொழில் செய்து பிழைப்பு நடத்தியவர்கள் என்றும் சுடப்பட்ட இரவு ஒரு முகாமைத் தாக்குவது போல் அதிக நேரம் வேட்டுகள் தீர்க்கப்பட்டதாகவும் கரையை அண்டி வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர். இது போன்ற உயிர் வாங்கும் சம்பவங்களைத் தவிர அடையாள அட்டை பெறும் வயதை அடைந்திராத பெண் பிள்ளைகளை வாகனங்களில் இருந்து பிடித்து செக்பொயின்ரில் நிற்க வைத்தல், காரணம் இன்றி இளைஞர்களைத் தாக்குதல் போன்ற சீரியஸான பகிடிகள் செய்பவர்களாகவும் இராணுவத்தினர் கிழக்கில் பரிணமித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஒலுவில் ..........

அமைத்த விடயம். இதன் கதாநாயகன் அமைச்சர் அஷ்ரப் அவர்கள். இவரின் சகாக்கள் முஷ்லிம் காங்கிரஸ்சின் சிரேஷ்ட உறுப்பினர்கள் என்ற போதிலும் துறைமுகம் அமைப்பதற்கு முன்னரே ஆயிரக்கணக்கான விளம்பரங்கள், மூன்று மாதகாலத்திற்குள் துறைமுகம், மூன்று மணித்தியாலங்களுக்குள் கல்முனையில் இருந்து கொழும்பை அடைவதற்கான நவீன வீதி அமைத்தல் போன்ற புனிதமான பேச்சுக்கள். இதனைக் கேள்விப்பட்ட அஸ்கிரிய தேரோ சீறி எழுந்தார். கல்முனையில் உள்ள தலைவரின் நெருங்கியவர்கள் 'கேட்டால்' கிடைக்கும் என நினைத்து உமிழ்நீர் சுரந்தனர். கட்சியில் புதிதாகச் சேர்ந்த போராளிகள் ஏன் ஆயுதங்களைக் கூட கப்பலில் கொண்டு வரலாம் என்றனர். இப்போது என்ன நடந்தது. துறைமுகம் அனுமதிக்கப்பட்டு விட்டது. கப்பல் வருவதில்லை. ஏனெனில், கப்பல்களுக்கு ஒரு தன்மானப்பிரச்சினை. எங்களைப் போன்ற சிறிய கப்பல்களெல்லாம் ஒலுவில் போன்ற சர்வதேச துறைமுகங்களுக்கு எப்படிச் செல்வது?

முஸ்லிம் அரசியல், இன்னும் பக்குவப்படாத முஸ்லிம் அரசியல் தலைமை, இந்த அரசியல் எத்தனை நாளைக்கு இப்படிப் பொய்யையும் புரட்டையும் சொல்லி ஏமாற்றும்? இது இறுதியாக சொல்லும் நான் ஒலுவிலில் துறைமுகம் கேட்கவில்லை. ஐஸ்வாடியொன்று தான் கேட்டேன் என்று. ஏனென்றால், ஏற்கனவே முஸ்லிம் அமைச்சைக் கோரவில்லை, முஸ்லிம் திணைக்களத்தைத்தான் கேட்டதென்று கூறிவிட்டது.

இறுதியாக, இந்த வெட்கம் கெட்ட முஸ்லிம் அரசியல் மீது சத்தியமாக, ரோசம் கெட்ட முஸ்லிம் அரசியல் மீது சத்தியமாக இது முஸ்லிம்களுக்கு எந்த விடுதலையையும் பெற்றுக் கொடுக்க மாட்டாது.

## மலையகத்தில் ..

மலையக இளைஞர்கள் ஏன் கைது செய்யப்படுகின்றார்கள்?

எந்தச் சட்டத்தின் கீழ் எங்கே தடுத்து வைக்கப்படுகிறார்கள்?

இவர்கள் மீதான் குற்றச்சாட்டு என்ன?

இவர்கள் எப்போது நீதிமன்றத்தில் ஆஜராக்கப்படுவார்கள்?

இவர்களது உயிர், உடல் பாதுகாப்புக்கு உத்தரவாதம் என்ன?

என்ற விடயங்கள் பற்றி எவரும் குரல் எழுப்புவதில்லை.

## பேராசிரியர் வித்தியானந்தன் நினைவரங்கு

94' ஜனவரி 16 திங்கள் காலை 9 மணிக்கு

வெள்ளவத்தை இராமகிருஷ்ண கலந்துரையாடல் மண்டபத்தில்

**தலைமை:** பேராசிரியர் தில்லைநாதன்

**ஆய்வுக் குறிப்புரை:** பேராசிரியர் கா.சிவத்தம்பி
(பொருள்: வித்தியானந்தன் பாரம்பரியம் - கலை இலக்கிய வரலாற்று நோக்கு)

**தொடர் குறிப்புரை:** திரு.க.சண்முகலிங்கம்

**ஏற்பாடு:** வித்தியானந்தன் நினைவுக்குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்